# வருடாந்த அறிக்கை

2013

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை**

வருடாந்த அறிக்கை 2013

© ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

அமைப்பு மற்றும் பிரத்தியேக வடிவமைப்பு

Kalawa Group

இல. 1A-3/2, தர்மராஜ மாவத்தை,
ஓப் எல்பிரட் எவன்யு,
கொழும்பு 03.
தொ.பேசி: 071 224 11 00 | 011 208 11 88

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

**வருடாந்த அறிக்கை 2013**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
1ம் மாடி, தொழிற் செயலகம், கொழும்பு 05.
தொ.பேசி: 011-2581704 | தொ.நகல்: 011-503917
மின்னஞ்சல்: dgmadminetfb@sltnet.lk | இணையத்தளம்: www.etfb.lk

## பொருளடக்கம்


84 நிறுவனத் தகவல்

பணிப்பாளர் சபை மற்றும் சபை சிரேஷ்ட முகாமைத்துவம் 85

90 எமது தொலைநோக்கு, இலக்கு மற்றும் விழுமியங்கள்

நிதியியலின் முக்கிய கட்டங்கள் 92

94 சாதனைகள் 1981 - 2013

நிறுவன மீளாய்வு 96

97 நிறுவனக் நற்பரிபாலனம்

தலைவரின் மடல் 100

101 பணிப்பாளர் சபையின் அறிக்கை

பிரதான செயற்பாடுகள் 102

108 நிதிக் கூற்று 2013

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் 125

136 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 148

240 புள்ளிவிபர இணைப்பு


brother

# நிறுவனத் தகவல்

ஊழியர் நம்பிக்கை நிதியமானது 1981 ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் திகதி 1980 ஆம் ஆண்டின் ETF (ஊநநி) 46 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. ஊழியர் நம்பிக்கை நிதிச் சபையானது நிதியினை நிர்வகிப்பதோடு தற்போது சபையானது நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றது. கௌரவ அமைச்சர் அவர்களால் அரச வர்த்தமானியில் குறிப்பிடப்படும் எல்லா அரச மற்றும் தனியார் துறையிலுள்ள எந்தவொரு வகுப்பினருக்கும் அல்லது வகைப்பிரிவினருக்கும் சட்ட விதிகள் பிரயோகிகக்கப்படலாம் சுயதொழில் புரிவோர் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களும் தமது சுயவிருப்பின் பேரில் நிதியத்தில் பங்குபற்றி உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளலாம். தற்போது நிதியத்தில் 72,145 தொழில்கொள்வோரினால் உள்ளடக்கப்பட்டுள்ள அண்ணளவாக 2.2 மில்லியன் செயற்படு உறுப்பினர்கள் உள்ளனர். 2013 ஆம் அண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியன்று உறுப்பினர்களின் நிதியின் பெறுமதி அண்ணளவாக ரூபா 174 பில்லியன்களாகும். ETFB இன் செயற்பாடுகளை பன்முகப்படுத்துவதற்கும் உறுப்பினர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கும் 1995ஆம் ஆண்டு ETFB ஒரு கிளை வலையமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.

## சபையின் குறிக்கோள்கள்

அ) பணியாளர் உரிமையை ஊக்குவித்தல், ஊழியர் நலன், கடன் மற்றும் முதலீட்டுப் பங்களிப்புகள் ஊடாக பொருளாதார ஜனநாயகம்

ஆ) நிறுவனங்களில் சமபங்கு வட்டியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் முகாமைத்துவத்தில் ஊழியர் பங்களிப்பினை ஊக்குவித்தல்

இ) ஊழியர்கள் ஓய்வு பெறும் போது பங்களிப்பல்லாத நலன்களை வழங்குதல் மற்றும்

ஈ) மேலே பந்திகள் (அ), (ஆ) மற்றும் (இ)களில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களிற்குத் தேவையான ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

## பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்

2013ஆம் ஆண்டின் இறுதியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை பின்வருமாறு:

**திரு. கே.எம்.ஏ. கொடவத்த**
தலைவர்/ பி.நி.அதிகாரி
கௌரவ நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. ஜீ. திஸ்ஸகுட்டியாரச்சி**
செயற்பாட்டுப் பணிப்பாளர்
கௌரவ நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. பீ. ஏ. எஸ். பண்டித்தரத்ன**
பணிப்பாளர்
கௌரவ நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. யூ. எஸ். அபேரத்ன**
பணிப்பாளர்
கௌரவ நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திருமதி டீ.எல்.யூ. பீரிஸ்**
2013 ஜனவரி முதல் ஏப்பிரல் வரை
பணிப்பாளர்
திறைசேரிப் பிரதிநிதி

**திரு. ஏ. குமாரசிறி**
2013 மே முதல் நவம்பர் வரை
பணிப்பாளர்
திறைசேரிப் பிரதிநிதி

**திருமதி ஜீ.எல்.டீ. தகநாயக்கா**
பணிப்பாளர்
வர்த்தக அமைச்சின் பிரதிநிதி

**திரு. சீ.எல்.கே.பீ. ஜயசூரிய**
பணிப்பாளர்
இலங்கை பணிகொள்வோர் கழகத்தின் பிரதிநிதி

**திருமதி தீபா வீரசூரிய**
சபைக் காரியதரிசி

**திரு. ரஞ்சித் ஹெட்டியாரச்சி**
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

2013ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையில் வேறு எவ்வித மாற்றங்களும் இல்லை.

## சிரேஷ்ட முகாமைத்துவம்

2013ஆம் ஆண்டின் இறுதியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகள் பின்வருமாறு வகிக்கப்பட்டன:

**திரு. கே. எம். ஏ. கொடவத்த**
தலைவர்/ பி.நி.அதிகாரி

**திரு. ஜீ. திஸ்ஸகுட்டியாரச்சி**
செயற்பாட்டு பணிப்பாளர்

**திரு. ஜே.எம்.எஸ்.பி. உடுகம**
பதில் மேலதிக பொது முகாமையாளர்
*(திரு. எம். சீ. எச். குணரத்ன 2013 நவம்பரில் விலகியுள்ளார்)*

## பிரதிப் பொது முகாமையாளர்கள்

| | |
|---|---|
| **திருமதி. ஆர். என். குணசேகர** | (முதலீடுகள்) |
| **திரு. ஜே. எம். எஸ். பி. உடுகம** | (பங்களிப்பு நிதி சேகரித்தல் மற்றும் பணிகொள்வோர் உறவுகள்) |
| **திரு. டப்ளியூ. எஸ். திசாநாயக்க** | (அங்கத்தவர் சேவைகள்) |
| **திரு. எல்.எச். நிஹால்** | (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்) |
| **திரு. கே.எஸ். வெலிவிட்ட** | (உள்ளகக் கணக்காய்வு) |
| **திரு. என்.டப்ளியூ. விமலவீர** | (நிதி) |

## உதவிப் பொது முகாமையாளர்கள்

| | |
|---|---|
| **திரு. சீ. மல்லிகாரச்சி** | (அங்கத்தவர் கணக்குகள்) |
| **திரு. எச்.எம். செனெவிரத்ன** | (அங்கத்தவர் சேவைகள்) |
| **திரு. டப்ளியூ. சூரியஆரச்சி** | (வினைப்படுத்தல்) - பிராந்தியம் *i* |
| **திரு. ஏ.ஜே.எம்.எஸ். ஜயசுந்தர** | (வினைப்படுத்தல்) - பிராந்தியம *ii* |
| **திரு. எம்.எஸ். திசாநாயக்கா** | (வினைப்படுத்தல்/ சுய தொழில்) |
| **திரு. எம்.ஏ.கே. அளுத்கமகே** | (நிதி) - பதில் |

# சிரேஷ்ட முகாமைத்துவம்







### திருமதி. ஆர்.என். குணசேகர
பிரதிப் பொதுமுகாமையாளர்
(முதலீடு)

சபையின் பிரதிப் பொதுமுகாமையாளரான (முதலீடு) 34 வருட அனுபத்தினைக் கொண்ட இவர் சபையில் பொறுப்பான பதவியொன்றை வகிக்கின்றார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சான்றிதழ் பெற்ற வர்த்தகக் கணக்காளர் என்பதுடன் இலங்கை கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் உறுப்பினரும் ஆவார்.

### திரு. டபிள்யு.எஸ். திசாநாயக்க
பிரதிப் பொதுமுகாமையாளர்
(உறுப்பினர் சேவை)

பிரதிப் பொதுமுகாமையாளர் (உறுப்பினர் சேவை) மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் தகுதிச் சான்றுத் தேர்விலே சித்தியடைந்தவா இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட வணிகம் மற்றும் நிதி நிர்வாகத்துறையில் பட்டப்பின் டிப்ளோமா பெற்றுள்ளதுடன் வணிகம் மற்றும் நிதி நிர்வாகத்துறையில் நிறைவேற்று டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சான்றிதழ் வணிக கணக்காளர் (CBA)இல் உறுப்பினரும் இலங்கை கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினரும் ஆவார். இவர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் முன்னாள் தலைமைக் கணக்காளர் மற்றும் அதிவேக போக்குவரத்து கம்பனியின் இயக்குநர் சபையின் முன்னாள் உறுப்பினர் ஆவார்.

### திரு. எல்.எச். நிஹால்
பிரதிப் பொதுமுகாமையாளர்
(நிர்வாகம் மற்றும் மனிதவளம்)

2009 இலிருந்து சபையின் பிரதிப் பொதுமுகாமையாளரான (A & HR) இவர் ஜயவர்த்தன பல்கலைக் கழகத்தின் வணிக நிர்வாகத்தில் பட்டதாரி ஆவார். NIBM இன் கிளை வங்கியிலில் மனிதவள முகாமைத்துவத்தில் டிப்ளோமா பெற்றுள்ளார். இவர் IPM – SL இல் காப்பரேட் உறுப்பினர் மற்றும் AHRP – SL இ IPMA-CP- Alexandria ஆகியவற்றின் தொழில் முறையான உறுப்பினர் ஆவார். இவர் தொழிற்சாலை சூழலில் வங்கி மற்றும் சேவைகள் பிரிவில் மனிதவள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத் துறையில் 29 வருடங்களிற்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.



## திரு. கே.எஸ். வெலிவிட்ட

பிரதிப் பொதுமுகாமையாளர்
(உள்ளகக் கணக்காய்வு)

இவர் சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் ஆவார். 2010 ஆம் ஆண்டில் சபையில் இணைந்துள்ள இவர் தனியார் மற்றும் அரச துறைகளில் கணக்கீடு மற்றும் உள்ளகக் கணக்காய்வில் 26 வருடங்களிற்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.



## திரு. வசந்த விமலவீர

பிரதிப் பொதுமுகாமையாளர்
(நிதி)

சபையின் பிரதிப் பொதுமுகாமையாளரான (நிதி) இவர் ஜயவர்த்தன பல்கலைக் கழகத்தில் வர்த்தகப் பிரிவில் (கணக்கியல் விசேட) 2வது உயர்பிரிவில் சித்தியடைந்து பட்டம் பெற்றுள்ளார். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் ஆவார. சபையின் நிதி, பங்குகள் மற்றும் கடன் முதலீடு, தகவல் தொழினுட்பம், கொள்முதல் ஆகிய பிரிவுகள் இவரது கண்காணிப்பின் கீழ் உள்ளன.



## திரு. சீ. மல்லிகாராச்சி

உதவிப் பொதுமுகாமையாளர்
(உறுப்பினர் சேவை)

இவர் சபையின் உதவிப் பொதுமுகாமையாளர் (அங்கத்தவர் கணக்கு) ஆவார். இவர் ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமாணி (பௌதீக விஞ்ஞானம்) பட்டத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் இந்தியாவில் ஹைதரபாத்திலே பரவலாக்கப்பட்ட திட்டத்திற்கான கிராமிய அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்ளோமாவினைப் பெற்றுக்கொண்டார்.

# சிரேஷ்ட முகாமைத்துவம்







**திரு. எச்.எம். செனவிரத்ன**
உதவிப் பொதுமுகாமையாளரான
(அங்கத்தவர் கணக்கு)

ETF சபையின் உதவிப் பொதுமுகாமையாளரான (அங்கத்தவர் வேசைகள்) இவர் தேசிய வணிக முகாமைத்துவ (NIBM) நிறுவனத்தின் வணிக முகாமைத்துவத்தில் டிப்ளோமாவை கொண்டுள்ளார். ETF சபையில் 1981 ஆம் ஆண்டில் இணைந்துள்ள இவர் ETF சபையின் சிரேஷ்ட முகாமையாளர்களில் ஒருராவார்.

**திரு. டபிள்யு. சூரியாராச்சி**
உதவிப் பொதுமுகாமையாளர்
(அமுலாக்கல் – வலயம்1)

இவர் சபையின உதவிப் பொதுமுகாமையாளரான (அமுலாக்கல் - வலயம்1) இவர் ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தின் கலைமாணி பட்டம் பெற்றுள்ள ஒருவர் ஆவார்.

**திரு. ஏ.ஜே.எம்.எஸ். ஜயசுந்தர**
உதவிப் பொதுமுகாமையாளர்
(அமுலாக்கல் – வலயம2)

இவர் ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையின உதவிப் பொதுமுகாமையாளரான (அமுலாக்கல் - வலயம2) இவர் ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தின் வணிகமாணி பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் பேராதனைப பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமாவையும் வயம்ப பல்கலைக் கழகத்தில் வணிக முகாமைத்துவத்தில் முதுநிலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் 1999 ஆம் ஆண்டு ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையில் பிராந்திய முகாமையாளராக இணைந்து கொண்டார்.



**திரு. எம்.எஸ். திசாநாயக்க**
உதவிப் பொதுமுகாமையாளர்
(சுயதொழில் மற்றும் புலம்பெயர் தொழில்)

இவர் ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையின உதவிப் பொதுமுகாமையாளரான (சுயதொழிலாளர் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்) இவர் தேசிய வணிக முகாமைத்துவ (NIBM) நிறுவனத்தின் வணிக முகாமைத்துவத்தில் டிப்ளோமாவை கொண்டுள்ளார். இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் சான்றிதழைக் கொண்டுள்ளார். 1995 ஆம் ஆண்டு ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையில் அமுலாக்க உத்தியோகத்தராக இணைந்து தற்போது உதவிப் பொதுமுகாமையாளர் (சுயதொழிலாளர் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்) என்னும் பதவியை வகிக்கின்றார்.



**திரு. எம்.ஏ.கே. அளுத்கமகே**
பதில் உதவிப் பொதுமுகாமையாளர்
(நிதி)

இவர் ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையின உதவிப் பொதுமுகாமையாளரான (நிதி) இவர் ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தின் வணிகமாணி (விசேட) பட்டத்தைப் பெற்றுள்ளார். இலங்கை முகாமைத்துவ நிறுவனம், இலங்கை கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் சங்கம் மற்றும் இலங்கை கடன் முகாமைத்துவ நிறுவனம் ஆகியவற்றின் உறுப்பினராவார். 1999 ஆம் ஆண்டு ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையில் இணைந்து நிதி, கணக்காய்வு மற்றும் முதலீட்டுக்களத்தில் 25 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்



## எமது நோக்கம்

உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தையும் நிலையான வாழ்க்கை முறையையும் ஏற்படுத்துவதற்கான சாத்தியமான மற்றும் உறுதியான முதன்மை நம்பிக்கை



## எமது குறிக்கோள்

உறுப்பினர்களை விருத்தியுறச்செய்யும் கொள்கைகள், பங்குதாரர்களுக்கு பொறுப்புக்கூறும் முறைகள் மற்றும் செயற்பாடுகள் மூலம் சமூகத்தின் முழுமையான எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வாடிக்கையாளர் சேவை

## செயற்பாட்டு மதிப்புக்கள்

- செயற்றிறன்மிக்க, புத்தாக்கபூர்வமான, அர்ப்பணிப்புடன் செயற்படும் சேவைக் குழாம்
- மக்களுக்கு சௌகரியமான பணிச்சூழல்
- ஆதரவான கொள்கைகள் மற்றும் செயல்முறைகள்
- அதிசிறந்த அமைப்புகள் மற்றும் நடைமுறைகள்
- உறுமிக்க நிதிவளம்
- மகிழ்ச்சிகரமான வாடிக்கையாளர்கள்



# நிதியியலின் முக்கிய நிதித் தகவல் 2013

உறுப்பினர் நிதி
ரூ.174 பில்லியன்

இலாபம்
ரூ.15.4 பில்லியன்

மொத்த சொத்துப் பெறுமதி
ரூ.178 பில்லியன்

10.5%
ROI

வட்டியும் பங்கிலாபமும் 10%
ரூ.15.8 பில்லியன்

பங்குகள் மீதான
வருமானம்
5.03%

முதலீட்டு வருமானம்
ரூ.16.2 பில்லியன்



# நிதி மீளாய்வு

ஊழியர் நம்பிக்கை நிதிச் சபையின் 1.8 வீதமான சொத்துக்களை நிதிப் பிரிவானது கொண்டுள்ளதுடன் இது சொத்து அடிப்படையில் நிகர பங்களிப்பில் ஒரு அதிகரிப்பினைக காட்டுகிறது. .

2013 ஆம் ஆண்டு முதலீட்டு வருமானம் ரூ 3 பில்லியனிலிருந்து 16.2 பில்லியன் ஆகவுள்ளதுடன் 2012 ஆண்டினை ஒப்பிடும்போது ரூ 13.2 பில்லியனாகும். 2012 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான வருமானம் 12.3 பில்லியனிலிருந்து 15.2 ஆக அதிகரித்துள்ளது.

ஊழியர் நம்பிக்கை நிதிச் சபையின் மொத்தச் சொத்துப் பெறுமதி 2013 டிசம்பர் முடிவில் ரூபா 178 பில்லியன்களாகும். இது பத்து மில்லியன் கணக்குகளைக் கொண்டுள்ளதுடன் அவற்றில் 2.2 மில்லியன் செயற்பாட்டுடைய கணக்குகளையும் கொண்டுள்ளது. 2013 டிசம்பர் 31 ஆம் திகதி ஊழியர் நம்பிக்கை நிதிச் சபையில் 72,145 தொழிலாளர்கள் பங்களிப்புச் செய்துள்ளார்கள். மொத்தப் பங்களிப்பானது 2012 இலிருந்து 2013 ஆண்டில் ரூ 12.7 பில்லியன்களிலிருந்து 14.4 பில்லியன்களாக அதிகரித்துள்ளதுடன் மீளளிப்புத்தொகையானது 2012 இலிருந்து 2013 ஆண்டில் ரூ 8.6 பில்லியன்களிலிருந்து 9.6 பில்லியன்களாக அதிகரித்துள்ளது

2013 ஆம் ஆண்டில் நிகர பங்களிப்பானது 16 வீதத்தால் அதிகரித்து ரூ 4.8 பில்லியன் வரை அதிகரித்துள்ளது. ஊழியர் நம்பிக்கை நிதிச் சபையின மொத்தச் சொத்தானது 2013 ஆம் ஆண்டு டிசம்பர் முடிவில் 12.8 வீதத்தால் அதிகரித்து ரூ 178.5 பில்லியன் வரை அதிகரித்துள்ளது.

உறுப்பினர் நிதியானது 2012 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆண்டு வரை ரூ 154 பில்லியனிலிருந்து 174 ஆக அதிகரித்துள்ளது.

# மைல்கற்கள்

## 1981 இருந்து 2013 வரை

ஆட்டோமற்றிக் லைப் இன்ஷூவரன்ஸ் நலன்கள்:
உச்சளவு ரூபா 50,000

1986





1989

நிரந்தர ஊனமுற்றோருக்கான திட்டம்:
உச்சளவு ரூபா 200,000
ஆட்டோமற்றிக் லைப் இன்ஷூவரன்ஸ் நலன்கள்

இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி:
உச்சளவு ரூபா 150,000
ஆட்டோமற்றிக் லைப் இன்ஷூவரன்ஸ் நலன்கள்
நிரந்தர ஊனமுற்றோருக்கான திட்டம்

1991





1992

கண்பளிங்கு வில்லை சத்திர சிகிச்சைக்கான செலவை
மீளளித்தல்: ரூபா 18,000
ஆட்டோமற்றிக் லைப் இன்ஷூவரன்ஸ் நலன்கள்
நிரந்தர ஊனமுற்றோருக்கான திட்டம்
இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி



1994

5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் – (வருடாந்தம் ஒவ்வொருவருக்கும் ரூபா 15,000 வீதம் 7,000)
ஆட்டோமற்றிக் லைப் இன்ஷூவரன்ஸ் நலன்கள்
நிரந்தர ஊனமுற்றோருக்கான திட்டம்
இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி
கண்பளிங்கு வில்லை சத்திர சிகிச்சைக்கான செலவை மீளளித்தல்



1997

'சிரமசுவ ரெக்கவரண'
மருத்துவக் காப்புறுதித் திட்டம்: வருடத்திற்கு ரூபா 25,000
ஆட்டோமற்றிக் லைப் இன்ஷூவரன்ஸ் நலன்கள்
நிரந்தர ஊனமுற்றோருக்கான திட்டம்
இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி
கண்பளிங்கு வில்லை சத்திர சிகிச்சைக்கான செலவை மீளளித்தல்
புலமைப் பரிசில் திட்டம்



2002

"வியன" குறைந்த வட்டியுடனான வீடமைப்புக் கடன் திட்டம்
ஆட்டோமற்றிக் லைப் இன்ஷூவரன்ஸ் நலன்கள்
நிரந்தர ஊனமுற்றோருக்கான திட்டம்
இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி
கண்பளிங்கு வில்லை சத்திர சிகிச்சைக்கான செலவை மீளளித்தல்
புலமைப் பரிசில் திட்டம்
'சிரமசுவ ரெக்கவரண' மருத்துவக் காப்புறுதித் திட்டம்



2006

சிறுநீரக மாற்றுச்சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி:
உச்சளவு ரூபா 150,000
ஆட்டோமற்றிக் லைப் இன்ஷூவரன்ஸ் நலன்கள்
நிரந்தர ஊனமுற்றோருக்கான திட்டம்
இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி
கண்பளிங்கு வில்லை சத்திர சிகிச்சைக்கான செலவை மீளளித்தல்
புலமைப் பரிசில் திட்டம்
'சிரமசுவ ரெக்கவரண' மருத்துவக் காப்புறுதித் திட்டம்
"வியன" குறைந்த வட்டியுடனான வீடமைப்புக் கடன் திட்டம்



2010

நிரந்தரமாக ஊனமுற்றதன் காரணமாக தொழிலை விடவேண்டிய நிலையேற்பட்ட ETF உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கான 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் திட்டம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய உறுப்பினர்களின் க.பொ.த. உயர்தரத்தில் சித்திபெற்ற பிள்ளைகளுக்கு நிதியுதவி - வருடாந்தம் ஒருவருக்கு ரூபா 12,000 வீதம் 5,000 புலமைப் பரிசில்கள்)
ஆட்டோமற்றிக் லைப் இன்ஷூவரன்ஸ் நலன்கள்
நிரந்தர ஊனமுற்றோருக்கான திட்டம்
இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி
கண்பளிங்கு வில்லை சத்திர சிகிச்சைக்கான செலவை மீளளித்தல்
புலமைப் பரிசில் திட்டம்
'சிரமசுவ ரெக்கவரண' மருத்துவக் காப்புறுதித் திட்டம்
"வியன" குறைந்த வட்டியுடனான வீடமைப்புக் கடன் திட்டம்
சிறுநீரக மாற்றுச்சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி

# நிறுவன மீளாய்வு

**ஊழியர் நம்பிக்கை நிதிச் சபை (ETFB) ஆனது பொறுப்பான நம்பிக்கைப் பொறுப்பாளர் மற்றும் நிதிமுகாமையாளர் போன்ற வழக்கமான நிறுவனக் கட்டமைப்பைக் கொண்டு செயற்படுத்தப்பட்டு எதிர்காலத்தில் ஒரு உன்னதமான நிதி நிறுவனமாகச் செயற்பட வைப்பதே முகாமைத்துவத்தின் நோக்கமாகும். அமைப்புக் கட்டமைப்பினைப் பற்றி சட்டவிதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும் இதனது செயற்பாட்டு விதிமுறைகளை சபையானது முறைப்படுத்தப்படலாம் சட்டப் பிரிவு 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.**

ஊழியர் நம்பிக்கை நிதியமானது 1980 ஆம் ஆண்டின் 46 இலக்கச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் செயற்பாட்டினை தொடங்கியது. ஊழியர் நம்பிக்கை நிதிச் சபை (ETFB) ஆனது பொறுப்பான நம்பிக்கைப் பொறுப்பாளர் மற்றும் நிதிமுகாமையாளர் போன்ற வழக்கமான நிறுவனக் கட்டமைப்பைக் கொண்டு செயற்படுத்தப்பட்டு எதிர்காலத்தில் ஒரு உன்னதமான நிதி நிறுவனமாகச் செயற்பட வைப்பதே முகாமைத்துவத்தின் நோக்கமாகும். அமைப்புக் கட்டமைப்பினைப் பற்றி சட்டவிதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும் இதனது செயற்பாட்டு விதிமுறைகளை சபையானது முறைப்படுத்தப்படலாம் சட்டப் பிரிவு 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதியச் செயற்பாட்டின் சகல முகாமைத்துவப் பொறுப்புக்களும் பணிப்பாளர் சபையிலேயே தங்கியுள்ளது. பணிப்பாளர் சபையானது ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அதில் நால்வரை இதற்குப் பொறுப்பான அமைச்சராலும் நிதிக்கு பொறுப்பான அமைச்சர் மற்றும் வணிக விடயங்களிற்கு பொறுப்பான அமைசர்களால் தலா ஒரு உறுப்பினரும் ஒரு உறுப்பினர் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்ததால் பரிந்துரைப்பதுடன் ஏனைய இரு உறுப்பினர்கள் 100,000 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களால் இரண்டு தலா ஒருவராகவும் நியமிக்கப்படுவார்கள்.

இச்சபைக்குப் பொறுப்பான அமைச்சரின் தீர்மானத்திற்கமைய சபைத் தலைவர் தெரிவு செய்யப்படுவதுடன் சட்டவிதியின் படி சபைத் தலைவரே சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் (CEO) ஆவார்.

மேல் மாகாணத்திலேயே பெரும்பாலான தொழில்கொள்வோர்கள் உள்ளபடியால் ETFB ஒரு தலைமை அமைப்பாக ஆரம்பத்திலே மேல்மாகாணத்திலே உருவாக்கப்பட்டது. முக்கிய பிரதேசங்களான பிராந்திய மற்றும் மாவட்டங்களில் அலுவலகங்கள் திறக்கப்பட்டு மீள்கட்டுமானத் திட்டம் பூர்த்தியான பின்னர் சட்ட நடவடிக்கைகள் அமுலாக்கம் செய்வதில் துரித முன்னேற்றம் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொறுப்புக் கோருதல், கொடுப்பனவு கோருதல், உறுப்பினர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்ற பல உறுப்பினர் சேவைச் செயற்பாடுகள் பரவலாக்கப்பட்டன.

சபை (ETFB) நடவடிக்கைகளானது பரந்த அளவில் செயற்பாட்டுப் பிரிவு மற்றும் ஆதரவுச்சேவைப் பிரிவு என இரு வகைப்படுத்தப்படும். சேகரிப்பு மற்றும் தொழிலாளர் தொடர்பு, உறுப்பினர் சேவைகள் மற்றும் முதலீடு போன்றவை செயற்பாட்டுப் பிரிவில் அடங்கும். நிர்வாகம் மற்றும் மனிதவளம், நிதி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு என்பன ஆதரவுச் சேவைகள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

சட்டவிதியில் குறிப்பிட்டுள்ளவாறு தலைவர் அவர்கள் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகக் கடமைபுரிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் (CEO) நேரடிக் கண்காணிப்பின் கீழ் பொதுமுகாமையாளர் மற்றும் மேலதிகப் பொதுமுகாமையாளர் ஆகியோர் செயல்புரிவார்கள். ஒவ்வொரு செயற்பாட்டுப் பிரிவும் ஒவ்வொரு பிரதிப் பொதுமுகாமையாளர் (DGM) தலைமையில் செயற்படும். செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவியானது தலைவருக்கு உதவிபுரிவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு விசாலமான நிறுவனக் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு ஒரு சுமுகமான செயற்பாட்டு அமைப்பாக உறுதி செய்யப்படுகிறது.



# நிறுவன நற்பரிபாலனம்

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் ஒவ்வொரு அடுக்கிலும் வலுமிக்க விழுமியத் தொகுதியினை உருவாக்கி எழுதப்பட்ட செய்முறைகளான கொள்கைகள் மற்றும் முன்மாதிரியான தலைமைகளை வழங்கும் பணிப்பாளர் மூலம் நல்ல நிருவாகக் கோட்பாடுடைய நிறுவனததை உருவாக்குவதற்கான படிகள் எடுக்கப்பட்டுள்ளன.

நிறுவன நற்பரிபாலனத்தை மிகவும் உயர்தரத்தில் வைத்திருப்பதற்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் பணிப்பாளர் சபை பொறுப்புடன் அர்ப்பணம் செய்துள்ளார்கள். சபையின் நிறுவன நற்பரிபாலனச் செயற்பாடாக அதன் பங்குதாரர்களிற்கான உத்தரவாதமிக்க பெறுமதிகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. சபையின் நற்பரிபாலனக் கோட்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளவாறு நடைமுறைப்பட்டுள்ளது.

1. 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டமான ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம்
2. அரச வணிகத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அரச நிறுவனங்களிற்கான நற்பரிபாலன அறிவுரைத் தொகுதிகள்
3. அரச வணிகத் திணைக்களத்தின் நிறுவன நற்பரிபாலனத்திற்கான Code of Best Practice.
4. இலங்கை கணக்கு மற்றும் கணக்காய்வுக் கண்காணிப்பு பணிப்பாளர் சபைச் சட்டம்
5. சபையின் கொள்கை மற்றும் செயற்பாட்டு நடைமுறைக் கோவை

## பணிப்பாளர் சபை

அரசு மற்றும் பங்குதாரர்களின் முகவராக பொறுப்புடன் செயல்புரிகின்ற திறமையான பணிப்பாளர் சபை மூலம் சபையின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அப்பணிப்பாளர் சபை பற்றிய சுருக்கமான விபரங்கள் 08 முதல் 11 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

## பணிப்பாளர் சபை அமைப்பு

**சபையானது ஒன்பது பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. அவர்கள்:**

- நான்கு உறுப்பினர்கள் அமைச்சரினால் பரிந்துரைக்கப்படுவர்.
- நிதிக்கு பொறுப்பான அமைச்சரினால் ஒரு உறுப்பினர் பரிந்துரைக்கப்படுவர்.
- இலங்கை தொழில்தருநர் சம்மேளனத்தினால் ஒரு உறுப்பினர் பரிந்துரைக்கப்படுவர்.
- 100,000 அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களின் நிறைவேற்றுக்குழுவுடன் ஆலோசித்து இரண்டு உறுப்பினர்களை அமைச்சர் பரிந்துரைப்பார்.

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் சகல மட்டத்திலும் அதன் பணி, நோக்கு, நிறுவன விழுமியம், நிறுவனக் குறிக்கோள் மற்றும் நோக்கங்களிற்கமைய சட்ட முறையில் மற்றும்

நிர்வாகம் முதலீடு, வழங்கல் ஆகிய கொள்கைகள் மூலம் நிறுவன நற்பரிபாலனச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## பணிப்பாளர் சபையின் செயற்பணிகள்

அரசாங்கத்தின் கொள்கைகளிற்கமைய வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன்மிக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் செயற்பாடுகளை செயற்படுத்துவது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். நிறுவன வளங்களை பாதுகாப்பதுடன் கணக்கினைத் துல்லியமாகப் பதிந்து பராமரித்தல் மற்றும் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஏனைய பல்வேறு சட்டங்களிற்கமைய செயற்பட்டு இந்த நிலையை அடையலாம்.

பணிப்பாளர் சபையானது நிறுவனத்தின் மூலோபாய இல்க்குகளை ஒழுங்காக விளங்கிக்கொண்டு அந்த மூலோபாய இலக்குகளை அடைவதற்காக செயல்பட்டு வருகின்றது.

அதேபோல பயன்மிக்க உட்கட்டமைப்பு மற்றும் இடர் முகாமைத்துவ நிறுவுதல், நிறுவனத்தின் மூலவளங்களை ஒழுங்குமுறையாகச் செயற்படுத்தல் மற்றும் வளங்கள் மற்றும் சொத்துக்களை பயன்மிக்கதாகப் பாவித்தல் பற்றி பணிப்பாளர் சபை தொடர்ச்சியாக அவதானம் செலுத்த வேண்டும். பணிப்பாளர் சபையால் பொதுமுகாமையாளரினதும் சிரேஷ்ட முகாமையாளர்களினதும் செயற்றிறனை வருடாந்தம் மதிப்பிடப்படுவதுடன் நிதி மற்றும் ஏனைய வெளிப்படைத் தன்மை பற்றி அதன் பங்குதாரர்களுக்கு தொடர்ச்சியாக போதுமான அளவு தெளிவூட்டல் ஏற்படுத்த வேண்டும்.

அதேபோல உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி, முதலீட்டுக் கமிட்டி ஆகியவற்றை நியமிப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். சுமுகமாக பிரச்சினைகள் ஏற்படாவண்ணம் அரச சட்டங்களின் தேவைகள் மற்றும் ஏனைய சட்டங்கள் சுற்றுநிருபங்களிற்கமைய சபையின் செயற்பாடுகளை மேற்கொண்டு செல்வது பணிப்பாளர் சபையின் எதிர்பார்பாகும். அதேபோல நற்பரிபாலனக் கட்டமைப்பிற்குள் வெளிப்படையான மற்றும் பொறுப்புமிக்க நிறுவனத்தினை நிறுவுதல் பணிப்பாளர் சபையின் எதிர்பார்பாகும்.

## பணிப்பாளர் சபை நியமனம்

நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமனம் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் மேற்கொள்ளப்படுகின்றது.

பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் செயற்படுத்தப்பட வேண்டிய செயற்பாட்டு அதிகாரம் மற்றும் பொறுப்புகள் நியமன அதிகாரியால் கையொப்பமிடப்படு நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படும்.

## தலைவர்

நிறுவனத் தலைவரால் தெளிவான சிறந்த தலைமைத்துவத்தை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோல நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக முழுமையான நற்பரிபாலன அமைப்பினுள் அதன் சரியான இலக்கினை நிறைவேற்றும் செயற்பாடு அவருடையதாகும். அவரால் நற்பரிபாலனம் பேணப்படுவது, சகல பணிப்பாளர்களையும் சமமான மேற்பார்வை, தெளிவாகப் பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல் மற்றும் அதிகாரம் மற்றும் நிர்வாகம் சமநிலையாகப் பேணிச் செல்வதை உறுதிப்படுத்த வேண்டும். அவரால் சகல பணிப்பாளர் சபைக் கூட்டங்களும் நடாத்தப்பட வேண்டுமென்பதுடன் குறிப்பிட்டளவு பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடாத்த வேண்டும். அவர் களங்களில் பெற்றுக்கொண்ட விசேட அறிவினைப் பிரயோகித்து நிறுவனத்தினுள் பணிப்பாளர் மட்டத்தில் அதிகபட்ச உயர்ந்தளவு பணியினை மேற்கொள்வதுடன் அந்நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது. அதேபோல அவர் ஏனைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் நிறுவனத்திற்காக செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

## சபையின் செயலாளர்

பணிப்பாளர் சபையின் பொறுப்புக்களுடன் பிணைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் நடைமுறைகள் பற்றிய ஒழுங்குவிதிகள், சட்டங்கள் ஏனைய நியதிகள் பற்றிய அறிவுள்ள உரிய காலத்தில் போதுமான மற்றும் நம்பகத் தன்மையான தகவல்களை பணிப்பாளர் சபைக்கு வழங்கக் கூடிய தொழின்முறைத் தகுதிகள் கொண்ட செயலாளர் ஒருவரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு அனுமதி உண்டு. பணிப்பாளர் சபைக் கூட்டத்தை ஏற்படுத்தும் முறையான கோட்பாடுகளைப் பின்பற்றி பயன்மிக்க கூட்டமாக நடாத்திச் செல்வதனை முக்கியமாகக் கொண்டு பணிப்பாளர் சபைக் கூட்டங்களிற்கு துண்டுப் பிரசுரங்களை குறித்த நேரத்தில் வழங்குதல் போன்றவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும். அவர் நிறுவன நடைமுறைகளை மேற்கொண்டு செல்வதற்கு தேவையான நடைமுறைகள், பொறுப்புக்கள், சட்டவிதிகளை அனுசரித்துச் செல்வதற்கு பணிப்பாளர் சபைக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் தரவினை வழங்க வேண்டும்.

## பொதுமுகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்கள்

நிறுவனச் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு பொதுமுகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்களுடைய பொறுப்பாகும். பணிப்பாளர் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை சக்திமிக்க செயன்முறைப்படுத்தும் பொறுப்பு அவர்களுடையதாகும். அதேபோல

பணிப்பாளர் சபையானது சரியான தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்குத் தேவையான தகவல்கள் மற்றும் விளக்கங்களை வழங்குதல் போன்றவை பொதுமுகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்களால் மேற்கொள்ளப்படும். நிறுவனத்தின் இலக்கு மற்றும் நோக்கங்களை வினைத்திறன்மிக்கதாக்குவதற்கான மற்றும் நிறுவனம் சிறப்பான முகாமைத்துவத்தைச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளைத் திட்டமிடல் மற்றும் வரவுசெலவுத் திட்ட ஆவணங்களைத் தயாரித்தல் உரிய நடைமுறைகள் மற்றும் நிர்வாகச் செயன்முறைகளைத் தயாரித்தல் பராமரித்துச் செல்லுதல் போன்றவை அவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## நிதி அறிக்கை

சபையின் வருடாந்த நிதி அறிக்கையானது உண்மையான மற்றும் நேர்மையான பிரதியாகவும் வருடாந்தச் செயற்பாடுகளை காட்டும் முறையில் தயாரிப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

நிதி அறிக்கையினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் ஆகியன இலங்கை கணக்கீட்டுக் கொள்கைகளிற்கமைவாக நடைபெறும். பணிப்பாளர் சபை, பொதுமுகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்களின் பொறுப்புக்களைத் திறம்பட நிறைவேற்றுவதற்காக மிகவும் நம்பகரமான தகவல்களை குறித்த நேரத்தில் வழங்குதல் வெளிப்படையானதாக இருக்க வேண்டுமென அமுல்படுத்தப்படுகின்றது.

## வருடாந்த கணக்காய்வு அறிக்கை

சபையின் வருடாந்தக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்தால் மேற்கொள்ளப்படுகின்றது.

## சபைக் கமிட்டி

சபையின் விசேட பணிகள் கமிட்டிக்கு ஒதுக்கப்படும்.

சபையில் ஏறத்தாழ 900 உத்தியோகத்தர்கள் பணியிலீடுபடுவதுடன் அதில் அதிகமானோர் இளமையானவர்களாகவும் திறனாளர்களாகவும் இருப்பதால் சபையின் செயற்பாடுகளை பயனள்ளதாக்குவதற்கு உதவியாக இருந்தது.



# புதிய தலைவரின் செய்தி

தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் ஊழியர்களின் முதுமைப் பருவத்தில் தொழிலாளர்களுக்கு வழங்கும் இரண்டு முக்கிய சமூகப்பாதுகாபபுத் திட்டங்களில் ஊழியர் நம்பிக்கை நிதியமும் ஒன்றாகும். 1981ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து இதன் உறுப்பினர்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டமாக வளர்ந்து முதுமைக்கால நலன்களிற்கு மேலாக வாழ்வாதார நலன்கள், தொழிற்காயங்கள் மற்றும் நோய்கள், அங்கவீனம் போன்ற நலன்புரித் திட்டங்களையும் கொண்டுள்ளது. ETF ஆனது தொழில் மாற்றம் ஏற்படும்போது வேலையின்மையாகக் கருதி தனது உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுகளிற்கு ஒருமுறை தமது தனிப்பட்ட கணக்கு மீதியிலிருந்து மீளெடுப்பதற்கு இடமளித்துள்ளது. இது பணியாளர்களுக்கு பங்குரிமை ஊக்குவித்தல் பற்றியும் பரந்த முதலீடு பற்றியும் சுட்டிக்காட்டியுள்ளது.

மரணம் அல்லது அங்கவீனம் ஏற்படும் வேளைகளில் காப்புறுதிக் காப்பீடுகள், கடுமையான நோய்களிற்கான நிதியுதவிகள், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சைகளில் சித்தியடைந்த உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு நிதியுதவி மற்றும் தமது வீட்டினை கட்டுவதற்கு வீடமைப்புக் கடன் வசதிகள் உட்பட பெருமளவிலான நலன்புரித் திட்டங்களை ETF ஆனது இதன் உறுப்பினர்களுக்கு வழங்குகின்றது.

சுயதொழில் புரிவோர் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களுக்காக உதவும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டமானது இவற்றில் குறிப்பிடக்கூடிய ஒரு அம்சமாகும். பெரும்பாலான தொழிற்பலத்திற்கு சமூகப் பாதுகாப்பினை வழங்கக்கூடிய ஆற்றலினைக் கொண்டிருந்தாலும் இதுவரை இத்திட்டத்திலிருந்து பயன்பெற்ற நபர்களின் எண்ணிக்கை மிகச் சிறிதளவாகும்.

2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியன்று 72,145 தொழில்தருநர்களால் தொழில் வழங்கப்பட்டுள்ள 2.2 மில்லியன் ஊழியர்களை உறுப்பிர்களாக நிதியம் கொண்டுள்ளதுடன் நிதியானது 174 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது. பங்களிப்புக்களின் சேகரிப்பு, தாமதமான பணம் செலுத்துகைக்கான கட்டணம், முதலீடுகளின் மூலமான வருமானம் ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் பணத்தினால் நிதியமானது குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைந்து 2013ஆம் ஆண்டில் வரிக்கு பின்னரான நிகர இலாபமாக 14,913 மில்லியம் ரூபாவினை பெற்றுள்ளது. இதேவேளையில் 10 சதவீதமான வட்டியுடன் கூடிய பங்கிலாபத்தினை உறுப்பினர்களிற்கு வழங்குவதென நிதியமானது அறிவித்துள்ளது.

ETF ஆனது அண்ணளவாக 900 ஊழியர்களைக் கொண்டுள்ளது. அவர்களின் பொறுப்பான அர்ப்பணிப்பான செயற்பாட்டினால் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இறுதியாக சபை சார்பாக மனமுவந்து ஊக்கத்துடன் விடாமுயற்சியுடன் செயற்பட்டு நற்பயனைப் பெற்றுத் தந்த தலைமை அலுவலகத்திலுள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் 17 கிளை அலுவலகங்களிலுள்ள சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மஹிந்த மடிஹஹேவா
புதிய தலைவர்/ CEO
ஊழியர் நம்பிக்கை நிதிச் சபை

# பணிப்பாளர் சபையின்

# அறிக்கை 2013

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பணிப்பாளர் சபை, அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் பணிகொள்வோருக்கும் 2013ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களையும் முன்வைக்கின்றது.**

**நிதி, நிதித்திட்டமிடல் அமைச்சின் கீழ் செயலாற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 1980ம் ஆண்டின் 46ஆவது இலக்க ஊ.ந.நி. சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு, 1981ம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது அது அனைத்து உறுப்பினர்களுக்கும் பணிகொள்வோருக்குமான 33 வருடகால சேவையைப் பூர்த்தி செய்துள்ளது.**

## இவ்வாண்டின் பிரதான அடைவுகள்

2013ம் ஆண்டில், சபை குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் முக்கியமான அடைவுகளையும் அடையப்பெற்றது. சில அடைவுகள் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

1. இவ்வாண்டிற்கான பணிகொள்வோரின் மொத்தப் பங்களிப்பான ரூபா 14.4 பில்லியன், கடந்த ஆண்டை விட ரூபா 1.7 பில்லியன் அதிகரிப்பைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

2. 2012ஆம் ஆண்டில் 13.2 பில்லியனாக இருந்து, ரூபா 3 பில்லியனால் அதிகரித்துள்ள இவ்வாண்டின் மொத்த முதலீட்டு வருமானம் ரூபா 16.2 பில்லியன்களாகும். மேலும், ஆண்டினிறுதியில் பட்டியலிடப்பட்ட முதலீட்டுப் பெறுமானம் ரூபா 150 பில்லியனில் இருந்து ரூபா 168 பில்லியன் வரை அதிகரித்துள்ளது.

3. கடந்த வருடத்தில் ரூபா 11.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில், சபை தேறிய இலாபமாக 15.4 ரூபா பில்லியன் ஈட்டியுள்ளதுடன், இவ்வருட இறுதியில் உறுப்பினர்களுக்கிடையில் ரூபா 15.8 பில்லியன் வட்டியாகவும் பங்கிலாபமாகவும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

4. வருட இறுதியில் நிதியத்தின் தேறிய சொத்துப் பெறுமதி ரூபா 178 பில்லியனையும் மிகைத்துள்ளது.

5. உரிமைப் பங்குகளுக்கான வருமானம் 2012ம் வருடத்தின் 333 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 482 மில்லியன் ரூபாவாக இருந்தது. இவ்வதிகரிப்பிற்கு 2013 இல் பங்குச்சந்தை நடவடிக்கைகளின் எல்லை விருத்தியே ஏதுவாக இருந்தது.

6. 2013இல் ஈட்டப்பட்ட முதலீட்டு வருமான அதிகரிப்புடன், வருட இறுதியில் எமது உறுப்பினர்களுக்கு 2013ஆம் ஆண்டிற்கு வட்டியாகவும் பங்கிலாபமாகவும் 10%ஐ மொத்த வீதமாக வழங்க முடிந்தது. ( வரைபு 1 மற்றும் 2ஐப் பார்க்கவும்) வங்கிகளாலும்.·. நிதி நிறுவனங்களினாலும் தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வீதங்களுடன் ஒப்பிடுகையில், இது ஒரு கவர்ச்சிகரமான வீதமாகும். மேலும் பங்கிலாப சமப்படுத்தும் ஒதுக்கில் 657 மில்லியன் ரூபா வைக்கப்பட்டுள்ளது.

7. 2012ம் ஆண்டில் 5.7%ஆக இருந்த நிதியத்தின் இயங்கு செலவினங்கள், இவ்வாண்டில் 5.28%இற்கு குறைவடைந்துள்ளது. எதிர்பார்க்கப்பட்டவாறே இயங்கு செலவின மட்டத்தினை சபை பேணியுள்ளது. (வரைபு 3ஐப் பார்க்கவும்)

8. செலுத்தப்படாத பங்களிப்புக்கள், மிகை அறவீடுகள், சட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றில் விசேட கவனஞ் செலுத்திய நிலையில், இவ்வருடத்தில் கிளைக்காரியாலய வலையமைப்பானது தொடர்ந்தும் திறமையாகப் பணிபுரிந்தது. கம்பஹ, கண்டி, மாத்தறை அலுவலகங்களில் கோரல் கொடுப்பனவுகளின் பன்முகப்படுத்தல் வெற்றிகரமாகத் தொடரப்பட்டது.

9. அத்துடன், 2012ம் ஆண்டில் குருணாகலை அலுவலகத்தினால் கோரல்கள் முறைவழியாக்கம் மேற்கொள்ளப்பட்டதுடன், 2014ஆம் ஆண்டிலிருந்து பதுளையிலிருந்து இச்செயற்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

10. 2010 நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் தாபிக்கப்பட்ட புதிய பிராந்திய நிலையம், அதிகரித்த விழிப்பூட்டல் மூலம் பணிகொள்வோரினால் ஒரு மாதத்திற்கு ஏறக்குறைய 8 மில்லியன் பங்களிப்புக்கள் அதிகரிப்புடன், 2013ம் ஆண்டில் நம்பிக்கையூட்டக்கூடிய வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

11. அனைத்து உறுப்பினர்களினதும் கணக்குகளை இற்றைப்படுத்தல் படிமுறை இவ்வருடம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன், இவ்வருடத்தில் தேங்கிக் கிடந்தவற்றில் 98%வற்றை பூர்த்திசெய்வதில் வெற்றிகண்டது. சிக்கல்மிகுந்த எஞ்சியவை தற்போது தீர்க்கப்படுகின்றன. 2012ம் ஆண்டு வரை அனைத்து செயற்படு உறுப்பினர்களுக்கும் வருடாந்த உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை (AMS) அனுப்புவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

12. இவ்வருடத்தில் சுயதொழில் உறுப்பினர்களை உள்வாங்குதல் தொடர்பாக தொடர்ந்தும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. சமுர்த்தி வங்கியிலிருந்து கடன் வசதிகளைப் பெற்று சிறிய அளவில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் சுயதொழில் உறுப்பினர்களை உள்வாங்கும் நிகழ்ச்சி, இவ்வருடத்தில் சமுர்த்தி வலையமைப்பினூடாக 10,000 உறுப்பினர்களை உள்வாங்குவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டது. மேலும், சமுர்த்தி உறுப்பினர்களுக்கு மேலதிகமாக மொத்தம் 33,000 உறுப்பினர்களைக் கொண்டதாக, பால் பண்ணையாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், நிர்மாணத்துறை தொழினுட்பவியலாளர்கள், கலைஞர்கள், முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் ஆகியோருடன் அதிகமான ஆட்சேர்ப்பிற்காக தொடர்ந்தும் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன. கிடைக்கப்பெற்ற 2013ஆம் ஆண்டிற்கான மொத்த பங்களிப்பு தொகை 26 மில்லியன் ரூபா ஆகும்.

13. இவ்வாண்டிலும் மனிதவள அபிவிருத்தியில் அதிகரித்த முக்கியத்துவம் வழங்கப்பட்டது. சகல மட்டங்களிலுமுள்ள அலுவலர்களினது திறன்கள், மனப்பாங்குகள், அறிவு ஆகியவற்றை மேம்படுத்தும் பயிற்சித் திட்டங்களை/கருத்தரங்குகளை/செயலமர்வுகளை ஏற்படுத்திக் கொடுப்பது மேலும் வலியுறுத்தப்பட்டது. தொழிற்சங்க உறுப்பினர்களுக்கும் உரிய துறைகளில் பயிற்சி பெறும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

14. நிர்வாகத்திற்கும் அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான தொழில் சம்பந்தமான நல்லுறவு இவ்வாண்டில் சிறந்த மட்டத்தில் பேணப்பட்டது. இந்த நல்லுறாவானது, சபையின் சகல செயற்பாடுகளும் தங்கு தடையின்றி செவ்வனே நடைபெற பெரிதும் உதவியது.



# பிரதான செயற்பாடுகள்

## 2013ஆம் ஆண்டில் சபையின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டன.

### பணிகொள்வோரின் பங்களிப்புக்கள் மற்றும் அங்கத்தவர் நிதி

பங்களிப்பு.ஃசேகரித்தற் பிரிவு பணிகொள்வோரின் பங்களிப்புக்களைச் சேகரிப்பதற்கும் அவற்றைத் திறம்பட/நேரகாலத்துடன் வங்கியிலிடுவதற்கும் பொறுப்பாயுள்ளது. அவ்வாறே, அங்கத்தவர் கணக்குப் பிரிவானது, ஒவ்வோர் அங்கத்தவர் கணக்குகளையும் இற்றைப்படுத்துவதற்கும் வருடாந்த அங்கத்தவர் கணக்குக் கூற்றுக்களை அனுப்பிவைப்பதற்கும் பொறுப்பாக உள்ளது.

நிதியத்துக்கு பங்களிக்கும் பணிகொள்வோர்களுக்கு விரைவான மற்றும் சிறந்த சேவையை வழங்குவதற்கு, பணிகொள்வோர் சிறிய வகையினர் எனவும் பெரிய வகையினர் எனவும் இரு குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர், 15 ஊழியர்களை விட அதிகமானோரைக் கொண்டுள்ள பணிகொள்வோர் பெரிய வகையினர் எனவும் 15 ஊழியர்களை விடக் குறைவாகக் கொண்டுள்ள பணிகொள்வோர் சிறிய வகையினர் எனவும் குறிக்கப்படுகின்றனர்.

இவ்வாண்டில் 2040 புதிய பணிகொள்வோர்கள் நிதியத்துக்கு பங்களிக்க ஆரம்பித்துள்ளனர். இதன் விளைவாக, 2013ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த பணிகொள்வோரின் எண்ணிக்கை 72,234 ஆக உயர்ந்துள்ளது. அவ்வாறே, தமது ஊழியர் சார்பாக, பணிகொள்வோரிடமிருந்து பெறப்பட்ட மொத்த பங்களிப்புக்கள், 2012இல் ரூபா 12.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2013ஆம் ஆண்டில் ரூபா 14.4 பில்லியனாக இருந்தது. (வரைபு 4ஐப் பார்க்க). மேலும், அங்கத்தவர் நிதியத்தின் பெறுமதி ரூபா 153.6 பில்லியனிலிருந்து நடப்பாண்டின் இறுதியில் ரூபா 174.3 பில்லியனாக அதிகரித்துள்ளது. (வரைபு 5ஐப் பார்க்க)

### உறுப்பினர் நலன் கோரல்கள் மற்றும் நலன்புரி நலன்கள்

கோரல்கள் பிரிவானது, மீளளிப்புக்கள் மற்றும் நலன் கோரல்கள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்வதற்கும், அதன் அங்கத்தவர்களுக்காக அவ்வாறான கோரல்களை துரிதமாக முறைவழிப்படுத்துவதற்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் பொறுப்பாக உள்ளது.

மேலும், உறுப்பினர் சேவைகள் பிரிவானது, உறுப்பினர்களுக்கு அவர்களது உறுப்புரிமைகள் மற்றும் நிதியத்திலிந்து அவர்கள் பெறக்கூடிய நலன்கள் பற்றி தகவல்களை வழங்குவதில் பொறுப்பாக உள்ளது. அத்துடன், பணிகொள்வோர் தமது ஊழியர் சார்பாக பங்களிப்புக்களை உரிய நேரத்தில் அனுப்பி வைப்பதன் பொறுப்பு தொடர்பாக விழிப்பூட்டலை வழங்குகின்றது. அவ்வாறான பணி, நிறுவனங்கள், தொழிற் சங்கங்கள், தொழில்வாண்மை அமைப்புக்கள் ஆகியவற்றின் வேண்டுகோளுக்கு இணங்க விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் பல்வேறு பொதுக்கூட்டங்கள் ஊடாக பொதுமக்களை அறிவூட்டுவதன் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது.

2013ஆம் ஆண்டில், 152,866 மீளளிப்புக் கோரல்கள் முறைவழியாக்கப்பட்டு முழுத் தொகையாக ரூபா 9.7 பில்லியன் ரூபா கொடுப்பனவு செய்யப்பட்டது. 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 146,876 கோரல்கள் முறைவழியாக்கப்பட்டு கொடுப்பனவு செய்த பெறுமதியானது 8.7 பில்லியன் ரூபாவாகும். இவ்வருடத்தில் கோரல் ஒன்றிற்கான சராசரி கொடுப்பனவுத் தொகை கடந்த வருடத்தின் 59,126 ரூபாவிலிருந்து ரூபா63,480இற்கு அதிகரித்துள்ளது (வரைபு 06ஐப் பார்க்க). இவ்வருடத்தில் கோரல் கொடுப்பனவுகளின் வெளிப்பாய்வு, எல்லை அதிகரிப்பைக் காட்டியுள்ளது. 2013ஆம் ஆண்டில், 11,122 விசேட நலன் கோரல்கள் முறைவழியாக்கப்பட்டன மற்றும் கொடுப்பனவு செய்யப்பட்ட முழுத்தொகையாகனது 248 மில்லியன் ரூபாவாகும். 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 10,880 கோரல்கள் முறைவழியாக்கப்பட்டன மற்றும் அதன் பெறுமதியானது 232 மில்லியன் ரூபாவாகும். ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய 5,520 உறுப்பினர்களின் பிள்ளைகள் சார்பாக 2013 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியில் 83 மில்லியன் ரூபா வைப்புச் செய்யப்பட்டது. (வரைபு 7ஐப் பார்க்க)

அவ்வாறே 2013ஆம் ஆண்டில் கபொத (உயர்தர) பரீட்சையில் சித்தியெய்திய 1,467 உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு அவர்களது உயர்கல்வியைத் தொடர்வதற்கு உதவியாக 18 மில்லியன் ரூபா கொடுப்பனவு செய்யப்பட்டது.

வீடமைப்புக் கடன் தொகையைப் பெறுவதற்கு 82 உறுப்பினர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் முகமாக வியன வீடமைப்புக் கடன் சார்பாக NDB வங்கிக்கு 2013ஆம் ஆண்டில் 105 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டது.

சபை தமது செயற்படு அங்கத்தவர்களுக்காகச் செயற்படுத்தும் 10 நிதியுதவித் திட்டங்கள் பின்வருமாறு:



ஆயுள் காப்புறுதி

1. ஆட்டோமற்றிக் லைப் இன்ஷுவரன்ஸ் நலன்கள்: உச்சளவு ரூபா 50,000



இதய அறுவை சிகிச்சை

2. இருதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி: உச்சளவு ரூபா 150,000



சிறுநீரக மாற்று

3. சிறுநீரக மாற்றுச்சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி: உச்சளவு ரூபா 150,000



நிரந்தர ஊனம்

4. முழுமை மற்றும் நிரந்தர ஊனமுற்றோருக்கான திட்டம்: உச்சளவு ரூபா 200,000



உள்விழி வில்லை **(Intra-Ocular Lens)**

5. கண்பளிங்கு வில்லை சத்திர சிகிச்சைக்கான செலவை மீளளித்தல்: இரு கண்களுக்கும் ரூபா 18,000



புலமைப்பரிசில் வைத்திருப்போர்

6. (ஊ.ந.நிதிய அங்கத்தவர்களின்) சித்தியடைந்த பிள்ளைகளுக்கான 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் திட்டம் - வருடாந்தம் ஒவ்வொருவருக்கும் ரூபா 15,000 வீதம் 7,000 புலமைப் பரிசில்கள்)



“சிரமசுவ ரெக்கவரண” மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட

7. “சிரம சுவ ரெக்கவரண” மருத்துவக் காப்புறுதித் திட்டம்: வருடத்திற்கு ரூபா 25,000 - வாழ்நாள் முழுவதற்கும் உச்சளவு ரூபா 50,000



“வியன” வீட்டுக் கடன்

8. “வியன” குறைந்த வட்டியுடனான வீடமைப்புக் கடன் திட்டம்



நிரந்தர ஊனமுற்றோருக்கான 5ம் தர புலமைப்பரிசில்

9. நிரந்தரமாக ஊனமுற்றதன் காரணமாக தொழிலை விடவேண்டிய நிலையேற்பட்ட ETF உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கான 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் திட்டம்



க.பொ.த. (உ/த) சித்தியடைந்த ஊ.ந.நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான நிதியுதவி

10. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய உறுப்பினர்களின் க.பொ.த. உயர்தரத்தில் சித்திபெற்ற பிள்ளைகளுக்கு நிதியுதவி - வருடாந்தம் ஒருவருக்கு ரூபா 12,000 வீதம் 5,000 புலமைப் பரிசில்கள்)

உடனடியாகப் பணம் தேவைப்படும் உறுப்பினர்களின் வசதிக்காக, துரித கோரல்கள் சேவை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## அங்கத்தவர் கணக்குகளைப் பேணுதல்

உறுப்பினர் கணக்குப் பிரிவு தனிநபர் அங்கத்தவர் கணக்குகளை இற்றைப்படுத்தல் மற்றும் வருடாந்த அங்கத்தவர் கணக்குக் கூற்றுக்களை செயற்படு அங்கத்தவர்களுக்கு அனுப்புதல் ஆகியவற்றுக்கு பொறுப்பாயுள்ளது.

வருட இறுதியில், நிதியத்துக்கு பங்களிக்கும் செயற்படு மற்றும் செயற்பாடற்ற அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஏறக்குறைய 11 மில்லியனை எட்டியுள்ளது. நிதியம் அனைத்து செயற்படு மற்றும் செயற்பாடற்ற அங்கத்தவர் கணக்குகளையும் பேணி வருகின்றது.

2013.12.31ஆம் திகதியில் உள்ளவாறு 10,502,242 அங்கத்தவர் கணக்குகள் 2012 ஆம் ஆண்டு வரை இற்றைப்படுத்தப்பட்டன. இது மதிப்பிடப்பட்ட மொத்த அங்கத்தவர் கணக்குகளில் ஏறக்குறைய 95% ஆகும். இவற்றுள், 8,378,930 கணக்குகள் செயற்பாடற்றவையாக இருக்கின்ற நிலைமையில், இவ்வருடத்தில் வருடாந்த அங்கத்தவர் கணக்குக் கூற்றுக்கள் உரிய பணிகொள்வோருக்கு அனுப்பப்பட்ட கணக்குகள் 2,123,312 செயற்படு கணக்குகளாகவும் இருக்கின்றன.

## முதலீடுகள்

கடந்த வருடத்தை விட 2013ம் ஆண்டில் 12% அதிகரிப்பைக் கொண்டதாக, பட்டியலிடப்பட்ட முதலீடு 150 பில்லியன் ரூபாவிலிருந்து 168 பில்லியன் ரூபா வரையில் அதிகரித்துள்ளது.

2013ஆம் ஆண்டில் சபை முதலீட்டுக் கொள்கையின் வழிகாட்டல்களை கடுமையாகக் கடைப்பிடித்து, மூலதனத்தைப் பாதுகாத்துக் கொண்ட அதேவேளை, நியாயமானதொரு வருவாயையும் பெற்றுக் கொண்டது.

பட்டியலிடப்பட்ட முதலீட்டின் பெரும் பகுதியான ரூபா 149 பில்லியன் (88.7%) அரசாங்கப் பிணைகளில் முதலீடு செய்யப்பட்டது. மேலும், ரூபா 6 பில்லியன் (3.59%) அரச உத்தரவாதமளிக்கப்பட்ட நிலையான வருமானப் பிணைகளிலும் ரூபா 7.5 பில்லியன் (4.5%) உரிமைப் பங்குகளிலும் முதலீடு செய்யப்பட்டன. (வரைபு 8ஐப் பார்க்க)

கடந்த வருடத்தில் பெறப்பட்ட 324 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில், சபை பங்குகளை விற்பனை செய்ததில் பங்கிலாபமாகவும் முதலீட்டு வருமானமாகவும் 482 மில்லியன் ரூபாவை இலாபமாக ஈட்டியது. இவ்வதிகரிப்பிற்கு 2013 இல் பங்குச்சந்தை நடவடிக்கைகளின் எல்லை விருத்தியே ஏதுவாக இருந்தது.

முன்பு குறிப்பிட்டுள்ளவாறு, 2012ஆம் ஆண்டின் 13.2 பில்லியன் ரூபாவிற்கு மாறாக 3 பில்லியன் ரூபா அதிகரிப்பாக 16.2 பில்லியன் ரூபாவினை ETF 2013ஆம் ஆண்டின் போது முதலீட்டு வருமானமாக ஈட்டியது.

வருமான இலக்குகளைப் பேணிக் கொள்வதற்கும் 2014ஆம் ஆண்டினிறுதியில் உறுப்பினர்களுக்கிடையே நியாயமானதொரு பங்கிலாபத்தினை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கும் முதலீடுகளின் மாற்றீட்டு மூலங்களாக வகைப்படுத்தப்பட்ட வர்த்தகப் பத்திரங்களிலும் தொகுதிக்கடன்களிலும் முதலீடு செய்வதற்கு சபை ஆராய்கின்றது. மேலும், மிகவும் கவர்ச்சிகரமான நன்மைகளுக்கு துணைச் சந்தையில் தொகுதிக்கடன்களில் வர்த்தகத்திற்கான சாத்தியக்கூற்றினையும் ஆராய்கின்றது.

ஆவணப் பரிமாற்றல் ஆணைக்குழு (SEC)/ கொழும்பு பங்குப்பரிமாற்றம் (CSE) ஆகியவற்றால் நடாத்தப்படும் பொருத்தமான பாடநெறிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் முதலீட்டு ஆய்வு மற்றும் ஆராய்ச்சியில் அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கு கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

2013 ஆகஸ்ட் 8ஆம் திகதியில் பாராளுமன்றத்தில் அரசாங்க நிறுவனங்களுக்கான கமிட்டி (COPE) க்கு ETF வரவழைக்கப்பட்டு அதன் அனைத்து நடவடிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டன. COPE உறுப்பினர்கள் ETFஇன் முதலீட்டுக் கொள்கை மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான வகைதுறை குறித்து தெளிவு பெற்றனர்.

சபையிலுள்ள திறைச்சேரி பிரதிநிதியின் தலைமையின் கீழுள்ள முதலீட்டுக் கமிட்டி முதலீட்டுச் செயல் திட்டங்கள் மற்றும் விருப்பத்தேர்வுகளையும் மதிப்பிடுவதற்கு தொடர்ந்து ஒன்றுகூடியதுடன் பணிப்பாளர் சபைக்கு சிபாரிசுகளை முன்வைத்தது.

## சேகரித்தல் மற்றும் பணிகொள்வோர் உறவுகள்

பங்களிப்புக்கள், மிகைக்கட்டணங்களின் சேகரித்தல் மற்றும் பிராந்திய அலுவலக வலையமைப்பின் சட்ட, வினைப்படுத்துகை செயற்பாடுகள் ஆகியவை மற்றும் நிர்வாகமும் கண்காணிப்பும் இப்பிரிவினால் கையாளப்படுகின்றன. பணிகொள்வோரினால் செலுத்தப்படும் மாதாந்த பங்களிப்புத் தொகைகளை/ மிகைக் கட்டணங்களை மேம்படுத்துவதற்கும், விஷேடமாகக் கஷ்டப் பிரதேசங்களிலுள்ள ஊ.ந.நி. அங்கத்தவர்களுக்கு சேவைகளை வழங்குவதற்கும் ஊ.ந.நி. சபை பல ஊக்குவிப்புக்களை மீளாய்வாண்டில் மேற்கொண்டுள்ளது.

மொத்த பிராந்திய நிலையங்களின் எண்ணிக்கை 17ஆக அதிகரித்துள்ளது. இப்பிராந்திய நிலையங்களின் செயற்பாடுகளை பலப்படுவதற்கு, முகாமை திறன்மிக்க பட்டதாரிப் பயிலுனர்களைத் தயார்படுத்துவதில் தொடர்ந்தும் ஈடுபட்டது.

பணிகொள்வோர் தமது மாதாந்த கட்டணங்களை செலுத்துவதற்கு இலங்கை வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி ஊடாக மின்னணுசார் கொடுப்பனவு முறையைப் பயன்படுத்தும் திட்டத்தை சபை 2008ஆம் ஆண்டில்

அறிமுகப்படுத்தியுள்ளது. மிகப் பரந்தளவில் காகித வேலைகளைக் குறைத்துள்ள இது மிகவும் வசதியான ஒரு முறையாக இருப்பதால், 2013இல் அதிகமான பணிகொள்வோர் இந்த முறையைக் கையாண்டு பங்களிப்புக் கொடுப்பனவுகளை மேற்கொண்டுள்ளனர் என்பதை நாம் கவனித்தோம். மேலும், இன்னும் அதிகமான பணிகொள்வோர் இத்திட்டத்தைப் பயன்படுத்துவதை ஊக்கமூட்டும் வகையில் பல்வேறு கருத்தரங்குகளில் விழிப்பூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துவதில் சபை தொடர்ந்தும் முயற்சியில் ஈடுபடுகின்றது. தற்போது ஏறக்குறைய 1000 பணிகொள்வோர் தமது பங்களிப்புக்களை இணையத்தளத்தினூடாகச் செலுத்துகின்றனர். மேலும், சம்பத் வங்கி, மக்கள் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி ஆகியவற்றுடன் 2013ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தை அவ்வங்கிகளூடாகச் செயற்படுத்துவதற்கான கலந்துரையாடல்கள் முடிவுற்றுள்ளன.

2014ஆம் ஆண்டில் இசைவு விகிதத்தினை அதிகரிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வதற்கு அனைத்து பிராந்திய அலுவலகங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வாண்டில் அனைத்து பிராந்திய முகாமையாளர்களுடனும் மாதந்தோறும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## நிர்வாகம்/ மனித வளம்

இம்மீளாய்வாண்டின் போது சபையின் பல்வேறு பிரிவுகளுக்கு 26 புதிய அலுவலர்கள் உள்வாங்கப்பட்டதுடன், 22 அலுவலர்கள் ஓய்வு பெறல், பதவி விலகல், தொழில் முடிவு போன்ற காரணங்களால் சபையின் சேவையை விட்டும் நீங்கியுள்ளனர். மேற்கூறியவைக்கு மேலதிகமாக, 104 அலுவலர்கள் பதவி உயர்வு பெற்றுள்ளனர். வருட இறுதியில் சபையின் மொத்த அலுவலர்களின் எண்ணிக்கை 914ஐ அடைந்தது.

கடந்த ஆண்டைப் போன்று, மீளாய்வாண்டின் போதும் சபை அடையப்பெற்ற குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு பெரிதும் பங்களித்தமைக்கு துணை புரிந்த, தத்தமது உற்பத்தித்திறன், செயல்திறன், மனப்பாங்கு ஆகியவற்றை விருத்தி செய்வதற்கு அனைத்து மட்டங்களிலுமுள்ள அலுவலர்களுக்கு அவரவருக்குரிய துறைகளில் பயிற்சி வாய்ப்புகள் சபையினால் வழங்கப்பட்டன. தகவல் தொழில் நுட்பப் பிரிவின் பணிக்குழாத்தினருக்கு பயிற்சி வழங்குவதில் விசேட கவனஞ் செலுத்தப்பட்டதுடன், மொழித்திறன்களை விருத்தி செய்வதற்கும் அதற்குச் சமமாக வலியுறுத்தப்பட்டது. சிரேஷ்ட முகாமைத்துவப் பதவியணியினரும் தமது ஆற்றல்களை மேம்படுத்துவதற்கு உரிய பயிற்சி நிகழ்ச்சிகளில் உட்படுத்தப்பட்டனர்.

## நிதி

தாபனத்தின் சகல நிதிச் செயற்பாடுகளுக்கும் நிதிப் பிரிவு பொறுப்பாக உள்ளது.

சபையின் எல்லா வருவாய்களையும் செலவீடுகளையும் கண்காணித்தல் மற்றும் பதிவுசெய்தல், அனைத்து அலுவலர் குழாத்தினதும் வழங்குநர்களினதும் கொடுப்பனவுகள், மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகள், தேர்ச்சி அறிக்கைகள், வருடாந்த பாதீடு, வருடாந்த பங்கிலாபத் தீர்மானங்கள், ஏனைய முகாமைத்துவ தகவல்கள் ஆகியவற்றைத் தயாரித்தல் என்பன தொடர்ந்தும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இவற்றுக்கு மேலாக, சபையின் கூட்டுத் திட்டம், செயன்முறைத் திட்டம், வருடாந்த அறிக்கை, கணக்காய்வு விசாரணைகளின் அவதானிப்புக்கள், வெளிவாரி முகவர்களுக்கு நிதி சம்பந்தமான அறிவிப்புக்கள், ஏனைய நிதி ஆவணங்கள் என்பனவற்றை ஒருங்கிணைத்தலும் தயாரித்தலும் இப்பிரிவால் கையாளப்படுகின்றன.

## உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மேம்படுத்தப்பட்ட நிதி மற்றும் செயற்பாட்டுத் துறைக்கு இட்டுச் செல்லும் ஒத்துழைப்பை உறுதி செய்யும் அதே வேளை, சபைச் செயற்பாடுகளின் உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பேணுவதில் பொறுப்பாக உள்ளது. உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்காய்வு கமிட்டி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, சிரேஷ்ட பட்டயக் கணக்காளரான சபைத் தலைவரின் கீழ் ஒன்று கூடி, செயல்முறைத்திட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் கலந்துரையாடியதுடன் செம்மைப்படுத்தும் செயற்பாடுகளைக் கண்காணித்தது. மேலும், நிதியத்தின் வெளிச்செல் நிதியில் குறிப்பிடத்தக்களவு வீதத்தைக் கொண்டுள்ள அங்கத்தவர்களுக்கு வழங்கும் கோரல்கள்.'.நலன்களைக் கண்காணிப்பதில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு முக்கியமான கவனத்தைச் செலுத்தியது. மேலும், 2013ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுக் குழு தெரிவுசெய்யப்பட்ட பிராந்திய அலுவலகங்களுக்குச் சென்று அவற்றின் பிரதான செயற்பாடுகளைப் பற்றி அறிக்கையிட்டுள்ளது. அத்துடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மென்பொருள் கூறுகளை மாற்றியமைப்பதற்கு, குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு கோணத்தில் தகவல் தொழில் நுட்ப பிரிவிற்கு அறிவுரைகளை வழங்குவதில் பெரும் பங்கை வகித்தது. மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்றியது. இப்பிரிவினால் விசேட விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## தொழில் நுட்பம்

அங்கத்தவர் நிர்வாக மென்பொருள் முறைமை (MASS) தொடர்பான பல முக்கியமான பிரச்சினைகள் உள்ளக விருத்தியாளர்களாலேயே தீர்க்கப்பட்டன. இவ்விதத்தில் செயற்பட்டதன் மூலம், வெளிவாரி வர்த்தகர்களை வரவழைத்து செய்விப்பதால் ஏற்படும் கணிசமான செலவுகள் சபையால் தவிர்க்கப்பட்டன.

பிரதான கணினித் தொகுதிக்கு பிரவேசிக்க முடியும் விதத்தில் IPVPN (இணையத்தள மெய்நிகர் செம்மை நடப்பு வழக்கு தனியார் வலையமைப்பு) வசதிகள் வழங்கப்பட்ட நிலையில் கம்பஹா, கண்டி, மாத்தறை ஆகிய பிராந்திய அலுவலகங்களின் கோரல்களைச் செலுத்துதல் தொடர்ந்தும் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது.

தகவல் தொழில் நுட்பப் பிரிவினால் தரவு நிரற்படுத்துதலில் ஏற்பட்ட தேக்கத்தை நீக்குதல் மற்றும் வருடாந்த அங்கத்தவர் கணக்குக் கூற்றுக்களைத் தயாரித்தல் போன்றவற்றிற்கு தேவையான தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

பணிகொள்வோர் ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவுகளை இலங்கை வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி மூலம் இணையத்தினூடாகச் செலுத்துவதற்கான வசதிகள், படிப்படியாக அதிகமான பணிகொள்வோர் ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவுகளை செலுத்துவதற்குப் பயன்படுத்தும் முகமாக வலுப்படுத்தப்பட்டன. அத்துடன், பெரிய வகை பணிகொள்வோர் தமது 'படிவம் II' விபரங்களை காந்த ஊடகங்களுக்கூடாக அனுப்பியமை அவதானிக்கப்பட்டது.

சபையின் பிரிவுகளுக்கும் ஏனைய பிராந்திய அலுவலகங்களுக்கும் இடையில் செயற்பாடுகளை எளிதாக்கும் பொருட்டு, இணையவசதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், ஊ.ந.நிதிய அங்கத்தவர்களுக்கு தமது அங்கத்தவர் கணக்கு நிலுவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் கொழும்பிற்குள்ளும் வெளியேயும் உள்ள பல காட்சி நிலையங்களில் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் தகவல் தொழில் நுட்பப் பிரிவினால் வழங்கப்பட்டுள்ளன.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய வலைகடப்பிடம் புதுப்புதுத் தகவல்களைத் தொடரறா முறையில் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ந்து இற்றைப்படுத்தப்படுகின்றது. மேலும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறந்த செய்முறைகளுக்கு இணைவாக இருப்பதற்கும் தொடரறா முறையில் வசதிகளை வழங்குவதற்கும் எமது முறைமைகளையும் தொழில் நுட்பத்தையும் மேம்படுத்துவதற்கு சபை தொடர்ந்தும் செயலாற்றுகின்றது.

மேலும், தகவல் தொழில் நுட்பம் தொடர்பான விடயங்களில் ஆலோசனைகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் அரசாங்க தகவல் தொழில் நுட்ப முகவரான ICTA யுடன் தொடர்ச்சியான தொடர்பு பேணப்பட்டது.

## ஊ.ந.நி.சபைச் சட்டத் திருத்தம்

1993ஆம் ஆண்டு முதல் ஊ.ந.நி சபைச் சட்டம் திருத்தப்படாமையால், நடப்பிலுள்ள தேவைகளுக்கும் அபிவிருத்திகளுக்கும் இணைவாகச் செல்வதற்கு குறிப்பிட்ட சில திருத்தங்கள் சட்டத்தில் செய்யப்படுதல் அவசியம் என முகாமை தீர்மானித்தது. இதனால், சபை உறுப்பினர்களையும் சிரேஷ்ட அதிகாரிகளையும் கொண்ட விசேட உப கமிட்டி சட்டத்திற்கு அவசியமான திருத்தங்களை ஆராய்ந்து, பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகளை முன்வைத்தது. பின்னர், உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டு நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டன. அதேசமயம், ஆய்விற்கும் கருத்துக்கதைத் தெரிவிப்பதற்கும் இத்திருத்தங்கள் தேசிய தொழிலாளர் ஆலோசகக் கமிட்டிக்கும் (NLAC) அனுப்பி வைக்கப்பட்டன. இப்பிரேரணைகள் NLACஇல் முடிவுக்குக் கொண்டுவரப்படுகின்றன. அதன் பின்னர், நிதி,திட்டமிடல் அமைச்சிற்கு 2013 ஆகஸ்டில் அனுப்பிவைக்கப்பட்டு, அமைச்சரவையின் அனுமதிக்காக முன்வைக்கப்படவுள்ளது.

## ஊ.ந.நி. சபையின் தலைமை அலுவலகத்திற்கான கட்டடம்

(முதலீட்டுச் சொத்துக்கள்) மெய் ஆதனங்களைத் தவிர ஒடுக்கிய சமப்படுத்தல் முறைமைப் பயன்படுத்தி பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடுகள் கணிக்கப்படும். சொந்த உரிமைக் காணி பெறுமானத் தேய்விற்கு உட்படுவதில்லை. கொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகளின் ஏனைய எல்லா உருப்படிகளும் மீது மீதிப் பெறுமானத்தைக் கழித்து, ஏதும் இருப்பின், அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தினுள் அவற்றின் காவுகைப் பெறுமானத்தை பதிவழிப்பதற்கு பெறுமானத் தேய்வு வழங்கப்படுகின்றது. சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| கணினி கருவிகள் | - | 20% |
| ஏனைய கருவிகள் | - | 20% |
| தளபாடங்கள் | - | 15% |
| மோட்டார் வாகனங்கள் | - | 25% |
| பொருத்திகளும் துணைக்கருவிகளும் | - | 33.33% |

சொத்துக்களின் பெறுமானத் தேய்வு அது பாவனைக்கு கிடைக்கும் போது ஆரம்பிக்கின்றது.

**நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதனப் பணிகள்**

எதிர்பார்க்கப்பட்ட பாவனைக்கு இன்னும் தயார் நிலையிலற்ற அனுராதபுரத்தில் உள்ள விடுமுறை பங்களா மற்றும் அலுவலக வளாகம் என்பனவற்றின் நிர்மாணச் செலவினத்தினை நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதனப் பணிகள் பிரதிபலிக்கின்றன.

**1.9 நிதி சாரா சொத்துக்களின் பெறுமதி இழப்பு**

ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியிலும் சபை சொத்தொன்று பெறுமதி இழக்கக் கூடிய அறிகுறிகள் உள்ளதா என மதிப்பீடு செய்யும். ஏதேனும் அறிகுறி இருப்பின், அல்லது ஒரு சொத்திற்கான வருடாந்த பெறுமதி இழப்பு பரிசோதனை தேவைப்படும் போது, சொத்தின் மீளப் பெறக் கூடிய தொகையினை சபை கணிப்பீடு செய்யும். சொத்தொன்றின் மீளப் பெறக்கூடிய தொகையானது, விற்பனைச் செலவுகள் மற்றும் பாவனையில் உள்ள அதன் பெறுமதியைக் கழித்து வரும் ஒரு சொத்தின் கூடிய அல்லது CGU இன் நியாயாமான பெறுமதி ஆகும். ஒரு சொத்தின் அல்லது CGU இன் காவுகைத் தொகை அதன் மீளப் பெறக்கூடிய தொகையை விட அதிகரிக்கும் போது சொத்து பெறுமதி இழந்ததாகக் கருதப்படுவதுடன், அதன் மீளப் பெறக் கூடிய தொகையில் பதிவு செய்யப்படும்.

பாவனையில் உள்ள விலை மதிப்பீட்டுப் பெறுமதியில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள், சொத்திற்கான குறிக்கப்பட்ட இடர்கள் மற்றும் பணத்தின் காலப் பெறுமதி மீதான நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கக் கூடிய வரிக்கு முன்பான தள்ளுபடி வீதத்தினைப் பயன்படுத்தி அவற்றின் நடப்புப் பெறுமதிக்கு தள்ளுபடி செய்யப்படும். விற்பனைச் செலவினங்களைக் கழித்த நியாயமான பெறுமதியினைத் தீர்மானிக்கையில், பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி ஒன்று பிரயோகிக்கப்படும். இம்மதிப்பீடுகள் பன்மடங்கு மதிப்பீடு மற்றும் பகிரங்கமாக வர்த்தகம் செய்யப்பட்ட கம்பனிகளுக்கான குறிக்கப்பட்ட பங்கு விலைகள் அல்லது ஏனைய கிடைக்கக் கூடிய நியாயமான பெறுமதி குறிகாட்டிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சொத்துக்களுக்கு , முன்னர் இனங்காணப்பட்ட பெறுமதி இழப்பு நட்டங்கள் இனிமேலும் இல்லை அல்லது குறைந்துள்ளது என ஏதேனும் குறிகாட்டி உள்ளதா என ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியிலும் மதிப்பீடு மேற்கொள்ளப்படும். அவ்வாறான குறிகாட்டி காணப்படின், சொத்தின் அல்லது CGU இன் மீளப் பெறக்கூடிய தொகையினை சபை மதிப்பீடு செய்யும்.

இறுதி பெறுமதி இழப்பு நட்டம் இனங்காணப்பட்டதிலிருந்து சொத்தின் மீளப் பெறக்கூடிய தொகையினைத் தீர்மானிப்பற்கு பயன்படுத்திய எடுகோள்களில் மாற்றம் ஏற்பட்டிருந்தாலேயே முன்னர் இனங்காணப்பட்ட பெறுமதி இழப்பு நட்டம் திருப்பப்படும். திருப்புதலானது சொத்தின் காவுகைத் தொகை அதன் மீளப் பெறக்கூடிய தொகையை விட அதிகரிக்கவோ தீர்மானிக்கப்பட்ட காவுகைத் தொகை அதிகரிக்கவோ மாட்டாது என்ற விதத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. தேறிய பெறுமானத் தேய்வு கடந்த வருடங்களில் இனங்காணப்பட்டுள்ள பெறுமதி இழப்பு நட்டத்தினைக் கொண்டதில்லை. அவ்வாறான திருப்புகை வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

### 1.10 முதலீட்டுச் சொத்து

கொடுக்கல் வாங்கல் செலவுகள் உட்பட முதலீட்டுச் சொத்தக்கள் ஆரம்பத்தில் செலவில் அளவிடப்பட்டன. ஆரம்ப இனங்காணலின் பிற்பாடு, அறிக்கையிடும் தினத்தில் சந்தை நிலைமைகளைப் பிரதிபலிக்கும் நியாயமான பெறுமதியில் முதலீட்டுச் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலீட்டுச் சொத்துக்கள் மீதான நியாயமான விலையில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் காரணமாக எழக்கூடிய இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அவை ஏற்பட்ட காலப்பிரிவில் வருமானக் கூற்றில் உள்ளடங்குகின்றன.

சபையின் முதலீட்டுச் சொத்து விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ள காவுகைப் பெறுமதியில் உள்ள மாற்றங்களுடன் திறந்த சந்தைப் பெறுமதிக்கு ஒவ்வொரு மூன்று வருடத்திலும் மீள் மதிப்பீடு செய்யப்படும்.

கிடைக்க வேண்டிய வாடகை குத்தகைக்கு விடப்பட்ட காலப்பகுதிக்குள் நேர் கோட்டு முறைமையின் அடிப்படையில் அமைக்கப்படும். வாடகைக் குடியிருப்பாளனுக்கு ஊக்குவிப்பொன்று (வாடகை அறவிடப்படாத காலப்பகுதி போன்ற) வழங்கப்படுகையில், முதலீட்டுச் சொத்தின் காவுகைப் பெறுமதி இவ்வடிப்படையில் வாடகை வருமானமாக இனங்காணப்பட்டதன் விளைவாக பிரத்தியேகமான சொத்தொன்றாக பதியப்பட்ட ஏதேனும் தொகையை நீக்கும்.

### 1.11 அருவச் சொத்துக்கள்

#### 1.11.1 வெளிவாரியாகப் பெறப்பட்ட அருவச் சொத்துக்கள்

பிரத்தியேகமாகப் பெறப்பட்ட அருவச் சொத்துக்கள் ஆரம்ப இனங்காணலின் போது செலவில் அளவிடப்பட்டன. அருவச் சொத்துக்கள் மீதான பின்வரும் ஆரம்ப இனங்காணல்கள், திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அருவச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வரையறுக்கபட்ட அல்லது வரையறுக்கப்படாத விதத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

அருவச் சொத்துக்கு பெறுமதி இழப்பு ஏற்படக் கூடும் என்ற குறிகாட்டி உள்ள போதெல்லாம், வரையறைக்குள்ளான ஆயுட்காலத்தை கொண்ட அருவச் சொத்துக்கள் அவற்றின் பயன்தரு பொருளாதார ஆயுட்கலத்தினுள் கடன் தீர்ப்பனவு செய்யப்படுவதுடன், பெறுமதி இழப்புக்காக மதிப்பீடு செய்யப்படும். வரையறைக்குள்ளான பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்திற்கான கடன் தீர்ப்பனவு காலம் மற்றும் கடன் தீர்ப்பனவு முறைமை குறைந்தபட்சம் ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் மீளாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது சொத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் கொள்வனவின் எதிர்பார்க்கப்பட்ட முறைமை கடன்தீர்ப்பனவு காலம் அல்லது முறையை மாற்றுவதன் மூலம் கணிப்பீடு செய்யப்படுவதுடன், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படும். வரையறைக்குள்ளான ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் மீதான கடன் தீர்ப்பனவு செலவினமானது அருவச் சொத்துக்களின் தொழிற்பாட்டுடனான செலவின வகை இணைக்கப்பாட்டில் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

அருவச் சொத்து ஒன்றின் இனங்காணலை நிறுத்துவதனால் ஏற்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் தேறிய அகற்றுகை வருவாய்களுக்கும் சொத்தின் காவுகைத் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்படுகின்றன. மேலும் சொத்தினை இனங்காணுவதை நிறுத்தும் போது, அது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

**கணினி மென்பொருள் பொதியங்கள்**

கணினி மென்பொருள் பொதியங்களைப் பெறுதல்.்.தரமுயர்த்துதலால் ஏற்படும் தொகை அருவச் சொத்தக்களாக இனங்காணப்படுவதுடன், 3 வருடங்களுக்கு மேலாகக் கடன் தீர்ப்பனவு செய்யப்படும்.

### 1.12 குத்தகைச் சொத்துக்கள்

#### 1.12.1 தொழிற்படு குத்தகை

உடைமையுரிமைக்கு உட்பட்ட கணிசமான அளவு இடர்கள் மற்றும் வெகுமதிகள் ('தொழிற்படு குத்தகை') சபைக்கு மாற்றஞ் செய்யப்படாத போது, குத்தகையின் கீழ் செலுத்த வேண்டிய மொத்த வாடகை குத்தகைத் தவணைக்குள் நேர் கோட்டு முறைமை அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றுக்குச் சாட்டப்படும்.

### 1.13 பொருட்பதிவேடுகள்

கைவிடப்பட்ட மற்றும் மெதுவாக அசையும் உருப்படிகளுக்கு உரிய முற்பணங்கள் தீரக்கப்பட்டதன் பின்னர் பொருட்பதிவேகள் குறைந்தளவிலான செலவிலும் தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதியிலும் மதிப்பிடப்படும்.

### 1.14 இளைப்பாற்று நன்மைச் செலவு

#### 1.14.1 நிலையான பங்களிப்புத் திட்டங்கள்

உரிய சட்ட விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க, சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கு ஊழியர்கள் தகுதியுடையவர்களாவர். ஊழியர்களின் மொத்த வருவாயிலிருந்து 15% மற்றும் 3% இனை முறையே ஊழியர்கள் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை சபை வழங்குகின்றது.

#### 1.14.2 நிலையான நலன்கள் திட்டங்கள் – பணிக்கொடை

ஊழியர் நன்மைகள் - இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS 19 இன் உறுதிப்பாட்டுடன் எல்லா ஊழியர்களினதும் சேவைக்காலத்தின் முதல் வருடத்திலிருந்தே இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறெனினும், 1983இன் பணிக்கொடைக் கொடுப்பனவு சட்ட இல 12இன் கீழ் ஓர் ஊழியருக்கான பொறுப்பு தொடர்ச்சியான ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யும் போதே எழுகின்றது. பொறுப்பானது வெளிவாரியாக நிதியிடப்படுவதில்லை.

நிலையான பங்களிப்புத் திட்டத்திற்கு மாறாக நிலையான நலன்கள் திட்டமானது தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டமாகும். நிலையான இளைப்பாற்றுத் திட்டம் தொடர்பில் தாபனத்தின் தேறிய கடப்பாடு, நடப்பு மற்றும் முன்னைய காலப்பகுதிகளில் ஊழியர்கள் தமது பணிக்காக ஈட்டிய எதிர்கால நன்மை மீதான தொகையை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிக்கப்படுகின்றது. அந்நன்மையானது அதன் நடப்புப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு கழிவீடு செய்யப்படும். இனங்காணப்படாத கடந்த சேவைகள் செலவினங்கள் கழிக்கப்படும்.

கழிவீட்டு வீதமானது அறிக்கையிடும் காலப்பகுதியில் தாபனத்தின் கடப்பாட்டு நிபந்தனைகளைப் பெரிதும் ஒத்திருக்கக்கூடிய முதிர்ச்சி நாட்களைக் கொண்ட உயர் தரக் கூட்டு முறிகள் மீதான வருவாயாகும். மேலும் அவை நன்மைகள் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் அதே நாணயத்தில் குறிக்கப்படும். நிலையான நன்மைகள் கடப்பாடு வருடாந்தம் நெறிப்படுத்தப்பட்ட அலகுப் பற்று முறைமையைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

ஒரு திட்டத்தின் நன்மைகள் விருத்தி செய்யப்படும் போது, ஊழியர்களால் வழங்கப்பட்ட கடந்த சேவை காலம் தொடர்பாக அதிகரிக்கப்பட்ட நன்மையில் ஒரு பகுதி, நன்மைகள் பொறுப்பில் விடப்படும் வரையிலான சராசரி காலப்பகுதிக்குள் நேர் கோட்டு முறைமை அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் இனங் காணப்படும். நன்மைகள் உடனடியாக அளிக்கப்படும் அளவின் படி செலவினம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படும். தாபனமானது நிலையான நலன்கள் திட்டங்களினால் எழும் எல்லா காப்புறுதி இலாபங்களையும் நட்டங்களையும் ஏனைய விபரமான வருமானத்தில் இனங்காண்கின்றது.

இளைப்பாற்று நன்மைகள் கடப்பாடுகளைத் தீர்மானிப்பதில் பயன்படுத்தப்படும் முக்கிய எடுகோள்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| கழிவீட்டு வீதம் | 11% |
| சம்பள உயர்வு வீதம் | 2% |
| இளைப்பாறும் வயது | 60 வருடங்கள் |

**1.15 வரி விதிப்பு**

**1.15.1 நடைமுறை வரிகள்**

விதியாக்கப்பட்டுள்ள அல்லது அறிக்கையிடும் நாளில் பொருத்தமான முறையில் விதியாக்கப்படும் வரி வீதங்களை மற்றும் கடந்த வருடங்களில் செலுத்த வேண்டிய வரிக்கான ஏதேனும் சரிப்படுத்துகைகளைப் பயன்படுத்தி, ஆண்டிற்கான செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் வரி அல்லது வரி அறவிடக்கூடிய வருமானம் அல்லது இழப்பு மீதான வருமதிகளே நடைமுறை வரியாகும்.

**1.16 உரிமைப்பங்கு**

**1.16.1 உறுப்பினர் நிதி**

உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய பங்களிப்பு, ஆண்டிற்குள் அவரக்ளுக்கான சேரும் பங்கிலாபம் மற்றும் வட்டியுடனான தேறிய மீளளிப்புக்கள் உறுப்பினர் நிதியத்தில் உள்ளடங்குகின்றன.

**1.16.2 பங்கிலாபங்கள்**

பங்கிலாபங்களாவன பெறுவதற்கான நிதியத்தின் உரிமை உறுதிப்படுத்தும் போது இனங்காணப்படுகின்றன.

**1.17 ஏற்பாடுகள்**

நிச்சயமற்ற கால முன்னேற்பாடு மற்றும் தொகைகள் மீதான பொறுப்புக்களுக்கான ஏற்பாடுகளை சபை இனங்கண்டுளளது. ஏற்பாடானது அறிக்கையிடும் காலப்பகுதியல் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் செலவினத்தின் மிகச் சிறந்த மதிப்பீட்டில் அளவிடப்படுவதுடன், பொறுப்புக்கான குறிக்கப்பட்ட இடர்கள் மற்றும் பணத்தின் காலப் பெறுமதி மீதான நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கக் கூடிய வரிக்கு முன்பான கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி அவற்றின் நடப்புப் பெறுமதிக்கு கழிவீடு செய்யப்படும்.

**2. முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளும் தீர்வுகளும்**

சபை எதிர்காலம் தொடர்பான குறிப்பிட்ட மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்கின்றது. மதிப்பீடுகளும் தீர்வுகளும் சூழ்நிலைகளின் கீழ் சாதாரணமானவை என நம்பப்படும் எதிர்கால நிகழ்வுகளின் எதிர்பார்க்கைகள் உட்பட மரபு ரீதியான அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுகின்றன. வருங்காலத்தில், உண்மையான அனுபவம் இம்மதிப்பீடுகளிலிருந்தும் ஊகங்களிலிருந்தும் வித்தியாசப்படலாம். அடுத்த நிதி ஆண்டிற்குள்ளான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் காவுகைத் தொகைகளில் ஏற்படுத்தும் பருப்பொருள் சரிப்படுத்துகை காரணமாக முக்கியமான பாதிப்பினைக் கொண்டுள்ள மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டுள்ளன.

**மதிப்பீடுகளும் எடுகோள்களும்**

**(அ) முதலீட்டுச் சொத்தின் விலை மதிப்பீடு**

தாபனம் அதன் முதலீட்டுச் சொத்துக்களுக்கான நியாயமான பெறுமதியினை தீர்மானிப்பதற்காக வெளிவாரி மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்படும் விலை மதிப்பீடுகளைப் பெறுகின்றது. இவ்விலை மதிப்பீடுகள் எதிர்கால வாடகை வருமானம், எதிர்பார்க்கப்படும் பராமரிப்புச் செலவினங்கள், எதிர்கால அபிவிருத்திச் செலவினங்கள் பொருத்தமான கழிவீட்டு வீதம் ஆகியவை உட்பட எடுகோள்களின் அடிப்படையில் அமையும். விலை மதிப்பீட்டாளர் அதற்கு ஒத்த சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல் விலைகளின் சந்தை ஆதாரத்தினை மேற்கோளாக எடுப்பார்.

**(ஆ) நிதிசார் சாதனங்களின் நியாயமான பெறுமதி**

தாபனம் விலை மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி விலை குறிக்கப்படாத நிதிசார் சாதனங்களின் நியாயமான பெறுமதியினைத் தீர்மானிக்கும். கழிவீட்டு வீதங்கள் மற்றும் எதிர்கால காசுப் பாய்ச்சல் மீதான மதிப்பீடுகள் உட்பட பயன்படுத்தப்பட்ட எடுகோள்களால் அந்நுட்பங்கள் குறிப்பிடத்தக்களவில் பாதிக்கப்படலாம். அவ்வகையில், சாராத சந்தைகளுடன்

ஒப்பீடு செய்வதால் வழிவந்த நியாயமான பெறுமதி மதிப்பீடுகள் எப்போதும் உறுதிப்படுத்த முடியாது போவதுடன், பல சந்தர்ப்பங்களில், உடனடியாக பணமாக்க இயலாத நிலை ஏற்படக் கூடும்.

**(இ) சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகளுககான பயன்தரு ஆயுட்காலம் மற்றும் மீதிப் பெறுமதிகள் ஏற்றதாக இருத்தல்.**

தாபனம் ஆயுட்காலம் மற்றும் மீதிப் பெறுமதி மதிப்பீடுகள் என்பன அதன் கணக்கியற் கொள்கைக்கு இணங்குவதாக உள்ளனவா என வருடாந்தம் பரிசீலிக்கும்.

## 3. நிதிசார் சாதனங்கள் – இடர் முகாமைத்துவம்

**இடர் முகாமைத்துவ அமைப்பு**

சபை அதன் எல்லா வர்த்தகச் செயற்பாடுகளிலும் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், ஒழுங்கமைப்பு வழிகாட்டிகள், உள்ளகக் கட்டுப்பாடுகள், அனுமதிக்கப்பட்ட கொள்கைகள் ஆகியவற்றுடன் சபையின் இணக்கப்பாட்டினை அடைவதற்கான இணங்கல் தொழிற்பாடு ஒன்றைக் கொண்டுள்ளது.

பொதுவாக ஏனைய அனைத்து வியாபாரங்களுடனும் சபை அதன் நிதிசார் சாதனங்களைப் பயன்படுத்தவதன் காரணமாக எழக்கூடிய இடர்களுக்கு ஆளாகுகின்றது. இக்குறிப்பு சபையின் நோக்கங்கள், கொள்கைகள், அவ்விடர்பாடுகளை முகாமை செய்வதற்கான செயல்முறைகள், அவற்றை அளவிடுவதற்குப் பயன்படுத்தும் வழிமுறைகள் என்பனவற்றை விவரிக்கும். மேலும் இந்நிதிக் கூற்றுக்கள் பூராகவும் இந்த இடர்கள் தொடர்பான தொகைத் தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் சபையின் நோக்கங்கள், கொள்கைகள், அவ்விடர்பாடுகளை முகாமை செய்வதற்கான செயல்முறைகள், அவற்றை அளவிடுவதற்குப் பயன்படுத்தும் வழிமுறைகள், நிதிசார் சாதனங்களின் இடர்பாடுகளுக்கு சபையின் உட்படுகை ஆகியவற்றில் பிரத்தியேகமான மாற்றங்கள் இருந்ததில்லை என்பதுடன் அப்படி இல்லாவிடின் அவை தவிர்ந்த ஏனையவை குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3.1 கொடுகடன் இடர் நேர்வு

கொடுகடன் இடர் நேர்வானது சபை அதன் வாடிக்கையாளர்கள் அல்லது துணைத்தரப்பினர் தமது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தவறும் போது ஏற்படும் நட்டத்திற்கு சபை ஆளாகும் இடராகும்.

## 3.2 பெறுமதி இழப்பு மதிப்பீடு

கணக்கியல் நோக்கங்களுக்காக, பெறுமதி இழந்த நிதிச் சொத்துக்கள் மீதான நட்டங்களின் இனங்காணலுக்காக சபை ஆட்கொள்ளும் நட்ட மாதிரியொன்றை பயன்படுத்துகின்றது. அதாவது, குறிப்பிட்ட ஒரு நட்ட நிகழ்வின் உண்மையான ஆதாரம் அவதானிக்கப்படுகின்ற போதே நட்டங்கள் இனங்காணப்படலாம். அதற்கு உந்துததல் அளிக்கும் விடயங்களில் உள்ளடங்குபவை பின்வருமாறு:

- வாடிக்கையாளரின் முக்கியமான நிதிசார் தடங்கல்கள
- கொடுப்பனவு தவறுதல் போன்ற ஒப்பந்த மீறல்
- வாடிக்கையாளர் நிதிசார் தடங்கலுக்கு முகங்கொடுப்பதன் காரணமாக சபை வாடிக்கையாளருக்கு சலுகை வழங்கும் போது
- வாடிக்கையாளர் பொருளாதார முறிவுக்கு அல்லது ஏனைய நிதிசார் மீளமைப்புக்களுக்கு ஆளாகுவது சாத்தியமாதல்
- fடன்களிலிருந்து மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் குறைவினைத் தெரிவிக்கும் தரவுகளை அவதானிக்க முடிதல்.



# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

## மற்றும் சபையின் அவதானிப்புகள்

2013

LS/D/ETF/FA/13 2015 ஜுலை 15

## தலைவர்,
## ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை

ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள்தொடர்பாக 1980ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச் சட்டத்தின் 10(7) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்துடன் முடிவுற்ற வருடத்திற்கான முழுமையான வருமானக்கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் பணப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தும் தகவல்கள் ஆகியவற்றின் சாராம்சத்துடன் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்று தொடர்பான 1980ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 10(7) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் மற்றும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1:2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றானது இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கமைய தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய இயன்றவரை பிழையான கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் கருதும் உள்ளகக் கட்டுபாட்டைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1:3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் பற்றிய அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் அதிசிறந்த கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு(ஐளுளுயுஐ 1000 - 1810) இணைவாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய எனது கணக்காய்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஒழுக்கநெறி முறைகளுக்கு நான் கட்டுப்பட்டு செயற்படுவதனையும் நிதிக்கூற்றுக்கள் கூடியவரை பிழையான கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் காணப்படும் பெறுமதிகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றிற்கு உதவும் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்விற்குள் உள்ளடக்குகின்றன. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள், மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பிறழ்வுத் தன்மையின் பாதிப்பினை மதிப்பீடு செய்து உள்ளடக்குவது கணக்காய்வாளரின் தீர்வின் அடிப்படையிலாகும். அப்பாதிப்புக்களை மதிப்பீடு செய்யும்போது நிலைமைகளிற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு சபையின் நிதிக்கூற்றினைத் தயாரித்து மற்றும் நியாயமானதாக சமர்ப்பிப்பதற்கு உரியவாறு உள்ளக நிர்வாகத்தினை கணக்காய்வாளர் கவனத்திற் கொள்வாரேயொழிய ஆனால் சபையின் உள்ளக நிர்வாகத்தின் செயற்றிறன் பற்றிய அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கான கருத்தாக அமையாது. முகாமைத்துவத்தினால் பின்பற்றப்படுகின்ற கணக்காய்வுக் கோட்பாடுகளின் பொருத்தப்பாடுகளையும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான பெறுமதிகளையும் நிதிக்கூற்றுக்களில் மொத்தமாக சமர்ப்பித்தல் பற்றிய மதிப்பீடு ஆகியவையும் கணக்காய்விற்குள் உள்ளடங்குகின்றது. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அளவினைத் தீர்மானிப்பதற்கு 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 10(1)ஆம் பிரிவின் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனது தரப்படுத்தப்பட்ட கன்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதன் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.4 தரப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் தரப்பபடுத்தப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 தரப்படுத்தப்பட்ட அபிப்பிராயம்

இவ் அறிக்கையின் 2.2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர 2013 டிசம்பர் 31 ஆம் திகதி ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்துடன் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் பணப் பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கமைய உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகள்பற்றி நிதிக்கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் பற்றி கருத்துரைகள் தெரிவித்தல்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

**கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல 39இன் பிரகாரம் அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் நிதிச் சொத்தொன்று அல்லது சொத்துக்கள் தொகுதியொன்று சேதத்திற்கு உள்ளானதா என்பதற்கு ஏதேனும் விடய அடிப்படையிலான காரணிகள் இருக்கினறனவா என மதிப்பீடு செய்யப்பட வேண்டி இருந்ததுடன்,ஒவ்வொரு முதலீடு குறித்தும் இடர் மதிப்பீடும் செய்ய வேண்டி இருந்தது. எனினும் அதற்கு மாறாக சந்தை விலை வீழ்ச்சி அடைந்ததை அடிப்படையாகக் கொண்டு பங்குச் சந்தை முதலீடுகளில் 2013 ஜனவரி 01ஆந் திகதியன்று 1,506,639,000 ரூபா மற்றும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியன்று 129,129,000 ரூபா என்ற வகையில் மொத்தம் 1,635,768,000 ரூபா கொள்வனவு செய்த பங்குகளில் ஆகுசெலவிற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறே பங்கு விலையினை பதிவழிக்கையில் 2002ஆம் ஆண்டு முதல் காணப்படும் சபையின் முதுலீட்டுத் தொகுதி உரிய முறையில் இனங்காணப்படாது இலாபநட்டம் மூலம் நியாயமான பெறுமதிக்கு என்ற வகைப்படுத்தலின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் ஆகுசெலவு 183,067,000 ரூபாவான நிலையான சொத்துக்களுள் ஏறத்தாழ 25 வருட காலமாக குறைந்து செல்லும் மீதி முறையின் கீழ் குறைவடைந்துக் கொண்டிருப்பதும் மேலும் பாவனைக்கு எடுக்கப்படும் சொத்துக்கள் காணப்படினும், அதன் நியாயமான பெறுமதியினைக் காட்டுவதற்காக இலங்கை கணக்கீட்டு நியம இல 16இன் 34ஆவது பிரிவின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இல 24இன் பிரகாரம் சபையின் பணிப்பாளர் சபை மற்றும் முகாமைக்கு உரிய சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 2.2.2 தொடர் நிலைப்பாடு

சபையினால் அங்கத்தவர்களுக்கு பெற்றுக் கொடுத்த கட்டாய நூற்றுக்கு 3 வட்டியைத் தவிர குறிப்பிடப்பட்ட வருடாந்த நலன்களின் விகிதம் 2011 ஆட ஆண்டு முதல் நூற்றுக்கு 7 ஆக மாறாத நிலையில் பேணப்பட்டிருந்தது. இந்த பங்கிலாப நலன்களை வெளியிடுவதற்குப் போதியளவு வருடாந்த செயற்பாட்டு மிகை சபையிடம் இல்லாதிருந்தமையால் 2011ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரை முறையே 746 மி.ரூபா, 2089 மி. ரூபா, 446 மி. ரூபா கடந்த வருடங்களில் பங்கிலாப சமப்படுத்தும் தொகுதியிலிருந்து மற்றும் தடுத்துவைக்கப்பட்ட பங்கிலாபங்களிலிருந்து தேவையான ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2.2.6 பந்தியில் குறிப்பிட்டுள்ள படி 2,596 மி.ரூபாவான காசாக்கப்படாத இலாபம் மீளாய்வாண்டின் போது பங்கிலாபக் கொடுப்பனவிற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலைமையின் கீழ் இந்நிதியம் படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளமை புலனாகின்றது.

#### 2.2.3 அங்கத்துவக் கணக்குகளில் வரவு வைக்கப்படாத பங்களிப்புப் பணம்

2013 டிசம்பர் 31ஆம் திகதியில் அங்கத்துவ நிதியக் கணக்கின் மீதி 174,252 மி.ரூபாவென நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருப்பினும், அத்தினத்தில் உண்மையாக அங்கத்துவக் கணக்குகளில்

வரவு வைக்கப்பட்ட பணம் 151,948 மி.ரூபாவாகும். இத்தினத்தில் நிதியத்திற்கு கிடைக்கப் பெற்ற, எனினும் 2014 யூன் 17ஆந் திகதி வரையில் அங்கத்துவ கணக்குகளிற்கு வரவு வைக்கப்படாத பணம் 22,304 மி. ரூபாவாகும். இப்பணத்தில் 9,496 மி. ரூபாவானது கடந்த 33 வருடங்களாக கிடைக்கப் பெற்றுள்ள போதும், 2014யூன் 17ஆம் திகதி வரை அங்கத்துவக் கணக்குகளிற்கு வரவு வைக்கப்படாதுள்ள அங்கத்துவ பங்களிப்பு பணமாகும். மிகுதி 12,808 மி. ரூபா பணமானது மேற்குறித்த பெற்றுக்கொண்ட பங்களிப்பு பணத்திற்குரிய அங்கத்துவக் கணக்குகளிற்கு வரவு வைக்க வேண்டியுள்ள வட்டிப் பணமாகும். 2014 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் அங்கத்துவக் கணக்கில் வரவு வைக்கப்படாத, இப் பணம் பற்றிய காலப் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| பெற்றுக் கொண்ட, ஆனால் அங்கத்துவக் கணக்குகளில வரவு வைக்கப்படாத மீதியின் கால வகுப்பாயிடை | இதுவரை கணக்கில வைக்கப்படாத பங்களிப்புப் பணம் மில்லியன் ரூபா |
|---|---|
| 1 இலிருந்து 5 வருடங்கள் வரை | 7,553 |
| 5 இலிருந்து 10 வருடங்கள் வரை | 814 |
| 10 இலிருந்து 15 வருடங்கள் வரை | 425 |
| 15 இலிருந்து 20 வருடங்கள் வரை | 231 |
| 20 இலிருந்து 25 வருடங்கள் வரை | 215 |
| 25வருடங்களுக்கு மேல் | 258 |
| **மொத்தம்** | **9,496** |

கடந்த வருடத்தில் அங்கத்தவர் கணக்குகளில் வரவு வைக்கப்படாத மீதி 4,100 மி. ரூபாவாக இருந்ததுடன்,அது மீளாய்வாண்டின் போது 9,496 மி. ரூபா வரை அதிகரித்திருந்தமை வருடாந்தம் அங்கத்தவர் நிதியக் கணக்கில் பங்களிப்புத் தொகையாக கிடைக்கும் ஆனால் அங்கத்தவர் நிதியக் கணக்கில் வரவு வைக்கப்படாத தொகை ஒவ்வொரு வருடத்திலும் அதிகரித்துச் சென்றிருப்பது அவதானிக்க முடிந்த போதும் அதனைச் சீர் செய்வதற்கு போதிய கவனஞ் செலுத்தாதுள்ளமை அவதானிக்க முடிந்தது.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

(அ) நிதியச் சட்டத்தின் பிரகாரம் மொத்த முதலீட்டு ஈட்டலில் வருடாந்தம் நூற்றுக்கு 3ஐயும் விடக் குறையாத வட்டித் தொகையொன்றை நிதிய அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளில் வரவு வைக்கப்பட வேண்டினும் மீளாய்வாண்டின் போது 4,752,333,000 ரூபாவான நூற்றுக்கு 3 வட்டித் தொகை செயற்பாட்டுச் செலவாக கணக்கு வைக்கப்படாமை காரணமாக மீளாய்வாண்டில் செயற்பாட்டு மிகை 4,752,333,000 ரூபாவால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மூலதன இலாபமாக விபரமான வருமானக் குற்றில் வரவு வைக்கப்பட்டிருந்த 171,962,000 ரூபா தொகை 2013 ஜனவரி 01ஆந் திகதியில் ஆகுசெலவிற்குரிய விதத்தில் கணக்கு பார்க்கப்பட்ட இலாபமொன்றல்ல என்பதால் மீளாய்வாண்டின் போது விபரமான வருமானம் தவறாக இருந்தது.

(இ) மூடப்பட்ட 02 நிறுவனங்களின் மற்றும் உத்தியோகப்பூர்வ பட்டியலில் இருந்து அகற்றப்பட்ட நிறுவனமொன்றின் 803,270 பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட 29,293,854 ரூபா கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு அனுமதிப் பெறாமல் அதற்கு உரிய ஏற்பாடுகளுக்கு ஈடுசெய்யப்பட்டுள்ளதால் அம்முதலீடு ஐந்தொகையில் நிதிச் சொத்துக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஈ) கடந்த வருடத்திற்கு உரிய வரிகளைப் பெற்றுக் கொள்ளல், வரி மேலதிக ஏற்பாடுகள் மற்றும் அங்கத்தவர் கணக்குகளைச் சரிப்படுத்தல் 454,624,000 ரூபா.......... சரிப்படுத்துவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் போது வருமானமாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

### 2:2:5 போதியளவு அதிகாரம் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 1980 ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 14ஆவது கூற்றின் பிரகாரம் நிதியத்தின் முதலீட்டினால் பெற்றுக்கொண்ட இலபாங்களினால் பங்கிலாபம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். எனினும், 2013 திசெம்பர் 31ஆந் திகதியில் இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி முறிகளில் முதலீடு செய்யப்பட்ட 137,546,313,369 ரூபாவிற்கு மீளாய்வாண்டின் போது கிடைக்க வேண்டியிருந்த உண்மையான வட்டி வருமானமான 10,251,865,269 ரூபா மீளாய்வாண்டில் அங்கத்தவர் பங்கிலாபத்தினைச் செலுத்துவதற்கு பயன்படுத்துவதற்குப் பதிலாக சட்ட விதிமுறைகளுக்கு எதிராக 12,847,398,332 ரூபாவான விளைபயன்மிகு வட்டியைப் பயன்படுத்துவதன் மூலம்

2,595,533,063 ரூபா காசாகாத இலாபம் அங்கத்தவர் பங்கிலாபத்தினைச் செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

**கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்விற்கான சான்றுகள் கணக்காய்விற்கு அனுப்பிவைக்கப்படவில்லை.**

(அ) 2013 ஜனவரி மாதம் 01ஆந் திகதியில் நிதியச் சபை பங்குச் சந்தையில் 109,134,215 பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட 8,085,181,220 ரூபா முதலீட்டிற்கான பங்கு ஆகுசெலவிற்கு தயாரிக்கப்பட்ட அறிக்கை

(ஆ) 2013 திசெம்பர் 31ஆந் திகதியில் 409,742,000 ரூபா நிலையான சொத்துக்கள் பௌதிக ரீதியாக உறுதிப்படுத்தும் பொருட்பதிவுக் கணிப்பீட்டு அறிக்கை

(இ) சபையின் முதலீட்டுக் கொள்கைக் கூற்று பொதுத் திறைசேரியின் அனுமதியிற்கு இணங்க இருக்கவில்லை. எவ்வாறெனினும், 1,635,768,000 ரூபாவான முதலீட்டுப் புத்தகங்களிலிருந்து பதிவழித்தல் மற்றும் நட்டத்திற்கு பங்குகளை விற்பனை செய்வதற்கு உரிய அமைச்சரின் இணக்கத்துடனான பொதுத் திறைசேரியின் அனுமதி

### 2.3 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

(அ) 1995ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டு வரும் உரிமைக் கோரப்படாத மரண நலன்கள் 8,597,637 ரூபா 2001 ஆம் ஆண்டிலிருந்து காணப்படும் தடுத்துவைக்கப்பட்ட 13,969,151 ரூபா தொகை நலன்கள் விண்ணப்பிக்கப்படாத 5,182,506 நலன்கள் மற்றும் தபால் திணைக்களத்திலிருந்து காசுக் கட்டளைகளில் இருந்து கிடைத்த பங்களிப்புத் தொகை 3,647,232 ரூபா என்பதாக மொத்தம் 31,396,526 ரூபாவான அங்கத்தவர் தொகை மீளாய்வாண்டில் திசெம்பர் 31ஆந் திகதியாகியும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை சபை மேற்கொண்டிருக்கவில்லை.

### 2:4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கபாடின்மை

கீழே குறிப்பிட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணக்கப்பாடில்லாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கபாடின்மை |
|---|---|
| அ) Circulars and letters from the Department of Management Services | |
| i) 2013 பெப்ரவரி 05ஆந் திகதியிட்ட இல. டீஎம்எஸ்/சீ2/2/42 ஐக் கொண்ட கடிதத்தின் 02ஆவது பந்தி | முகாமைத்தவச் சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு வழிமுறைகளுக்கு எதிராக பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட புதிய சம்பளத் திட்டம் 2013 மே 01ஆந் திகதியில் இருந்து செயற்படுத்தப்பட்டிருந்தது. |
| ii) 2012 யூலை 12ஆந் திகதியிட்ட இல. டீஎம்எஸ்/சீ2/2/42 ஐக் கொண்ட கடிதத்தின் 02ஆவது பந்தி | பணிப்பாளர் சபை செயலாளர் பதவியினை இரத்துச் செய்திருந்த போதும், அதாற்கு மாறாக பணிப்பாளர் சபையினால் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்ட பணிப்பாளர் சபை செயலாளரின் ஒப்பந்த காலம் உரிய தரப்பினரிடம் பெற்ற முறையான அனுமதியின்றி 2012 ஒக்டோபர் முதல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. |
| iii) 2013 திசெம்பர் 09 ஆந் திகதியிட்ட இல 2013/01 (1) கொண்ட முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் 43 ஆவது பிரிவு | சுற்றறிக்கைக்குமுரணாகஅமைச்சரவையின் அனுமதியின்றிமீளாய்வாண்டின் போதுசபையின் ஊழியர்களுக்கு 58,847,962 ரூபா மிகை ஊதியம் செலுத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| ஆ) | பொது முயற்சிகள் அரச நிர்வாகச் சுற்றறிக்கைகள் மற்றும் பொது முயற்சிகள் தொடர்பில் கூட்டக் குறிப்புக்கள | |
| | i) 1998 மார்ச் 18ஆந் திகதியிட்ட இல 130ஐக் கொண்டபொதுமயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை, 1997 நவம்பர் 19ஆந் திகதியிட்ட இல 26/47 ஐக் கொண்டபொதுநிர்வாகச் சுற்றறிக்கைமற்றும் 2011 ஒக்டோபர் 18 திகதியிட்ட இல 56ஐக் கொண்டபொதுமுயற்சிகள் தொடர்பிலானசெயற் குழுக் கூட்டக்குறிப்பின் 19ஆவது பந்தி | 4.2% ஊழியர் கடன் வட்டி வீத அடிப்படையில் கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சபை ஊழியர்களுக்கு கடன் வழங்கப்படலாகாதெனக் குறிப்பிட்டுள்ள போதும் அதற்கு முரணாக மேற்படி வட்டி வீத்திலும் அதற்குக் குறைவான வட்டி வீதத்திலும் ஊழியர் கடன் வழங்கப்பட்டுள்ளது. 2012 டிசம்பர் 31ஆம் திகதிவரை மேற்படி வட்டி வீத அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள 413,101,257 ரூபா கடன் மீதியானது அறவிடப்பட வேண்டியுள்ளது<br><br>இக்கொடுப்பனவுகளை இடைநிறுத்துவதனால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்புநிதியத்திற்குமுகங் கொடுக்கவேண்டியுள்ள இடைஞ்சலைக் கவனத்திற் கொண்டு இதற்கானநிதிமற்றும் திட்டமிடல் அமைச்சரின் அனுமதிபெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக 2014 நவம்பர் 10 திகதியிட்டகடிதம் மூலம் பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளர் அறிவித்துள்ளதாகதலைவர் அவர்கள் எனக்குஅறிவித்துள்ளார். |
| | ii) 2003 யூன் 06ஆந் திகதியிட்ட இல பீஈடீ 12ஐக் கொண்டபொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7ஆவது பிரிவு | மீளாய்வாண்டிற்குஉரிய 2,083,969 ரூபாஉழைக்கும் போதுசெலுத்தும் வரித் தொகைஉத்தியோகத்தர்களின் தனிப்பட்டஈட்டலில் இருந்துஅறவிடாதுசபையின் நிதியத்தினால் உள்நாட்டு இறைவரித்திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது |
| | iii) 2007 ஒக்டோபர் 02ஆந் திகதியிட்ட இல பீஈடீ 45ஐக் கொண்டபொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7ஆவது பிரிவு | கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் முன் வைத்தல் தொடர்பில் முகாமையின் பொறுப்புகுறித்த கூற்றுநிதிக் கூற்றுக்களில் காட்டப்படவில்லை. |
| | iv) 2000 ஜனவரி 11ஆம் திகதியிடப்பட்ட பீஎப்/பீஈ 5ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2011 ஒக்டோபர் 18ஆம் திகதி இடம்பெற்ற 56ஆம் இலக்க பொது முயற்சிகள் பற்றிய செயற்குழு கூட்டக் குறிப்பின் 16ஆம் பிரிவு | பொது முயற்சிகள் செயற்குழுவின் கட்டளைக்கு முரணாக மற்றும் பொதுத் திறைசேரியின் அனுமதியின்றி மீளாய்வாண்டின் போது 83,529,063 ரூபா ஊழியர் ஊக்குவிப்புக் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டுள்ளது.<br><br>இக்கொடுப்பனவுகளை இடைநிறுத்துவதனால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்புநிதியத்திற்குமுகங் கொடுக்கவேண்டியுள்ள இடைஞ்சலைக் கவனத்திற் கொண்டு இதற்கானநிதிமற்றும் திட்டமிடல் அமைச்சரின் அனுமதிபெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக 2014 நவம்பர் 10 திகதியிட்டகடிதம் மூலம் தொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளர் அறிவித்துள்ளதாகதலைவர் அவர்கள் எனக்குஅறிவித்துள்ளார். |
| இ) | 1963 திசெம்பர் 12 திகதியிட்ட இல 1024/600/29 சீடீஐக் கொண்டதிறைசேரி சுற்றறிக்கை | 1999ஆம் ஆண்டிலிருந்துசெயற்படும் நிதிச் செயற்பாட்டு முறைமைக் கோப்பிற்காக திறைசேரியின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3:1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக சபையின் செயற்பாடு நடவடிக்கைகளின் செயற்பாட்டு விளைவு 15,368 மி.ரூ மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகையானது 12,148 மி.ரூபா என்பதால், மீளாய்வாண்டின நிதிசார் விளைவுகளில் 3,220 மி.ரூபா அதிகரிப்பு காணப்பட்டது. எவ்வாறெனினும், இவ்வறிக்கையில் மற்றும் 2.2.4 (அ) மற்றும் 225இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருடத்தின் மிகைக்கு சரிப்படுத்தப்படின், 15,368 மி.ரூபாவான மிகை 7,348 மி.ரூபாவால் அதாவது 48மூ ஆல் குறைவடைய நேர்ந்திருக்கும்.

### 3:2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

நிதியத்தில் அங்கத்தவர்களினது மொத்த உரிமையாண்மை,அவ்வுரிமைகளுக்குரிய மொத்தப் பங்களிப்பு மற்றும் திரண்ட வட்டிஎன கடந்த 06 வருடங்களாக பிரிந்து சென்ற விதம் கீழ்வரும் அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | மொத்தப் பங்களிப்பு | திரள்வட்டி | திசெம்பர் 31ஆந் திகதியில் அங்கத்தவர்களின் உரிமையாண்மை |
|---|---|---|---|
| | மில்லியன் ரூ. | மில்லியன் ரூ. | மில்லியன் ரூ. |
| 2008 | 44,301 | 44,568 | 88,869 |
| 2009 | 49,834 | 53,223 | 103,057 |
| 2010 | 56,616 | 63,236 | 119,852 |
| 2011 | 64,054 | 71,432 | 135,486 |
| 2012 | 72,773 | 80,858 | 153,631 |
| 2013 | 82,653 | 91,599 | 174,252 |

மேற்படி தகவல்களின்படி 2013ஆம் ஆண்டு வரை சபையின் அங்கத்தவர்களின் முழு உரிமையாண்மையில் நூற்றுக்கு 47 வீதமானது பங்களிப்புத் தொகையாக இருப்பதுடன் நூற்றுக்கு 53 வீதமானது திரள்வட்டியாகவும் இருந்தது. அதேபோல 2012ஆம் ஆண்டுடன் 2012ஆம் ஆண்டினை ஒப்பீட்டுப் பார்க்கும்போது 2012இல் அங்கத்தவர்களின் முழு உரிமையாண்மை நூற்றுக்கு 13.42 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் அவ்வருடத்தில் மொத்தப் பங்களிப்பானது நூற்றுக்கு 12.54 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

கீழே தரப்பட்டுள்ள பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | துல்லியமான எண்ணிக்கை | நிதிச் செயற்பாட்டிற்கு உரிய எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| தனியார் மற்றும் அரசுசார் துறையில் சேவையில் ஈடுபட்டுள்ளோர் | 3,661,132 | 2,200,000 | 60.09% |
| தொழில் வழங்குநர் | 252,540 | 72,145 | 28.57% |
| நிதியத்தின் அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்லியன்) | 10.0 | 2.2 | 22% |

**மூலம் : இலங்கைமத்தியவங்கிஅறிக்கை 2013**

2013 இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் படி 2013 வருட இறுதியில் இலங்கை தொழிலில் ஈடுபட்டுள்ளோரில் சுயதொழிலில் ஈடுபட்டுள்ளோர் 2,710,596 என பதிவு செய்யப்பட்ட போதிலும், அவர்களை நிதியதிதல் அங்கத்தவர்களாக இணைத்து சலுகைகள் வழங்குவதற்கு போதிய வேலைத்திட்டம் எதுவும் சபையால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடந்த 6 வருட கால எல்லைக்குள் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையால் செயற்படுத்தப்பட்ட புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டத்திற்குரிய தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | நிதியத்திற்கு பங்களிப்புச் செய்துள்ள அங்கத்தவர்கள் எண்ணிக்கை | மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பெற்றுக்கொண்ட அங்கத்தவர்கள் எண்ணிக்கை | ஆண்டு 5 புலமைப்பரிசில் செலவினம் (ரூபா) | உயர்தரப் புலமைப்பரிசில் செலவினம் (ரூபா) | மொத்தப் புலமைப்பரிசில் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 2008 | 2,100,000 | 2,497 | 26,084,760 | - | 26,084,760 |
| 2009 | 2,100,000 | 3,000 | 46,811,006 | - | 46,811,006 |
| 2010 | 2,100,000 | 3,000 | 45,385,680 | - | 45,385,680 |
| 2011 | 2,100,000 | 6,669 | 74,051,599 | 23,640,000 | 97,691,599 |
| 2012 | 2,200,000 | 6,962 | 75,775,685 | 23,604,000 | 99,379,685 |
| 2013 | 2,200,000 | 6,982 | 84,124,844 | 17,888,234 | 102,013,078 |
| | **2,200,000** | **29,110** | **352,233,574** | **65,132,234** | **417,365,808** |

கடந்த 6 வருட கால எல்லைக்குள் 2,200,000 மொத்த அங்கத்தவர்களிற்குச் சொந்தமான நிதியத்தில் 29,110 நபர்களுக்கு மட்டும் இவ்வகையான புலைமைப்பரிசில்கள் வழங்குவதற்கு சபை செயற்பட்டதுடன் கல்விச் செயற்பாட்டினை மேற்கொள்ள இயலாத அங்கத்தவர்களின் பிள்ளைகளிற்கு கல்விச் செயற்பாட்டினை உயர்த்துவதற்கான செயற்றிட்டம் பற்றி மீளாய்வாண்டு இறுதி வரை சபை கவனம் எடுத்துக்கொண்டதில்லை.

(இ) 2013 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் சபையின் படி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை செயற்படு கணக்குகள் மற்றும் தொழில்தருநர் எண்ணிக்கை ஆகிய செயற்படு எண்ணிக்கை தரவுகள் ஊழியர் சேமலாப நிதியத்தின் செயற்படு தரவுகளுடன் ஒப்பிட்டு கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | ஊழியர் சேமலாபநிதியத்தின் படி | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்புநிதியத்தின் படி | வித்தியாசத்தின் வீதம் |
|---|---|---|---|
| மொத்தஅங்கத்தவர் எண்ணிக்கை | 14,987,000 | 10,000,000 | 67 |
| தற்போதுபங்களிப்புத் தொகைஅனுப்பப்படும் செயற்படுகணக்குகளின் எண்ணிக்கை | 2,350,000 | 2,200,000 | 94 |
| தொழில்தருநர்களின் எண்ணிக்கை | 70,392 | 72,145 | 102 |
| 2013 இல் செலுத்தப்பட்டநலன்கள் வீதம் வட்டியுடன் நூற்றுக்கு | 11.0 | 10.0 | 91 |

**மூலம் : இலங்கைமத்தியவங்கிஅறிக்கை 2013**

சபைக்குபுதியஅங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் போது ஊழியர் சேமலாப நிதியத்தினை விடக்கூடுதலான பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளவேண்டிய போதும், மீளாய்வாண்டின் இறுதியின் போது சபை அவ்விலக்கினை அடைந்து கொள்ளவில்லை.

## 4.2 முதலீடுகளும் முதலீட்டு வருமானமும்

இது சம்பந்தமாக கீழே தரப்பட்டுள்ள அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 நிறுவனங்களில் இருந்துவருடத்திற்கும் அதற்குமுன்னரானகாலப்பகுதிக்கும் கிடைக்கவேண்டிய 27,497,905 ரூபா வானதொகுதிக் கடன் வட்டி மீளாய்வாண்டில் திசெம்பர் 31ஆந் திகதியிலும் சபைக்கு கிடைக்கவில்லை.

(ஆ) 04 நிறுவனங்களின் பட்டியலிடப்பட்டதொகுதிக் கடன்களில் 2006ஆம் ஆண்டில் முதலீடு செய்திருந்த 7,450,259 ரூபா 2007 திசெம்பர் 09ஆந் திகதியில் காசாக வேண்டியிருந்தும், அத் தொகுதிக் கடனுக்கான2013 திசெம்பர் 31ஆந் திகதியாகியும் மீளப் பணம் கிடைத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் 06 நிறுவனங்களின் பங்குகள் ஆகுசெலவைவிட குறைந்த விலைக்கு விற்பனை செய்ததால் 22,334,639 ரூபாநட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) கனினி நிறுவனமொன்றின் 188,800 பங்குகள் கொள்வனவு செய்வதற்காக சபையினால் 2,076,800 ரூபா முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், அந்நிறுவனத்தின் திரவத்தன்மை தொடர்ந்தும் வீழ்ச்சி அடைந்தமை 2012/13 நிதிஆண்டின் போது 478 மி.ரூபா நட்டம் அடைந்துள்ளமை ஆகிய காரணங்களால் குறிப்பிட்ட நிறுவனத்தைத் தொடர்ச்சியாக நடாத்திச்செல்லும் குறிப்பிடத்தக்க அளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக அந்நிறுவனத்தின் கணக்காய்வாளர்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்ததால் அதில் முதலீடு செய்துள்ள பணத்தினை மீளப் பெற்றுக் கொள்வதில் நிச்சயமற்றதன்மை காணப்பட்டது.

(உ) 2011, 2012 மற்றும் 2013ஆம் ஆணடுகளில் பங்குச் சந்தையில் செய்யப்பட்ட முதலீடு, முதலீட்டினால் பெற்ற வருமானம் மற்றும் வருமான வீதம் குறித்து விபரமொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | கம்பனிகளின் எண்ணிக்கை | பங்குகளின் எண்ணிக்கை | முதலீடு ஜனவரி 01ஆம் திகதி (ரூபா) | பெற்ற முதலீட்டு வருமானம் (ரூபா) | வருமான சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|
| 2011 | 130 | 78,211,481 | 5,204,377,279 | 703,052,274 | 13.5 |
| 2012 | 107 | 101,999,123 | 7,713,939,116 | 324,179,030 | 4.2 |
| 2013 | 88 | 109,134,215 | 8,085,181,220 | 34,987,432 | 5.38 |

2013ஆம் ஆண்டில் இப்பணமானது திறைசேரி உண்டியலில் சராசரியாக 11.11% வருடாந்த வட்டிக்கு முதலீடு செய்வதற்கு முடிந்ததுடன், அதன் படிவருமான இழப்பீடு ஏறத்தாழ 463,276,202 ரூபாவாகும்.

(ஊ) சபை ஏதோவொரு அலகுப் பொறுப்பு நிதியத்தில் 1997ஆம் ஆண்டிலே 1,000,000 அலகுகளைக்கொள்வனவு செய்வதற்காக 10,000,000 ரூபா முதலீடு செய்திருந்தது. இக்கூறுகளைக் கொள்வனவு செய்யப்பட்ட தினத்திலிருந்து மீளாய்வாண்டு வரை அம்முதலீடுகளினால் எவ்விதமான இலாபமும் சபைக்கு கிடைக்கவில்லை. எவ்வாறெனினும் குறிப்பிட்ட காலப்பிரிவினுள் நூற்றுக்கு 5 குறைந்தபட்ச வட்டி வீதத்தின் கீழிலாயினும் இப்பணம் முதலீடு செய்யப்பட்டிருப்பின், அதன் மூலம் கிடைக்கக் கூடிய கணிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அண்ணளவாக 12,920,000 ரூபா இழப்பு ஏற்பட்டிருந்தது.

(எ) 2007ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட தொலைபேசி நிறுவனமொன்றின் 3,302,188 பங்குகள் 2013 திசெம்பர் 31ஆந் திகதியில் 110,340,299 ரூபா முதலீடாக அடைந்து இருந்ததுடன், இம்முதலீடு கடந்த 7 வருட காலப்பிரிவினுள் பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கலிற்காக பயன்படுத்தப்படாமையால் அம்முதலீட்டினால் சபைக்கு மூலதன இலாபத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. இம்முதலீட்டினால் 2013 வருடத்திற்குக் கிடைக்கப் பெற்ற பங்கிலாப வருமானம் 2,526,174 ரூபா ஆகிய நூற்றுக்கு 2.29 வீத மிகக் குறைந்த வருமான வீதமாக இருந்தது.

(ஏ) நிதி நிறுவனமொன்றில் 2,550,000 ரூபா பெறுமதியான 30,600 பங்குகளில் செய்யப்பட்டிருந்த முதலீட்டினால்,பங்குச் சந்தை விலை வேகமாக வீழ்ச்சியடைவிற்கு உள்ளகியிருந்தமை மற்றும் உரிய நிதி கடந்த சில வருடங்களாக நட்டம் அடைந்து இருந்தமையால் மீளாய்வாண்டில் திசெம்பர் 31ஆந் திகிதியில் சபைக்கு மூலதன இலாபமோ அல்லது பங்கிலாப வருமானமோ பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஐ) 2013ஆம் ஆண்டில் சபை 24 நிறுவனங்களின் 18,817,090 பங்குகளில் மேற்கொண்டிருந்த 700,560,142 ரூபா முதலீட்டினால் எவ்வித வருமானத்தினையும் பெற்றுக் கொள்ளவில்லை. கடந்த 3 வருட கால எல்லைக்குள் இப்படி ஒரு வருமானமும் பெற்றுக்கொள்ளாத சபையின் நிதி முதலீடு செய்யப்பட்ட கம்பனிகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | கம்பனிகளின் எண்ணிக்கை | முதலீட்டுப் பங்குகளின் எண்ணிக்கை | முதலீட்டுத் தொகை (ரூபா) |
|---|---|---|---|
| | 17 | 4,111,468 | 119,083,880 |
| 2011 | 18 | 7,683,979 | 163,867,080 |
| 2012 | 25 | 13,046,750 | 226,125,038 |
| 2013 | 24 | 18,817,090 | 700,560,142 |

### 4.2 நிறுவனத்தினால் மற்றும் நிறுவனத்திற்குஎதிராகக் காணப்படும் சட்டரீதியான சம்பவங்கள்

ஓப்பந்தங்களை மீறுதல் தொடர்பில் சபைக்கு எதிராகக் கிடைக்கப் பெற்றபாதகமான நீதிமன்ற தீர்மானத்தின் கீழ் தனியார் நிறுவன மொன்றிற்கு தண்டத்தொகையாக 21,000,000 ரூபா செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் சபையினால் இவ்வழக்குத் தீர்ப்பிற்கு எதிராகசெய்யப்பட்ட மீள்விசாரணையின் விளைவாக முறைப்பாட்டு நிறுத்தினால் மேற்கூறப்பட்ட பெறுமதிக்கு சமமான வங்கிப் பிணையொன்று நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இப்பணம் சபைக்குக் கிடைக்கவேடிய பணமாக கணக்கு வைக்கப்பட்டப்போதிலும், இக்கொடுப்பனவு பாதகமான வழக்குத் தீர்ப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டதால், இப்பணம் மீளக் கிடைப்பதில் நிச்சயமற்றதன்மை காணப்பட்டது. எவ்வாறெனினும் உரியநீதிமன்ற செயற்பாடு 2014 திசெம்பர் 31அந் திகதியாகியும் முடிவடைந்து இருக்கவில்லை.

### 4.4 கருத்துமுரண்பாட்டினைஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள்

கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திறைசேரியின் அனுமதியின்றி சபையின் நோக்கங்களிற்கு மாற்றமாக சபையின் உத்தியோகத்தர்களால் நடாத்தப்படும் விளையாட்டுக் கழகம் ஒன்றிற்கு 3,000,000 ரூபா கடன் தொகையொன்றினை எவ்வித ஒப்பந்த ரீதியான பிணைப்பின்றி மீளாய்வாண்டின் போது பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், இக்கடன் தொகை 24 தவணைகளிற்கு 10 வீதவட்டிக்கு மீளச் செலுத்துவதாக அறிவித்திருந்தும் உரியகாலப்பகுதிற்குள் 498,310 ரூபாமாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போதுசபையின் வெளிவாரிநடவடிக்கைகளுக்காகமற்றும் பல்வேறுதரப்பினரின் தேவைகளுக்காக 1,742,166 ரூபாசெலவுசெய்யப்பட்டிருந்தது.

(இ) சபையானது கடை மற்றும் அலுவலக உத்தியோகத்தர் சட்டத்தின் கீழ் செயற்படும் நிறுவனமாகக் குறிக்கப்பட்டு மேலதிக நேர வேலைக்கு ஒரு மணித்தியாலத்திற்கு ஒன்றரை மணித்தியாலமாகவும் சனிக்கிழமை.ஃ.ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரச விடுமுறை தினங்களிலும் மேலதிக 8 மணித்தியாலங்கள் பூர்த்தி செய்திருப்பின் நாட் சம்பளத்தையும் சேர்த்து வழங்குவதால் சபையின் 2013ஆம் ஆண்டின் மேலதிக செலவு 18,000,252ரூபாவாகும். சட்டத்தின்படி இவ்வாறான மேலதிக கொடுப்பனவு பெற்றுக் கொள்வதற்கு சபையின் உத்தியோகத்தர்கள் வாரத்திற்கு ஐந்தரை நாட்கள் சேவை புரிய வேண்டுமென்பதுடன் 21 வருடாந்த விடுமுறை நாட்களிற்கு மேற்படலாகாதென்பதுடன் இதற்கு முரணாக 42 வருடாந்த விடுமுறைகள் பெற்றுக்கொண்டுள்ளோரும் வாரத்தில் 5 நாட்கள் சேவைப் புரிந்தவர்களும் மேலதிகக் கொடுப்பனவு பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

### 4.5 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

நிலையான சொத்துக்கள் பற்றாக்குறையாக 2,044,420 ரூபா மீளாய்வாண்டின் போதுபுத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 4.6 பணிக்குழாத்தினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் போதுதிசெம்பர் 31ஆந் திகதியாகையில் 17 வெற்றிடங்களுடன் சபையின் முழு வெற்றிடஎண்ணிக்கை 52ஆக இருப்பினும் அதனைநிரப்புவதற்கானகவனத்தைச் செலுத்தி இருக்கவில்லை.

## 5. கணக்கியல் செயற்பாடு மற்றும் சிறந்த நிர்வாகம்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நி.பி. 133 (2) இன் பிரகாரம் சில முக்கியமான செயற்பாடுகள் உள்ளடக்குமாறு உள்ளகக் கணக்காய்வு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 வரவுசெலவுப் பேரேட்டுநிர்வாகம்

சபையின் வரவு செலவுக்குட்பட்ட செலவுகள் மற்றும் வருமானங்கள் மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவுகள் ஆகியவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்களவு மாற்றத்தினை அவதானிக்கக்கூயதாக இருந்தமையால் வரவு செலவு திட்டம் விளைபயன் மிக்க முகாமைத்துவக் கட்டுப்பாட்டு உத்தியாகப் பயனப்படுத்தி இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான குறைபாடுகள் சபைத் தலைவரிடம் அவ்வப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய தொகை
(இ) காலத்திற்கேற்ப சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள
(ஈ) முதலீடு
(உ) அங்கத்தவர் கணக்குகளைப் பேணுதல்

**டப்ளியூ.பி.சீ. விக்கிரமசிங்க**
கணக்காய்வாளர் அதிபதி (பதில்)

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 தொடர்பாக விளக்கங்கள்

### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

(அ) நிதிச் சொத்தொன்று அல்லது சொத்துக்கள் தொகுதியொன்றிற்கு சேதத்திற்கு உள்ளானதா என்பதற்கு ஏதேனும் விடய அடிப்படையிலான காரணிகள் இருக்கின்றனவா என மதிப்பீடு செய்ய வேண்டி உள்ளது எனவும், ஒவ்வொரு முதலீடு குறித்தும் இடர் மதிப்பீடு செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ள தாங்கள் அவதானிப்புடன் இணங்க முடியாதுள்ளது.

இலங்கை கணக்கீட்டு நியம இல 39இல் 58ஆவது பந்தியில் மற்றும் 63, 66, 67 ஆகிய பந்திகளில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் குறித்து தாங்கள் கவனத்தைப் பெற விரும்புகின்றோம். இலங்கை கணக்கீட்டு நியம இல 39இல் 58ஆவது பந்தியின் பிரகாரம், ஒரு நிறுவனமானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும், படிப்படியாகக் குறையும் ஆகுசெலவிற்குக் கணிப்பிடப்பட்ட நிதிச் சொத்தொன்று அல்லது நிதிச் சொத்துக்கள் தொகுதியொன்று சேதத்திற்கு உள்ளாகியுள்ளது என விடய அடிப்படையிலான ஆதாரம் இருக்கிறதா என மதிப்பீடு செய்தல் வேண்டும். அவ்வாறு ஏதேனும் ஆதாரம் இருப்பின் சேதத்திற்குள்ளான நட்டத்தின் பெறுமதியை நிர்ணயிப்பதற்கு பந்தி இல 63 (படிப்படியாகக் குறையும் ஆகுசெலவிற்கு கணிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்), பந்தி இல 66 (ஆகுசெலவிற்கு கணிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்) அல்லது பந்தி இல 67(விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள்) போன்ற பந்திகளை ஆதாரமாகக் கொள்ளல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சொத்தின் காவுகைப் பெறுமதி நேரடியாக அல்லது கொடுப்பனவுக் கணக்கு மூலம் குறைக்க வேண்டும் எனவும் நட்டத்தின் அளவு இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காண வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும், இலங்கைக் கணக்கீட்டு நியம இல 39இல் 46ஆவது இல பந்தியின் பிரகாரம், இலாபநட்டம் மூலம் நியாயமான பெறுமதிக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களைத் தவிர ஏனைய எல்லா நிதிச் சொத்துக்களும் இந்நியமத்தின் பந்தி இல 58 முதல் 70 வரை மற்றும் பின்னிணைப்பு A யில் பந்தி இல AG 84 முதல் AG 93வரை சேதம் அடைந்துள்ளதா எனப் பரிசீலித்தல் வேண்டும்.

அதன் படி இலாபநட்டம் மூலம் நியாயமான பெறுமதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டு கணக்கில் பதிவழிக்க வேண்டியதுடன், சேதமடைந்துள்ளதா என்பது குறித்து விசாரணை மேற்கொள்வதற்கு அக்கணககீட்டு நியமத்தின் பிரகாரம் அவசியமில்லை.

பிரதானமாக மூலதன இலாபம் மற்றும் பங்கிலாபத்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனேயே சபையினால் பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், சபையின் கடந்தகால கொடுக்கல் வாங்கல்களைப் பரிசீலிக்கும் போது பங்குச் சந்தையில் சாதகமான நிலை ஏற்பட்டதும் பங்கு விற்பனை அல்லது கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளமை புலனாகின்றது. இலங்கைக் கணக்கீட்டு நியம இல 39இல் பந்தி இல 9 (அ) 1இன் படி பங்குச் சந்தை முதலீடுகள், கொடுக்கல் வாங்கலிற்கான முதலீடுகள் (Held for Trading) என வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அம்முதலீடு இலாபநட்டம் மூலம் நியாயமான பெறுமதிக்கு என்ற வகைப்படுத்தலின் கீழ் கணக்குக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. அதன் படி, இலங்கைக் கணக்கீட்டு நியம இல 55 (அ) இன் படி பாதகமான சந்தை விலை மாறல்கள் 2013 ஜனவரி 01ஆந் திகதியாகையில் 1,506,639,000 ரூபாவாலும், 2013ஆம் ஆண்டில் 129,129,000 ரூபா வருமானக் கணக்கில் பதிவழிக்கப்பட்டுள்ளன. 2011, 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் சந்தை விலை வீழ்ச்சியடைந்தமை நிறுவனத்தின் இலாப நட்டக் கணக்கில் சரிப்படுத்தப்படாதிருப்பின் குறிப்பிட்ட பெறுமதியில் செயற்பாட்டு இலாபம் அதிகரிப்பதுடன், குறிப்பிட்ட வருடங்களில் அங்கத்தவர்களின் கணக்குகளில் ஒருநாளும் காசாகாத இலபத்தினை வரவு வைப்பதற்கு முடியுமாயிருந்திருக்கும். அது அடிப்படை கணக்கியற் கொள்கைகளை மீறுவதாக அமையும்.

அதன் படி, விலை பட்டியலிட்ட சந்தைகளின் கொடுக்கல் வாங்கல்களைக் கணக்கிலிடும் போது 1995 15ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு நியமச் சட்டத்திற்கும் சர்வதேச கணக்கீட்டு அறிக்கையிடல் நியமங்களிற்கும் இணங்க (IFRS) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால்

1738/40 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் சட்டங்களின் பிரகாரம் மற்றும் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட விரும்புகின்றோம்.

(ஆ) தாங்கள் அவதானிப்பில் குறிப்பிட்டுள்ளபடி 2013 திசெம்பர் 31ஆந் திகதியில் காணப்படும் 183,067,000 ரூபாவான நிலையான சொத்துக்களில் மீள்மதிப்பீட்டுப் பெறுபேறு நிதிக் கூற்றில் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கினைச் செலுத்தாதனாலும் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மற்றும் குறிப்பிட்ட நிலையான சொத்துக்கள் தொழில்வாண்மை மிக்க மதிப்பீட்டாளர் ஒருவரினால் மதிப்பீடு செய்வதற்கு ஏற்படும் செலவினை அதனால் கிடைக்கும் நலனுடன் ஒப்பிடுகையில் நியாயப்படுத்த முடியாது என்பதாலும் குறிப்பிட்ட நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட சபையின் நிலையான சொத்துக்கள் இலங்கை முழுதும் அமைக்கப்பட்டுள்ள 17 கிளைகளிலும் கொழும்பை அண்டி அமைந்துள்ள 05 அலுவலகங்களிலும் சாதாரண நிர்வாக நடவடிக்கைகளுக்கு மாத்திரம் பயன்படுத்துவதன் காரணமாக மற்றும் இப்பொருளைவிற்பனை செய்தல் மிகவும் அரிதாக நடைபெறுவதன் காரணமாக இச்சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியம இல 16இல் குறிப்பிட்டுள்ளவாறு கழிக்கப்பட்ட **மீள்மதிப்பீட்டு** ஆகுசெலவு (ප්‍රතිශෝධන පිරිවැය) பிரயோகத்தின் படி கணிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், எதிர்வரும் நாளொன்றில் பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் இலங்கைக் கணக்கீட்டு நியம இல 16 (34) பிரகாரம் நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் கொள்கையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளோம்.

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல 24இல் 01ஆவது பந்தியின் படி நிறுவனத்தின் நிதி நிலைமை மற்றும் இலாபம் அல்லது நட்டம் குறித்து தொடர்புள்ள தரப்பினர் காணப்படுதல் மற்றும் அத்தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல் மற்றும் பிணைகள் உட்பட தீர்க்கப்படாத மீதி மூலம் நிறுவனத்திற்கு செல்வாக்கு ஏற்படக் கூடிய இயலுமை குறித்து கவனஞ் செலுத்தும் பொருட்டு தேவையான வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

நிதி அமைச்சின் திறைசேரி செயற்பாட்டு திணைக்களம் அடிக்கடி முதலீடு சம்பந்தமாக அறிவுரைகள் மற்றும் சட்டதிட்டங்களை வெளியிட்டுள்ளதுடன், இலங்கை உப்புக் கூட்டுத்தாபனத்தின் உரிமையில் 90மூ இனைக் கைப்பற்றிக் கொள்வதற்காக சபை 470,960,937.50 ரூபா தொகையினை முதலீடு செய்துள்ளது.

அது மட்டுமல்லாது, இலங்கைக் கணக்கீட்டு நியம இல 24இன் பிரகாரம் சபையின் பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவச் சபைக்கு உரிய நிறுவனத்தின் நிதிச் செயற்பாட்டுக் கொள்கைகள் நிர்வாகம் தொடர்பில் குறிப்பிடத்தக்க செல்வாக்கினைச் செலுத்த முடியுமான சம்பந்தப்பட்ட தரப்பினர் இல்லை என்பதை அறிவிப்பதற்கு விரும்புகின்றேன்.

### 2.2.2 தொடர் நிலைப்பாடு

இந்த அவதானிப்புடன் இணங்க முடியாதுள்ளது. நிறுவனத்தின் இலாபம் குறைந்த காலப்பகுதியில் செலுத்தப்படும் பங்கிலாப விகிதத்தினை உச்ச மட்டத்தில் பேணிக்கொள்வதற்கு நிறுவனத்தின் ஏனைய செய்றபாடுகளுக்கு தடை ஏற்படாத விதத்தில் நிதிய வழங்கீட்டினை செய்து கொள்வதே பங்கிலாப சமப்படுத்தும் தொகுதியொன்று பேணப்படுவதன் நோக்கமாகும். அதன்படி தேவையான சந்தர்ப்பங்களில் அங்கத்தவர்களுக்கு நியாயமான பங்கிலாப விகிதத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்நிதியம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறே பங்கிலாபத்தினை வெளிப்படுத்துவதற்கு தடுத்து வைக்கப்பட்ட இலாபத்தினைப் பயன்படுத்துவதற்கு எவ்விதத் தடையும் இல்லாததுடன், கடந்த வருடங்களில் இருந்து முன்கொணரப்பட்ட இலாப ஒதுக்கீடு தேவையான சந்தர்ப்பங்களில் அங்கத்தவர்களுக்கு பங்கிலாபமாக பங்கீடு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதுஎன அதன் மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது.

அதன் பிரகாரம், மேற்படி நிதியப் பயன்பாடு அதன் அடிப்படை நோக்கங்களிற்கு எதிராக மேற்கொள்ளாததுடன், அதன் மூலம், நிறுவனத்தின் நிதித்திரவ நிலைக்கும் பாதிப்பு ஏற்படுத்தப்படவில்லை. அதனால், தாங்களால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிறுவனத்தின் தொடர்ச்சியான மற்றும் சாதகமான நிலைப்பாட்டிற்கு மேற்படி கணக்கீட்டு நடவடிக்கைகளினால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

### 2.2.3 அங்கத்துவக் கணக்குகளில் வரவு வைக்கப்படாத பங்களிப்புப் பணம்

2013திசெம்பர் 31ஆம் திகதியில் அங்கத்துவ நிதியக் கணககு மீதி கணினி அறிக்கைப் படி அங்கத்தவர் கணக்குகளில் வரவு வைத்தல் தொடர்பில் 2015.03.11ஆம் திகதியில் நிலைமை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது

| சதவீதம் | பெறுமதி (மி. ரூபா) |
|---|---|
| 2013.12.31 ஆந் திகதியில் அங்கத்தவர் நிதிக் கணக்கின் மீதி | 174,252 |
| 2015.01.11 ஆந திகதியில் அங்கத்தவர் கணக்கில் உண்மையாக வரவு வைக்கப்பட்ட பெறுமதி 94% | 163,957 |
| அங்கத்தவர் கணக்குகளில்வரவு வைக்கப்படவுள்ள பெறுமதி 6% | 10,395 |
| அங்கத்தவர் கணக்குகளில் வரவு வைக்கப்படவுள்ள பெறுமதி அமைந்துள்ள விதம் 1981 முதல் 2013.12.31 ஆந் திகதி வரை பணி கொள்வோரினால் சபைக்கு செலுத்தப்பட்ட அங்கத்தவர் பங்களிப்புத் தொகையின் பெறுமதி | 3,154 |
| (பெறுமதி வருடத்திற்கு ஏற்றவாறு அமைந்துள்ள விதம் குறித்து விபரம் முன்வைக்கப்பட்டுள்ளது.) 1981 முதல் 2013.12.31 ஆந் திகதி வரை பணி கொள்வோரினால் சபைக்கு செலுத்தப்பட்ட அங்கத்தவர் பங்களிப்புத் தொகைக்குரிய மதிப்பிடப்பட்ட வட்டி மற்றும் பங்கிலாபத்தின் பெறுமதி | 7,241 |
| | 10,395 |

மேலும், கீழ் குறிப்பிட்டுள்ள தவிர்க்கமுடியாத காரணங்களினால் 3,154 மில்லியன் ரூபா தொகை அங்கத்தவர் கணக்குகளில் வரவு வைப்பதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளதை அறிவிப்பதற்கு விரும்புகின்றோம்.

1. பணி கொள்வோர் அங்கத்தவர் தொகையினை செலுத்தியுள்ள போதும், அத்தொகையினை வரவு வைப்பதற்கு தேவையான ஊழியர் விபரங்களை வழங்காதிருத்தல்.

2. நிறுவனங்கள் பலவற்றிற்கு ஒரு காசோலையினால் அங்கத்தவர் பணத்தொகை செலுத்தியுள்ள சந்தர்ப்பங்களில், அப்பணத்தொகையினை வெவ்வேறாக நிறுவனங்களுக்குப் பிரித்துக் கொள்ளும் விதம் தெளிவாக இல்லாமையால் இயலாதிருத்தல். (உரிய பணி கொள்வோர் நிறுவனங்கள் தற்போது செயற்படாத நிலையில் இருத்தல்)

3. நிறுவனங்களினால் வழங்கப்படும் அரையாண்டு அறிக்கையில் உள்ளடங்கியுள்ளதரவுகள் தெளிவாக இல்லாதிருத்தல். (உரிய பணிகொள்வோர் நிறுவனங்கள் தற்போது செயற்படாத நிலையில் இருத்தல்)

4. நிறுவனங்களில் நிர்வாக நிலைமை மாறுபடுவதனால், அதற்கு முன்னரான காலத்திற்குரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருத்தல் மற்றும் அக்காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு புதிய முகாமை துணையாக இருக்காமை.

5. விசேடமாகத் தோட்டந் தொடர்பான நிறுவனங்களின் அங்கத்தவர்களுக்கு தேசிய அடையாள அட்டை இல்லாமையால், பெயர்களின் ஒரு பகுதியை மாத்திரம் பணி கொள்வோர்கள் வழங்குவதால் இனங்காண்பதில் சிக்கல்கள் ஏற்படுதல்.

மேலும், மேற்படி விடயங்களைக் குறைத்துக் கொண்டு பிரதேச அலுவலகங்களுக்கு ஊடாக செயற்படு பணி கொள்வோர்களை அறிவுறுத்தி, தேவையான விபரங்களைப் பெற்று அங்கத்தவர் கணக்குகளை இற்றைப்படுத்துவதற்கு திட்டம் தீட்டியுள்ளதாக அறிவிப்பதற்கு விரும்புகின்றோம்.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2013ஆம் ஆண்டிற்கான அங்கத்தவர் கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட நூற்றுக்கு 03 இற்குரிய 4,752,333,000 ரூபா தொகை முன்னைய ஆண்டுகளில் கணக்கு வைக்கப்பட்ட விதத்திலேயே ஒதுக்கீடு செய்வதற்கு உள்ள இலாபத்தில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டின் 4,752,333,000 ரூபாவான 03மூ வட்டி, நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்படவேண்டிய இடத்தினை மாற்றுவது குறித்து தாங்கள் ஆலோசித்துள்ளீர்கள். குறிப்பிட்ட ஆலோசனை நிறுவனத்தின் செயற்பாட்டுச் செயலாற்றுகையில் பாதிப்பு ஏற்படாது என்பதாலும், ஏற்கெனவே 2014 வருடாந்த கணக்குக் கூற்றுக்களின் கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்டு முடிந்துள்ளமையாலும், 2015

ஆண்டின் கணக்குக் கூற்றுக்களை முன்வைக்கும் போது பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு இணங்க உத்தேசிக்கப்பட்ட மாற்றத்தினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

(ஆ) இதனுடன் இணங்க முடியவில்லை. தாங்கள் அவதானிப்பு இல 2.2.1 (அ) வில் குறிப்பிட்டுள்ள எமது பதிலில் விபரமாகக் குறிப்பிட்டுள்ளவாறு இக்கணக்கு வைத்தலும் இலங்கைக் கணக்கீட்டு நியம இல 39இற்கு இணங்கலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நியாயமான பெறுமானம் மற்றும் விற்பனை விலை ஆகியவற்றை ஒப்பிட்டு பங்குகளில் இலாப நட்டம் கணிப்பிடப்பட்டுள்ளது. அதன் படி இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கலாக கணக்கு வைக்க வேண்டிய நிறுவனமொன்றாக இக்கணக்கு வைப்பு சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) மூடப்பட்ட 02 நிறுவனங்களையும் உத்தியோகப்பூர்வ பட்டியலில் இருந்து அகற்றப்பட்ட நிறுவனமொன்றையும் உட்பட்ட இம்முதலீட்டில் சந்தை விலை இல்லை. அதனால், இம்முதலீடு கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு காணப்பட்ட நிதிச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட முடியாததுடன், அவை விற்பனைக்கான முதலீட்டின் கீழ் காட்டப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், இந்நிச்சயமற்ற முதலீட்டுக்காக முழுமையாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் ஐந்தொகையில் பாதிப்பு ஏற்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடந்த பல வருடங்களுக்கு உரிய வரிகளை மீளப் பெறல், வரி மேலதிக ஏற்பாடுகள் மற்றும் அங்கத்தவர் கணக்கு சரிப்படுத்தல்கள் என்பன இலங்கைக் கணக்கீட்டு நியம இல 08இன் பிரகாரம் கடந்தகால நிகழ்ச்சிகளுக்கு ஏற்றவாறு சரிப்படுத்துதல் நடைமுறைச் சாத்தியமற்றது டூஜஅிசயஉவைை யடரூஎன்பதால், குறிப்பிட்ட கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் தவறுகள் என்பன கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம்கடந்தகால நிகழ்ச்சிகளுக்கு ஏற்றவாறு மீண்டும் வெளிப்படுத்துதல் (Retrospective Restatement) இன் கீழ் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

### 2.2.5 போதியளவு அதிகாரம் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1980 ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 14ஆவது பிரிவின் பிரகாரம் நிதியத்தின் முதலீடுகள் மூலம் கிடைத்த இலாபங்களில் இருந்து பங்கிலாபத்தினை வழங்குதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு முதலீடுகள் மூலம் கிடைத்த இலாபங்கள் என்பது வெறுமனே கணக்கீட்டுக் கருதுகோள் என்பதால், அதில் கணக்கிடுவதற்காக சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் கணக்கீட்டுக் கோட்பாடுகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

இலங்கைக் கணக்கீட்டு இல 01 மற்றும் நிதி அறிக்கையிடலின் கருதுகோள் சட்டகத்தின் படி சபையின் வருமானம் மற்றும் செலவுகளை கணிக்கு வைக்கும் போது திரண்ட அடிப்படை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் படி திறைசேரி முறி முதலீட்டின் வருடாந்த வருமானத்தினை கணிப்பிடும் போது வருடாந்த ஈட்டல் வீதம் (Yield) பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், 2013 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி முறிகளில் உள்ள முதலீடுகள் முதரிச்சி வரையில் தடுத்து வைக்கப்படும் முதலீடாளாக வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் காசாகிய உண்மையான வட்டியாகிய 12,847,398, 372 ரூபா கடந்த வருடங்களில் போன்றே ஒரே வகையில் முதிர்ச்சி வரையில் தடுத்து வைக்கப்பட்ட முதலீடுகளில் காசாகிய இலாபமாக கணக்குகளில் சரியான முறையில் காட்டப்பட்டுள்ளது.

மேலும், வருடாந்த கணக்குகளைத் தயாரிக்கும் போது முதலீடு இலங்கைக் கணக்கீட்டு நியம இல 39 இன் இல 46 (ஆ) பிரிவின் பிரகாரம் சபையினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி முறிகளிலான முதலீட்டுத் தொகை 137,546,313,369 ரூபா முதிர்ச்சி வரையில் தடுத்து வைக்கப்பட்ட முதலீடாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன் மூலம், உண்மையான வட்டி விகித முறையின் கீழ் கணக்கிட்டு இலாபத்தினை இலங்கைக் கணக்கீட்டு நியம இல 39இன் 55 (ஆ) பிரிவு மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியம இல 18இன் பிரகாரம் இலாபநட்ட கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

அதன் படி, சபை வருடாந்த கணக்குகளைத் தயாரிக்கும் போது அல்லது பணிப்பாளர் சபையினால் வருடாந்த இலாப நட்டத்தினைக் குறிப்பிடும் போது இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் அல்லது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு எதிராக செயற்பட்டிருக்கவில்லை என்பதும் திறைசேரி முறி முதலீட்டின் வருமானம் கணக்கிலிடுதலில் மற்றும் பங்கிலாபங்களைக் கொடுப்பனவு செய்வதில் உள்ள முறைமைகள் கடந்த வருடங்களில் போன்று ஒரே வகையில் மேற்கொள்ளப்பட்டள்ளது என்பதுமே எமது கருத்தாகும்.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

(அ) முதலீட்டுக்காகப் பங்குகள் ஆகுசெலவிற்குத் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் கடிதம் மூலமாக கணக்காய்விற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அது கிடைக்கப் பெற்றமை குறித்து தாங்கள் பிரதிநிதி ஒருவர் கையொப்பமிட்டுள்ளார். இச்சந்தர்ப்பம் வரையிலும், குறிப்பிட்ட அனைத்து முதலீட்டு அறிக்கைகளும் தாங்களிடம் உள்ளன. எவ்வாறெனினும், தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு மேலதிகமாக சுருக்கமாக 2013ஆம் ஆண்டிற்குரிய பங்குகளின் கொள்வனவு விலை, விற்பனை விலை, சந்தைப் பெறுமதி, கொள்வனவு விலைக்கேற்றவாறு இலாபம்/ நட்டம் ஆகியவற்றைக் குறிக்கும் அறிக்கையொன்றும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2013ஆம் ஆண்டிற்கான நிலையான சொத்துக்கள் பௌதிக அளவீட்டு அறிக்கை 2014.03.17 ஆந் திகதி கொண்ட கடிதம் மூலம் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், தாங்கள் பிரதிநிதி ஒருவர் கையொப்பமிட்டுள்ளார்.

(இ) நிதி அமைச்சினைப் பிரதிநிதித்துவஞ் செய்யும் சபை பணிப்பாளர் ஒருவர் உட்பட முதலீட்டுத் துறையில் நிபுணத்தவம் பெற்ற சபையின் பணிப்பாளர்களினால் அனுமதிக்கப்பட்டிருக்கும் முதலீட்டுக் கொள்கை வெளியீட்டின் படி, சபையின் ஆபத்தான மற்றும் ஆபத்தற்ற அனைத்து முதலீட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

மேலும், 1980 இல 46ஐக் கொண்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 8ஆவது பந்தியில் (ஈ) பிரிவின் பிரகாரம் சபை பொருத்தமானது எனக் கருதும் (Board may Consider Fit) பங்குகள் மற்றும் பிணைகளில் முதலீடு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் சபையின் கருத்துப் படி மேற்கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்குகையில் எழும் இலாபநட்டங்கள், குறிப்பிட்ட நியமங்களிற்கு இணங்க தேவையான சரிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்கான மாற்று வழிமுறைகளும் இல்லை என்பதைக் குறிப்பிடுவதற்கு விரும்புகின்றோம்.

இலங்கை கணக்காளர் நியமத்திடம் விண்ணப்பித்து இழப்புக் கொள்கையை நிறுத்துவதற்கு சபைப் பணிப்பாளர்களின் அனுமதியைப்பெற்று அமைச்சின் உடன்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

### 2.3 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

உரிமைக் கோரப்படாத மரண நலன்கள் கணக்கில் 2013.12.31ஆந் திகதியில் காணப்பட்ட 8,597,636.96 ரூபா (நலன்கள் விண்ணப்பதாரிகள் 760) தொகை மீதி இருந்தது. அங்கத்தவரின் மரணத்தின் பின்னர் குறிப்பிட்ட அங்கத்தவரின் நலன்களுக்காக ஒருவரை விடக் கூடுதலாக உரிமைக் கோருவோர் இருக்கும் மற்றும் முடிவாகும் சந்தர்ப்பங்கள் காணப்படும். குறிப்பிட்ட அனைத்து உரிமைக் கோருவோரும் ஒரே முறையில் முன்வராமை மற்றும் சிலர் போதியளவு எழுத்துமூல தகவல்களை ( சான்றிதழ்களை விரைவில் முன்வைக்காமை போன்ற) முன்வைப்பதில் கஷ்டப்படுதல் ஆகியவற்றால் அவர்களது பங்குகள் சபையின் கணக்கில் தடுத்து வைத்து ஆவணங்களை முன்வைத்த பங்கு உரித்துடையோருக்கு மாத்திரம் கொடுப்பனவுகளைமேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2014 ஜனவரி முதல் 2015.02.28 வரை மரண நலன்கள் உரித்தோடையோரால் முன்வைக்கப்படும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு, 458,936.07 ரூபா தொகை 11 உரித்துடையோருக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், 2015.02.28ஆந் திகதியில் உரித்துடையோருக்கு செலுத்துவதற்கு உள்ள பொறுப்பின் பெறுமதி 8,138,700.89 ரூபாவாகும். (மரண நலன்கள் விண்ணப்பங்கள் 749)

அதன்படி, இனிவரும் காலங்களிலும், உரிய உரித்துடையோர் தமது சட்டரீதியான உரிமையினை முன்வைக்கும் விதத்திலேயே அத்தொகையை அவர்களுக்கு செலுத்துவது மேற்கொள்ளப்படும்.

திருப்பி அனுப்பப்பட்ட நலன்கள் கணக்கில் 2013.12.31ஆந் திகதியில் மீதி 13,969,150.95 ஆகும். (1249 நலன்பெறுவோர்) இக்கணக்கின் மூலம் அங்கத்தவர்களுக்கு உரிய நலன் தொகையினை விண்ணப்பித்து நேரடியாக வங்கிக்கு அனுப்பும் போது வங்கியினால் நலன் போரும் விண்ணப்பதாரியின் வங்கிக் கணக்கு விபரங்களில் உள்ள தவறுகள் காரணத்தால் திருப்பி அனுப்பப்பட்டுள்ள பணத்தின் பெறுமதியே எடுத்துக் காட்டப்படுகின்றது. நலன் உரித்துடையோருக்கு மீண்டும் இது குறித்து அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்பணம் பின்னர் நலன் உரித்துடையோர் விண்ணப்பிக்கும் போது பரிசீலிக்கப்பட்டு மீண்டும் கொடுப்பனவு செய்யப்படும்.

அதன் படி, 2014 ஜனவரி முதல் 2015.02.28 வரை நலன் உரித்துடையோரினால் விண்ணப்பிக்கப்பட்டு, 3,590,440.25 ரூபா தொகை 183 நலன் உரித்துடையோருக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், 2015.02.28 ஆந் திகதியன்று செலுத்த வேண்டிய பொறுப்பின் பெறுமதி 10,378,710.70 ரூபாவாக இருக்கும். (1066 நலன்பெறுவோர்)

2014.11.05 ஆந் திகதி நடாத்தப்பட்ட 39ஆவது கணக்காய்வுக் கமிட்டி கூட்டத்தில் நியமிக்கப்பட்ட துணைகமிட்டி மூலம் இது குறித்து ஆய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை எதிர்வரும் காலத்தில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திருப்பி அனுப்பப்பட்ட நலன்கள் (காசோலைகள்) (Returned Benefit Cheque) கணக்கில் 2013.12.31ஆந் திகதியில் மீதி 5,182,501.06 ரூபா ஆகும். (986 நலன்பெறுவோர்) வங்கிகளுக்கு இடையிலான கொடுப்பனவு முறை (Slip System) இல்லாத வங்கிக் கணக்குகள் உள்ள நலன் கோருவோருக்குரிய பணம், காசோலை மூலமாக நலன்கள் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

அக்காசோலைகளில் மீண்டும் திருப்பிக் கிடைக்கும் காசோலைகள் பதிவுத் தபால் மூலம் உரிய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு அனுப்பப்பட்ட ஆனால், விண்ணப்பதாரியின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படாத காசோலைகளின் பெறுமதி மேற்படி கணக்கில் காட்டப்படும்.

அதன் படி, 2014 ஜனவரி முதல் 2015.02.28 வரை நலன் உரித்துடையோரினால் விண்ணப்பிக்கப்பட்டு, 1,138,094.08 ரூபா தொகை 82 நலன் உரித்துடையோருக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், 2015.02.28 ஆந் திகதியன்று செலுத்த வேண்டிய பொறுப்பின் பெறுமதி 4,044,406.98 ரூபாவாக இருக்கும். (904 நலன்பெறுவோர்)

2014.11.05 ஆந் திகதி நடாத்தப்பட்ட 39ஆவது கணக்காய்வுக் கமிட்டி கூட்டத்தில் நியமிக்கப்பட்ட துணைகமிட்டி மூலம் இது குறித்து ஆய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை எதிர்வரும் காலத்தில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

(அ) i. சபையில் 2013 ஏப்பிரல் மாதமாகையில் நடைபெற்ற ஆட்சேர்ப்பு படிமுறையில் இருந்த பதவி உயர்வு சலுகைகளுக்கு பாதிப்பின்றி 2013 மே மாதம் செயற்படுத்தப்பட்ட அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு படிமுறையில் பதவித் தரங்களுக்குள் ஊழியர்களை உள்வாங்குதல் மேற்கொள்ள வேண்டியேற்பட்டதால் அதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அக்கமிட்டி அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்று 2013 மே மாதம் முதல் ஊழியர்கள் அவர்களது பதவித் தரங்களினுள் உள்வாங்கப்பட்டனர். அதன்போது ஆட்சேர்ப்பு படிமுறையில் குறிப்பிட்டுள்ள அனுமதிக்கப்பட்ட சம்பள அளவுகள் மற்றும் தரங்கள் ஆகியவற்றுக்கான முறைமைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

ii. அனுமதிக்கப்பட்ட ஊழியர் மதிப்பீட்டினுள் பணிப்பாளர் சபையின் செயலாளர் பதவியை இரத்துச் செய்வதற்கு ஆலோசிக்கப்படினும், அப்போதிருந்த சபை செயலாளருக்கு தனிப்பட்ட விதத்தில் குறிப்பிட்ட பதவி அனுமதிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அப்போதிருந்த செயலாளர் விலகும் வரையில் பணியினை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் அனுமதிக்கப்பட்ட ஊழியர் மதிப்பீட்டினுள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பணிப்பாளர் சபை செயலாளர் பதவி அத்தியாவசியப் பதவி ஒன்றாகையால் அதனை மீண்டும் நிறுவுவதற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

iii. 2013 ஆம் ஆண்டில் மிகையூதியக் கொடுப்பனவு முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இல 01/2013(1) இல் 4.3 பிரிவின் பிரகாரம் செலுத்தப்பட்டது. அச்சுற்றறிக்கையின் பிரதியொன்று கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்டது.

(ஆ) i. 1997 முதல் சபை ஊழியர்களுக்கு பணிப்பாளர் சபை அனுமதியின் கீழ் 4.2% வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் கடன் தொகை பெற்றுக்கொடுக்கப்படுவதுடன், அதற்கான நிதி, திட்டமிடல் அமைச்சின் அனுமதி 2014.11.10ஆந் திகதியன்று பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இவ்வருட மீளாய்வின் கீழ் சபையில் சேவைபுரியும் உத்தியோகத்தர்களின் வேதனத்திலிருந்து பெற்றுக்கொள்ளாது சபை நிதியிலிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு ரூ 2,083,969 PAYE வரிக்கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

ii. 2014 ஜனவரி மாதம் முதல் அமுலாகும் விதத்தில் உழைக்கும் போது செலுத்தும் வரித் தொகை உரிய அலுவலர்களின் தனிப்பட்ட உழைப்பிலிருந்து கழித்து உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

iii. 2007 ஒக்டோபர் 02ஆந் திகதியிட்ட இல. பீஈடீ 45 ஐக் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 பிரிவின் பிரகாரம் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் தொடர்பிலான முகாமையின் பொறுப்பு குறித்த கூற்று ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

iv. சபை ஊழியர்களுக்கு 1992 முதல் செயலாற்றுகையினை விருத்தி செய்வதற்காக பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்படுவதுடன், அதற்காகவும் நிதி அமைச்சின் அனுமதி 2014.11.10ஆந் திகதியன்று பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

(c) இந்நிதிச் செயற்பாட்டு முறைமைக் கோப்பு பணிப்பாளர் சபையின் அனுமதியின் பின்னர் பொதுத் திறைசேரியின் அனுமதிக்கு முன்வைக்கப்பட்டதுடன், அதற்கு இது வரையிலும் பொதுத் திறைசேரியின் எவ்வித பதிலும் கிடைக்கப் பெறவில்லை. அவ்வாறிருந்தும், இந்நிதிச் செயற்பாட்டு முறைமைக் கோப்பு தற்கால தேவைகளிற்கு பொருத்தமான முறையில் திருத்தி அமைக்கப்பட்டு மிகப் பரந்த விடய பரப்பினை உள்ளடக்கும் வண்ணம் நிதிச் செயற்பாட்டு முறைமைக் கோப்பின் அறிக்கை ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதனை பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு முன்வைப்பதுடன், அதன் பிறகு பொதுத் திறைசேரியின் அனுமதிக்காகவும் முன்வைக்கப்படும்.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

இக்கூற்றுடன் இணங்க முடியவில்லை. தாங்கள் குறிப்பிட்டுள்ள 7,348 மி. ரூபா 2,595 மி. ரூபாவாகச் சரிப்படுத்தப்பட்டிருப்பது, திறைசேரி முறிகளின் எல்லையினால், உரிய வருடத்திற்குரிய பங்கின் தற்கால பெறுமதிக்கு சரிப்படுத்தப்பட்டுள்ள பெறுமதியாகும். இது இலங்கை கணக்கீட்டு நியம இல 39இன் பிரகாரம் சரியான முறையில் சரிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் அவ்வருடத்திலும் அங்கத்தவர்களுக்கு செலுத்தப்படும் வட்டி மற்றும் பங்கிலாபம் மிகவும் நியாயமான முறையில் பகிரப்படுதல் மேற்கொள்ளப்படுகின்றது. இக்கணக்கீடு தொடர்பில் தெளிவான விளக்கமொன்று இதில் 2.2.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே தாங்களால் குறிப்பிடப்பட்டுள்ள 4,752 மி ரூபாவான வருட இறுதியில் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட 3மூ வட்டி ஏற்பாடு முன்னைய வருடத்தில் போன்றே ஒரே வகையில் பாதீட்டுப் பகுதியில் கழித்துக் காட்டப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் சபையின் முழு மேலதிகத்தில் பாதிப்பு ஏற்பட்டிருக்கவில்லை.

**3:2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு**

குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்ளலாம்.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

(அ) நாடு முழுதும் பரந்து இருக்கும் எமது பிராந்திய அலுவலக வலைப்பின்னலைப் பயன்படுத்தி சுயதொழிலில் ஈடுபட்டுள்ளோரை இச்சபையில் இணைத்துக் கொள்ளும் விசேட செயன்முறையொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.

2012ஆம் வருடத்தில் 28,152 ஆக இருந்த அங்கத்தவர் எண்ணிக்கை 2013ஆம் வருடத்தினுள் 33,278 வரை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் அங்கத்தவர் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கு சமுர்த்தி அதிகார சபை, மில்கோ நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ள பாற்பண்ணை விவசாயிகள் சங்கம், இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்திச் சபையின் தோற்பொருட்கள் மற்றும் பாதணிகள் தொடர்பில் பயிற்சி பெற்று சுயதொழிலில் ஈடுபடும் அங்கத்தவர்கள் மற்றும் தேசிய தாவரவியற் பூங்காவுடன் இணைந்த நாடு முழுதும் அமைக்கப்பட்டுள்ள மலர்ச் சங்கங்களின் பூமரப் பயிர்ச்செய்கையாளர்கள் ஆகியோரையும் இணைத்துக் கொள்வதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. புதிதாக நன்மைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அங்கத்தவர் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

சுயதொழில் முயற்சியாளர்கள் பணி கொள்வோர்- ஊழியர் தொடர்பொன்றினைக் கொண்டிராமை அங்கத்துவ வளர்ச்சி குறைவதற்கு ஏதுவாகும் முக்கிய காரணியாக உள்ளது.

எவ்வாறெனினும், தனியார் மற்றும் பகுதி அரசாங்கப் பிரிவுகளில் உள்ள ஊழியர்களுக்கு சட்டப் பிரகாரம் பங்களிப்புத் தொகையினைச் செலுத்துவது கட்டாயமாகும். அப்பணி கொள்வோர்களுக்கு எதிராக வழக்குத் தொடருவதன் மூலம் பங்களிப்புத் தொகை அறவிடப்பட முடிகின்ற போதும், சுயதொழில் அங்கததவர் தாமே பங்களிப்புத் தொகையினைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அவை கட்டாயமற்றதாக இருக்கின்றமையும் அங்கத்துவ வளர்ச்சி குறைவதற்கு ஏதுவாயுள்ளது.

(ஆ) இந்நிதியத்தில் மதிப்பிடப்பட்ட செயற்படு அங்கத்துவம் தற்போது ஏறக்குறைய 24 இலட்சம் ஆகும். அதன் படி, நிதியத்தின் எல்லா செயற்படு அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தவதற்கு நன்மை முறையொன்றை ஆரம்பிப்பின், அதற்குச் செலவாகும் பணத்தொகை மிக அதிகமாகும். அவ்வாறான பாரிய செலவொன்றினை மேற்கொள்வதற்கான ஆற்றல் சபைக்கு இல்லை.

1980 இல 46 கொண்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சட்டத்தின் பிரகாரம், வருட இறுதியில் எல்லா அங்கத்தவர் கணக்குகளில் பங்கிலாபம் மற்றும் வட்டியினை வரவு வைப்பதற்கு சபை கடப்பாடு கொண்டுள்ளது. இவ்வாறு போதியளவு மட்டத்தில் வட்டி மற்றும் பங்கிலாபத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கு முதலீடு செய்வதற்காக பணத்தொகையொன்று மீதி இருந்தால் மாத்திரமே இயலும். மேலும், செயற்படு அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்காக கிடைக்கும் புலமைப்பரிசில் விண்ணப்பப்பத்திர எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு உரித்தாகக் கூடிய எல்லா விண்ணப்பதாரிகளுக்கும் வருடாந்தம் பெற்றுக் கொடுக்கப்படும் புலமைப்பரிசில் அளவினை அதிகரித்துச் செலுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதனால், பல்வேறு சந்தர்ப்பங்கள் மற்றும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அங்கத்தவர்களுக்கு நன்மைகளை வழங்குவதற்கு ஏற்கனவே சபையினால் செயற்படுத்தப்படும் செயன்முறைகள் எதிர்காலத்திலும் செயற்படுத்தவது சிறந்தது எனக் குறிப்பிடுகின்றேன்.

(இ) 2013 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் சபையின் படி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை செயற்படு கணக்குகள் மற்றும் பணி கொள்வோர் எண்ணிக்கை ஆகிய தொழிற்படு எண்ணிக்கை தரவுகள் ஊழியர் சேமலாப நிதியத்தின் தொழிற்படு தரவுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

| விபரம் | ஊழியர் சேமலாப நிதியத்தின் படி | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் படி | வித்தியாசத்தின் வீதம் % |
|---|---|---|---|
| மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை | 14,987,000 | 10,000,000 | 67 |
| தற்போது பங்களிப்புத் தொகை அனுப்பப்படும் செயற்படு கணக்குகளின் எண்ணிக்கை | 2,350,000 | 2,200,000 | 94 |
| பணி கொள்வோர்களின் எண்ணிக்கை | 70,392 | 72,145 | 102 |
| 2013 இல் செலுத்தப்பட்ட நலன்கள் வீதம் வட்டியுடன் நூற்றுக்கு | 11.0 | 10.0 | 91 |

ஊழியர் சேமலாப நிதியம் 1958இல் செயற்பட ஆரம்பித்துள்ளதுடன், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 1981 மார்ச் மாதத்திலேயே செயற்பட ஆரம்பித்தது. கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள படி 2013.12.31 ஆந் திகதியில் ஊ.சே.நிதியம் மற்றும் ஊ.ந.பொ. நிதியம் ஆகியவற்றிற்கு இடையில் காணப்படும் மொத்த அங்கத்தவர் கணக்கு எண்ணிக்கையில் வித்தியாசம் ஏற்படுவதற்கு அவ்விடயம் ஏதுவாயுள்ளது.

எவரேனும் ஊழியர் ஒருவர் பணிபுரியும் நிறுவனத்திலிருந்து வேறொரு நிறுவனத்திற்கு பணிபுரிய போவதற்காக பணியிலிருந்தும் இராஜினாமா செய்வதால் (05 வருடத்திற்கு ஒரு முறை) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்தின் பிரகாரம் அங்கத்தவருக்குரிய நிதியத்தினை மீளப்பெறுவதற்கு விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள முடிந்த போதும், குறிப்பிட்ட சில விடயங்களின் கீழ் மாத்திரம் அல்லாது அங்கத்தவருக்கு உரிய ஊழியர் சேமலாப நிதியத்தினை கோர முடியாது. அதன் படி இந்நிதியங்கள் இரண்டிலும் 2013.12.31ஆந் திகதியில் காணப்படும் செயற்படு கணக்குகள் எண்ணிக்கையில் வித்தியாசத்தைக் காணலாம்.

செயற்படு பணி கொள்வோர் எண்ணிக்கை 73,021 என குறிப்பிடப்பட்ட போதும், எமது அறிக்கையின் படி அது 72,234 ஆகும். மேலும், 2014.12.31ஆந் திகதியில் அவ்வெண்ணிக்கை 74,362 ஆனதுடன் 2015.06.30 ஆந் திகதியன்று 75,950 ஆகும்.

## 4.2 முதலீடுகளும் முதலீட்டு வருமானமும்

(அ) 27,497,905.12 ரூபாவான கிடைக்க வேண்டிய முதலீட்டு வட்டி 02 நிறுவனங்களுக்கானதுடன் அவிவபரம் கீழே காட்டப்பட்டள்ளது.

| | | ரூ.ச. |
|---|---|---|
| i | எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம | 12,291,556.16 |
| ii | வெணிக் இன்கோப்பரேசன | 206,348.96 |
| iii | வெணிக் இன்கோப்பரேசன் | 15,000,000.00 |
| | | 27,497,905.12 |

**i. எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம் (12,291,556.16 ரூபா)**

எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தில் 15 மி.ரூபா தொகுதிக்கடனுக்காக கிடைக்க வேண்டியவட்டித் தொகையாக 12,291,556.16 ரூபா குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சரவையின் தீர்மானத்தின் படி 1994 இல் 15 மி.ரூபா பெறுமதியான தொகுதிக்கடன் எல்கடுவ நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டது. அத்தொகுதிக் கடனுக்காக செலத்த வேண்டிய முதல் வட்டித் தவணைத் தொகை எமக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், மீதி வட்டித் தவணைக் கட்டணங்கள் மற்றும் 1999 இல் செலுத்த வேண்டிய முதலீட்டுத் தொகையான 15 மி.ரூபா கொடுப்பனவு தவறவிடப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக உரிய தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டது. அதன்படி முதலீடு செய்யப்பட்ட தொகை மாதாந்தம், 2.5 மில்லியன் ரூபா வீதம் மொத்த பணத்தையும் 2010.08.12 ஆந் திகதியாகையில் தீர்க்கப்பட்டதுடன்,வட்டி நிலுவை 5 இலட்சம் ரூபா வீதம் மாதாந்தம் செலுத்தி தீர்க்கப்படுவதாக வாக்களிக்கப்பட்டது. அதன் படி முதல் கட்டணம் 2011 ஜனவரி மாதம் செலுத்தப்பட்டதுடன், 2011 நவம்பர் வரை 11 தவணைக் கட்டணங்களின் நிலுவை காணப்படுகின்றது. தற்போது எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம் நிதி நெருக்கடிக்குள்ளாகி இருப்பதாகவும், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுடன் கலந்துரையாடி கூடிய விரைவில் வாக்களிக்கப்பட்டவாறு கொடுப்பனவினை மேற்கொள்வதாகவும் 2015.07.07 ஆந் திகதி கொண்ட கடிதம் மூலம் தலைவர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**ii. வெணிக் இன்கோப்பரேசன் (206,348.96 ரூபா)**

வெணிக் இன்கோப்பரேசனால் வழங்கப்பட்டுள்ள தொகுதிக்கடனுக்காக கிடைக்க வேண்டிய வட்டித் தொகையாகும். தற்போது இந்நிறுவனத்தை மூடுவது தொடர்பாக வழக்கொன்று இருப்பதடன் வழக்கின் எதிர்வரும் திகதி 2015.11.16 ஆகும்.

**வெணிக் இன்கோப்பரேசன் (15,000,000.00ரூபா)**

1998.12.31ஆந் திகதி ஆரம்ப தொகைக்காக மாத்திரம் பிணையாளருடன் கூடிய தொகுதிக்கடன்களின் 100 மி.ரூபா வெணிக் இன்கோப்பரேசன் நிறுவனத்தின் 5 வருட காலத்திற்கான 15மூ வட்டி வீதத்தில் முதலீடு செய்யப்பட்டது. 2002.12.31ஆம் வருடத்திற்கான வட்டியினைச் செலுத்துவதற்கு நிறுவனத்தினால் முடியாது போனமையால், பிணையாளர்களிடமிருந்து ஆரம்ப தொகையான 100 மி.ரூபா, 2003.04.30 ஆந் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், பிணைகளில் உள்ளடங்காத வட்டித் தொகையான 15 மி.ரூபாவினைப் பெற்றுக் கொள்ள முடியாது போயிற்று. தற்போது இந்நிறுவனத்தை மூடுவது தொடர்பாக வழக்கொன்று இருப்பதடன் வழக்கின் எதிர்வரும் திகதி 2015.11.16 ஆகும்.

(ஆ) வெணிக் இன்கோப்பரேசன் நிறுவனத்தில் உள்ள தொகுதிக்கடன் பெறுமதி 7,450,259 ரூபாவாகும். இப்பணம் முதிர்ச்சியடைந்த போதும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. தற்போது இந்நிறுவனத்தை மூடுவது தொடர்பாக வழக்கொன்று இருப்பதடன் வழக்கின் எதிர்வரும் திகதி 2015.11.16 ஆகும்.

(இ) 06 நிறுவனங்களின் பங்குகளின் விற்பனைச் செலவுடன் ஒப்பிட்டு நட்டத்திற்கு விற்பனை செய்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் சபை பங்குச் சந்தை கொடுக்கல

வாங்கல்களை இலாப நட்ட கணக்கில் வைக்கப்படுவது நியாயமான பெறுமதியை (fair value) அடிப்படையாகக் கொண்டாகும். அவ்வாறு பார்க்கையில் அந்த 06 நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்வதால் சபைக்கு 19,794,613.75 ரூபா மூலதன இலாபம் கிடைக்கப் பெற்றுள்ளது.

(ஈ) பி சீ ஹவுஸ் நிறுவனத்தின் 363,800 பங்குகள் 2010.08.17 ஆந் திகதி ஆரம்ப வழங்கல்மூலம் கொள்வனவு செய்யப்பட்டது. ஆதில் 175,000 பங்குகளை விற்று 623,117.74 ரூபா மூலதன இலாபமொன்று 2011ஆம் வருடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டது. பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் செயற்பாட்டில் இவ்வாறான நிச்சியமற்ற நிலைமை ஏற்படக் கூடும் என்பதுடன்,அவ்வாறான நட்டம் ஏற்படுமெனின் அந்நட்டங்களை இலாபகரமிக்க பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் பதிலீடு செய்து கொள்வது சாதாரண நிலையாகும்.

(உ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரகாரம் அந்நிதியம் மூலதனச் சந்தையினுள் செயற்படு பங்களிப்பொன்றினை பெற்றுக் கொடுத்தல் வேண்டும் என அச்சட்டத்தில் 7 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் படி மொத்த முதலீட்டில் 06மூஇற்கு மேற்படாத வீதமொன்றினை பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு சபையின் முதலீட்டுக் கொள்கையினூடாக அனுமதிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நிதிச் சந்தையில் பாரிய பங்களிப்பினை வழங்கும் நிறுவனமாக நிதிச் சந்தையில் செயற்படு பங்களிப்பினை வழங்குதல் அத்துறையின் நிலைப்பாட்டிந்கு மற்றும் அபிவிருத்திக்கு ஏதுவாக அமையும் என அறியப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் 2013ஆம் ஆண்டின் போது பங்குச்சந்தையில் நிலவிய விலைத்தளம்பல் மற்றும் அதற்கு முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த விலைச் சுட்டியில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி இல்லாமையினால் பங்குச்சந்தை முதலீட்டினால் உயர்ந்த வருமான வீதத்தினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. எனினும், 2014ஆம் ஆண்டின் போது பங்குச்சந்தை மொத்த விலைச் சுட்டியில் மேலே சென்றதற்கு இணையாக முதலீட்டு வீதமாக 36% இனை ஈட்டிக் கொள்ள முடிந்தது.

(ஊ) 1997இல் Namal Growth Fund இல் 2,500,000 கூறுகள் 10ரூபா வீதம் கொள்வனவு செய்யப்பட்டன. ஆதில் 1,500,000 கூறுகள் 2006, 2007, 2009 ஆகிய வருடங்களில் விற்பனை செய்யப்பட்டு 33,183,600 ரூபா மூலதன இலாபத்தினைப் பெற்றுக் கொண்டதுடன், 1999இல் மற்றும் 2001ஆம் ஆண்டுகளில் மாத்திரம் பங்கிலாபத்தினையும் பெற்றுக்கொண்டது. இக்கூறுகளில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய முக்கியமான பங்கிலாபமானது அக்கூறுகளை விற்பனை செய்து பெற்றுக் கொள்ளக்கூடிய மூலதன இலாபமாகும். 10 ரூபா விலையில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு கூறுக்கான சந்தை விலை 2014.12.31ஆந் திகதியில் 137.72 ரூபாவாகுவதுடன், ஒரு கூறுக்கான காசாகாத இலாபம் 127.72 ரூபாவாகும்.இம்முதலீட்டினால் சந்தைப் பெறுமதியில் தொடர்ச்சியான வளர்ச்சி காட்டப்பட்டுள்ளதால் பொருத்தமான சந்தர்ப்பத்தில் விற்பனை செய்வதற்காக இக்கூறுகள் வைக்கப்பட்டுள்ளன. அதன்படி முதலீட்டுத் தொகையான 10 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2014.12.31ஆந் திகதியாகையில் 127 மில்லியன் ரூபா மூலதன இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் திறைசேரி உண்டியலுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் உயர்ந்த ஈட்டினைக் கொண்ட முதலீடாகக் கருதலாம்.

(எ) 2002ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் பங்குகள் திறைசேரியின் அனுமதியின்றி விற்பனை செய்ய வேண்டாம் எனத் திறைசேரி செயலாளரின் கையொப்பத்துடனான 2008.02.25ஆந் திகதி கொண்ட கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி, அந்நாள் முதல் அந்நிறுவனத்தின் பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல்கள் இடைநிறுத்தப் பட்டுள்ளமையால் மூலதனச் சந்தை கொடுக்கல் வாங்கல்களில் தொடர்பு கொள்ளவில்லை.

(ஏ) மிகப் பழைய முதலீடாகும். 1994ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட பினான்ஸ் நிறுவனத்தின் பங்களில் சந்தை விலை வீழ்ச்சியடைவிற்கு உள்ளாகியுள்ளது. இவ்வாறு விலைத் தளம்பல்கள் ஏற்படுவது பங்குச் சந்தையின் இயல்பாகும். எவ்வாறெனினும் இந்நிறுவனத்தின் பங்குகளின் விலை அதிகரித்த சந்தர்ப்பத்தில் அப்பங்குகளை விற்று மூலதன இலாபத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ) 700,560,142 ரூபாவினை முதலீடு செயது 24 நிறுவனங்களிலிருந்து எவ்வித வருமானமும் கிடைக்கவில்லை எனக் கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டில் 03 நிறுவனங்களிலிருந்து 2,003,774 ரூபா பங்கிலாபமும், நியாயமான பெறுமதியின் கீழ் கணக்கிடப்பட்டு தேறிய மூலதன இலாபமாக 10,882,168 ரூபா 06 நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கப்பெற்றது. அவ்வாறே, மேலே குறிப்பிட்டுள்ள 24 நிறுவனங்களில் 16 நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்து மூலதன இலாபம் 66,623,633 ரூபாவும் பங்கிலாபம் 8,190,462 ரூபாவும் 2014ஆம் ஆண்டின் போது கிடைக்கப் பெற்றுள்ளது.

அவ்வாறே இவ்வகையில் குறைந்த வருமானங் கொண்ட பங்குகளை மூலதன இலாபத்துடன் விற்று, அப்பணத்தினைக் கூடிய வருமானங் கொண்ட நிறுவனங்களின் பங்குகளைக் கொள்வனவு

செய்வதற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே, சபையின் பங்குச் சந்தை முதலீட்டு நிறுவனங்களின் எண்ணிக்கையை முகாமை செய்யக்கூடிய அளவில் பேணிக் கொள்வதற்கும் இயலுமாகியது.

### 4.3 நிறுவனத்தினால் மற்றும் நிறுவனத்திற்கு எதிராகக் காணப்படும் சட்டரீதியான சம்பவங்கள்

வரையறுக்கப்பட்ட சமர்வில் என்ட் கம்பனியால் சபையுடன் செய்து கொள்ளப்பட்ட முகாமைத்துவ ஒப்பந்தத்தினை மீறுதல் குறித்து அந்நிறுவனத்தினால் சபைக்கு எதிராக தொடரப்பட்ட இல 56 (98) 1 கொண்ட வழக்கு சம்பந்தமானது.

இவ்வழக்கு தொடர்பில் சபையும் விடயங்களை முன்வைத்த போதும் நீதிமன்றம் சமர்வில் நிறுவனத்திற்கு 21.9 மி.ரூபாவினைச் செலுத்தக் கட்டளையிட்டது. அதன் படி, 21.9 மி. ரூபாவினை மேற்படி சமர்வில் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டது.

எனினும், சபையினால் அத்தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட நிறுவனத்தினால் 21.9 மி.ரூபா வங்கிப் பிணையொன்று நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

சபையினால் மேல்நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு இல SC/20/2003 கொண்ட வழக்கு 2015/09/01 ஆந் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

### 4.4 கருத்து முரண்பாட்டினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள்

(அ) சபையின் ஊழியர்களின் அங்கத்துவத்தினால் எழுப்பப்பட்ட விளையாட்டுக் கழகத்திற்காக வருடாந்த 10மூ வட்டி அடிப்படையில் 3,000,000 ரூபா கடன் தொகை பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் வழங்கப்பட்டுள்ளதுடன், உரிய தவணைக்கட்டணம் உரிய விதத்தில் சபைக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

சபையின் விளையாட்டுக் கழகத்தினால் ஊழியர்களுக்கு நாளாந்தம் தேநீர் வழங்குவதற்காக மற்றும் சபையின் அலுவலகங்களைச் சுத்தஞ் செய்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளில் இருந்து அவரக்ளுக்கு வழங்கப்பட்டுள்ள மேற்படி கடன் தொகையின் தவணைக்கட்டணம் குறைக்கப்படும்.

(ஆ) சபையின் பெரும் எண்ணிக்கையிலான ஊழியர்கள் பங்குபற்றும் கருத்தரங்குகள், வைபவங்கள் மற்றும் பொது நடவடிக்கைகளின் போது மேற்கொள்ளப்பட்ட உபசார செலவினங்கள், ஊழியர் நலன்புரி நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் மற்றும் சுயதொழில் அங்கத்தவர்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தவிர ஏனைய எல்லா செலவினங்களும் சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகை அறிவித்தல்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களாகும். நாட்டில் பல்வேறு அமைப்புக்களும் நிறுவனங்களும் அவர்களுடைய வருடாந்த வைபவங்களை நடாத்தும் சந்தர்ப்பங்களில் வெளியிடும் சஞ்சிகைகளுக்கு மற்றும் பத்திரிகைகளுக்கு அறிவித்தல்களைப் பெற்றுக் கொள்வதற்காக வருடாந்தம் எம்மிடம் விண்ணப்பங்கள் பல முன்வைக்கப்படுகின்றன.

இவ்விண்ணப்பங்களில் நாங்கள் சாதாரணமாக அனுசரணை வழங்குவது எமது சபையின் செயற்பாடுகளுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாகப் பிரச்சாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான அறிவித்தல்களுக்காக மாத்திரமே. பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் சஞ்சிகைகளுக்கு நாம் பெற்றுக்கொடுக்கும் குறுகிய அறிவித்தல்களில் பணி கொள்வோர்களால் ஊழியர்களுக்காக செலுத்தப்படும் மாதாந்த பங்களிப்புத் தொகையினை தொடர்ச்சியாக செலுத்த வேண்டிய தேவை குறித்தே நாம் கட்டாயமாகக் குறிப்பிடுகின்றோம். அதன் படி, இவ்வாறு வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட 1,742,166 ரூபா செலவு சபையின் சேவைகள் குறித்து பிரச்சாரம், ஊழியர் நலன்புரி, சுயதொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் ஊழியர் ஒருவரின் தொழில்சார் அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு என்றதால் அவை வெளி நடவடிக்கைகளுக்காக வெளியார்களுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவாக தாங்களால் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புடன் இணங்கமுடியாது.

(இ) சபையின் ஊழியர்களுக்கு மேலதிக நேரத்திற்கான கொடுப்பனவு கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கவும் கைத்தொழிலில் காணப்படும் பயிற்சிக்கு இணங்கவும் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

மேலும் ஊழியர்களுக்கு வருடாந்தம் 42 விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதுவும் கைத்தொழில் பயிற்சிக்குஇணங்க மேற்றப்பட்டுள்ளது. கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் பிரகாரம் வருடத்திற்கு உள்ள விடுமுறையை 21 வரையில் சபை ஊழியர்களின் 42விடுமுறையினைக் குறைத்தல் சம்பந்தமாக இலங்கை பணி கொள்வோர்களின் சங்கத்தின் சிபாரிசினை 2014.04.01 திகதி கொண்ட கடிதத்தால் எமக்கு பெற்றுக் கொடுத்து அவ்வாறு அனுபவித்த வரப்பிரசாதத்தினைக் குறைப்பதால் ஊழியர்களிடையே தொழில்ரீதியான பிரச்சினைகள் எழக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களது சிபாரிசின் பிரதியொன்று கணக்காய்விற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

### 4.5 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

தாங்களின் கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கமுடியாது. மீளாய்வாண்டின் போது, நிலையான சொத்துக்களின் குறைப்பாடாக எவ்விதத் தொகையும் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 பணிக்குழாத்தினர் நிர்வாகம்

சபையின் ஊழியர் மதிப்பீட்டினுள் காணப்படும் வெற்றிடங்கள் ஒவ்வொரு பிரிவுகளினதும் தேவைக்கேற்ப நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் சபையின் பயிற்சியாகும். எதிர்காலத்தில் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5 கணக்கியல் செயற்பாடு மற்றும் சிறந்த நிர்வாகம்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கீழ்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| நன்மைகள் கொடுப்பனவு | பரிசீலிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சாதாரண நன்மைகள் | 93,284 |
| சுய தொழில் நன்மைகள் | 691 |
| காப்புறுதி நன்மைகள் | 2,684 |
| இருதய சத்திரசிகிச்சை நன்மைகள் | 565 |
| கண் சத்திரசிகிச்சை நன்மைகள் | 653 |
| மரண நலன்கள் | 1,075 |
| சிரம சுவ ரெக்கவரன நன்மைகள் | 2,377 |
| சிறுநீரக மாற்றுச்சிகிச்சை நன்மைகள் | 25 |
| உயர்தர மற்றும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் நன்மைகள் | 5,730 |
| | 107,084 |
| பணிக்குழாத்தினரின் வைத்தியக் கட்டணங்கள் | 7,545 |
| **மொத்தம்** | **14,629** |

இதற்கு மேலதிகமாக, பணிக்குழாத்தினரின் இறுதிக் கொடுப்பனவுகள்,பணிக்குழாத்தினரின் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வீதங்களைப் பரிசீலித்தல், வியன வீட்டுக் கடன் மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் வீட்டுக் கடன் மீளப்பெறல், வருடாந்த போனஸ் கொடுப்பனவு, பணிக்குழாத்தின் வருடாந்த விடுமுறை நாள் கொடுப்பனவுகள் ஆகியவை முன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி முன் கணக்காய்விற்கு மேலதிகமாக கீழ் காணப்படும் பின் கணக்காய்வு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

- பங்களிப்பு மற்றும் மிகை அறவீட்டு வருமான முன்னேற்ற மீளாய்வு
- காசுக்கட்டளைகள் குறித்து பரிசீலனை
- திருப்பி அனுப்பப்பட்ட நன்மைகள் குறித்து கணக்காய்வு
- வருடாந்த பொருட்பதிவேட்டுப் பரிசோதனை - 2012
- முதலீடுகள்
- பணிக்குழாத்தினரின் சீருடைச் செலவினத்தில் 5மூஇனை அறவிடுதல்
- பதுளை பிரதேச அலுவலகக் கணக்காய்வு - 2013
- காசுப்புத்தகம் குறித்து பரிசோதனை - இலங்கை வங்கி கணக்கு இல - 1839
- மேலதிகக் கட்டண வருமானங்கள்
- மேலதிக அறவீட்டு வருமானம்,மேலதிக அறவீட்டு வருமானங்களை அகற்றுதல், விட்டு விடுதல், இரத்துச் செய்தல் மற்றும் ஜர்னலில் பதிதல்
- பௌதிகப் பண நிறுவுகை

எல்லா உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## 5.2 வரவுசெலவுப் பேரேட்டு நிர்வாகம்

2013 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுக்குட்பட்ட முழு வருமானம் 16,350 மி.ரூபாவானதுடன், உண்மையான முழு வருமானம் 16,476 மி.ரூபாவாக இருந்தது. அதன் படி முழு வருமானத்தின் வித்தயாசம் 1மூஐயும் விடக் குறைவடைந்தது. அவ்வாறே வரவுசெலவுக்குட்பட்ட தொழிற்படு செலவு 1,330 மி.ரூபாவானதுடன், உண்மையான தொழிற்படு செலவினம் 1,310 மி.ரூபாவாக இருந்தது. அதன் படி முழுச் செலவினத்தின் வித்தயாசம் 1.5மூஆக இருந்தது. ஆகவே, சபையின் வரவுசெலவுப் பேரேட்டு நிர்வாகம் சிறந்த மட்டத்தில் பேணப்பட்டுள்ளமையால் தாங்களின் அவதானிப்புடன் இணங்க முடியவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

(அ) கணக்கீடு

நிறுவனத்தின் கணக்குகளை அறிக்கையிடுதல் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

(ஆ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய பணம்

2.3 இன் கீழ் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

(இ) காலத்திற்கேற்ப சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள்

ஏற்கனவே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள பிரிவுகள் கீழ்வருமாறு.

பிரிவு இல. சட்டத்தில் உளஉடக்கப்பட வேண்டிய சட்டத்திலிருந்து அகற்றப்பட வேண்டிய அல்லது சட்டத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டியவை முன்மொழியப்பட்டுள்ளது.

5(1) பிரிவு
நியமனம் செய்யப்படும் எட்டு உறுப்பினர்கள் மற்றும் அதிகாரபூர்வமாக நியமனம் செய்யப்படும் ஒரு சபையாக இருப்பதுடன் அதிகாரத்தைக் கொண்டுள்ள உத்தியோகத்தர் தொழில் ஆணையாளர் நாயகம் எனத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

16(1) (அ) உபபிரிவு
16(1) உபபிரிவிற்கு அடுத்ததாக 16(1)(அ) என்னும் உபபிரிவு உள்ளடக்கப்பட்டுள்ளது.

தொழில்தருநர் தமது ஊழியர்களுக்கான பங்களிப்பினை சாதாரண வங்கியிலிடல் மூலமாகவோ அல்லது இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாகவோ மேற்கொள்ள முடியும். எனினும் 50 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களை சேவையிலீடுபடுத்தும் சகல தொழில் தருநரினாலும்

அமைச்சரினால் வா்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கட்டளையினால் ஆணையிடப்படும் திகதியிலிருந்து அமுலாக்கம் செய்யக்கூடியவாறு இலத்திரனியல் ஊடக மூலம் மேற்கொள்ள முடியும்.

28 பிரிவு

28 ஆவது உப பிரிவிற்கு புதிதாக உபபிரிவொன்று சேர்க்கப்பட்டு பின்வரும் முறையில் வழக்கு தொடா்ந்து சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தினை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்க முடியும் எனக் குறிப்பிட்டு வழக்குத் தொடரும் செயன்முறையை எளிதாகவும் பிரயோசனமான முறையிலும் செய்து கொள்வதற்காக தற்போதைய உயர் நீதிமன்ற வழக்குத் தீர்ப்புக்கள் மூலம் வழக்கைத் தொடர்வதில் ஏற்படும் பல்வேறு தடைகளைக் குறைத்துக் கொள்வதற்காக 28(3) என்னும் உபபிரிவினை 28(1) பிரிவாகப் பெயரிடப்பட்டு நீதவான் நீதிமன்றத்தில் உறுதிப்பத்திரமொன்றினை கோவைப்படுத்தி வழக்கைத் தாக்கல் செய்து அப்பணத்தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கு இயன்ற வகையில் திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது.

37(அ) பிரிவு

ஒவ்வொரு முழு மாதத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு 1% வீதமான “மிகை அறவீடு” என்பதற்குப் பதிலாக ஒவ்வொரு முழு மாதத்திற்கும் அல்லது அதில் ஒரு பகுதிக்கு 50% வீதமான உச்சளவின் கீழ் 1% வீதமான “மிகை அறவீடு” என்ற சொல்லினைப் பதிலீடு செய்வதன் மூலம் இப்பிரிவு திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது.

37(ஆ) பிரிவு

இப்பிரிவின் மூலம் தொழில்தருநா் ஒருவர் தம்மால் சபையில் சமா்ப்பிப்பதற்கு தீா்மானிக்கப்பட்டுள்ள தவணை அறிக்கைகளை இலத்திரனியல் ஊடகங்களூடாக அனுப்புவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதில் 50 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களை கொண்டுள்ள சகல தொழில்தருநா்களும் அமைச்சரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டளைகளையின்படி குறிப்பிடப்பட்டுள்ள திகதியொன்றில் இருந்து அமுலாகும் விதத்தில் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக தமது அறிக்கைகளை மாதாந்தம் சமா்ப்பிக்க முடியும் எனத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

37(இ) பிரிவு

37(இ) பிரிவின் கீழ் புதிய உபபிரிவொன்று உள்ளடக்கப்பட்டுள்ளது. அதாவது எவராவது ஒரு தொழில்தருநா் தமக்கு கீழே பணிபுரியும் ஒருவரின் பயன்களை விண்ணப்பப் படிவத்தில் தொழில்தருநரால் பூர்த்திசெய்யப்பட வேண்டிய தகவல்களில் உள்ளடக்கப்பட வேண்டும். அவை விண்ணப்பப்படிவத்தில் பதியப்படாது விட்டுவிடக் கூடாது எனத் திருத்தமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

37(ஈ) பிரிவு

37(இ) பிரிவிற்கு அடுத்ததாக 37(இ) என்னும் பிரிவானது உள்ளடக்கப்பட்டுள்ளது. அதாவது பங்களிப்புத் தொகைக்கு உரிய தவணை அறிக்கையை வழங்கும் சட்டத்திலோ அல்லது இதனுடன் சம்பந்தப்பட்டோ நியதிகளிலோ குறிப்பிடப்பட்டுள்ளது. தொழில்தருநா் அச்சட்டத்தின் ஆணை அல்லது நியதிகளில் குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் அறிக்கையினை வழங்குவதிலிருந்து விலகினால் அல்லது தவறிழைத்தால் அல்லது பூர்த்திசெய்யப்படாத அறிக்கையை வழங்கினால் அல்லது சபையினால் தமக்கு உரித்தான பேணப்படும் சகல ஆவணங்கள் அல்லது வாய்வழிச் சான்றுகளின் அடிப்படையில் சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை மதிப்பீடு செய்வதுடன் அத்தொகையை செலுத்தாது விலகுவது தொடா்பில் அத் தொழில்தருநா் பொறுப்புக் கூற வேண்டுமென்னும் திருத்தம் சமா்ப்பிக்கப்பட்டுள்ளது.

39 பிரிவு

39 பிரிவின் மூலம் எவரேனும் தொழில்தருநா் ஒருவர் தவணை அறிக்கையினை குறிப்பிட்ட தினத்தில் சமா்ப்பிக்காதுள்ள வேளையில் நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் தண்டப்பணமானது 10,000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், 03 மாதங்களுள் அறிக்கையினை சமா்ப்பிப்பதற்கன கட்டளையினையும் நீதிமன்றம் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்ற திருத்தம் முன்வைக்கப்பட்டுள்ளது.

40(இ)1 மற்றும் (இ)2 பிரிவுகள்

40(ஆ) பிரிவிற்கு அடுத்தாக 40(இ)(1) மற்றும் (இ)(2) பிரிவுகள சேர்க்கப்பட்டுள்ளன. அதன்படி ஏதேனும் தனிப்பட்ட சபையொன்றினை மூடிவிடுவதன் காரணமாக சபைக்கு கிடைக்க வேண்டிய தொகையினை அறவிடமுடியாத சந்தர்ப்பத்தில் பங்களிப்புத் தொகை செலுத்துகையினை தவறவிட்ட காலப்பகுதியில் பதவியில் இருந்த நியதிச்சட்ட சபையின் பணிப்பாளர் ஒருவர், வணிக நிறுவனத்தின் சகல பங்காளர்களும் அல்லது தொழிற்சார் சங்கமொன்றின் சகல உத்தியோகத்தர்களும் நியதிச்சட்ட முறையற்ற தனியார் சபையின் தலைவர், செயலாளர், முகாமையாளர் மற்றும் ஏனைய எல்லா உத்தியோகத்தர்களும் செலுத்துவதற்கு தவறியமை தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டியவர்கள் எனத் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

(ஈ) முதலீடுகள்

2013ஆம் ஆண்டில் முதலீடுகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை விஞ்ச முடிந்ததுடன், அங்கத்தவர் நிலுவை மீது 10மு வட்டி மற்றும் பங்கிலாபத்தினை வெளியிட முடிந்தது. அது வரவுசெலவுக்குட்பட்ட 9.5மூஜ விட விஞ்சுவதற்கு முடிந்தது.

(உ) அங்கத்தவர் கணக்குகளைப் பேணுதல்

அங்கத்தவர் கணக்குகளைப் பேணுதல் குறித்து விசேட கவனஞ் செலுத்தி, அங்கத்தவர் கணக்கு உரிமையாளர்களுக்கு வருடாந்த கணக்குக் கூற்றுக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய பணி கொள்வோர்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மகிந்த மடிகஹேவா
தலைவர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்ப நிதியச் சபை